# உங்கள் ஊஞ்சல்

## என் கண்ணே, ஏன் கண்ணே?

பரபரப்பான பல்சுவைப் பகுதிகளுடன்

ரூ.10/-


**பட்டுக்கோட்டை பிரபாகர்**

- பி.கே.பி. - சிறப்புச் சிறுகதை
- நா. முத்துக்குமார் - பேட்டி
- ஜே. எஸ். ராகவன் - சுடிதார் மாமி



# என் கண்ணே, ஏன் கண்ணே?





பட்டுக்கோட்டை பிரபாகர்



# 1

விடிந்ததும் வெளிச்ச அருவியில் குளிக்கப் போகிற பூ தலையிலும், உடம்பிலும் இருட்டு எண்ணெய் வழிய நின்று கொண்டிருக்க... இதமாய் மசாஜ் செய்து கொண்டிருந்தது காற்று. வேடிக்கைப் பார்த்ததில் அடக்கி வைக்க முடியாமல் குலுங்கிச் சிரித்தன கடல் மைதானத்தில் கூடியிருந்த அலைகள்.

கரையை நோக்கி வந்து கொண்டிருந்த அந்தப் படகு விசைப்படகு. என்ஜின் அணைக்கப்பட்ட படகு. நீரைக் கிழிக்கிற ஓசை மட்டும் சூழ்நிலையின் அமைதியில் உரத்து ஒலித்தது.

கரைக்குப் பதினைந்தடி தள்ளி நின்று கொண்டது. படகுக்குள் ஒரு டார்ச் வெளிச்சம் உற்பத்தியாகி அங்கிருந்தபடியே கரையை நோட்டமிட்டது. வேலைக்காரி தரை கூட்டுவதைப் போல அதன் வெளிச்ச ரிப்பன் இப்படியும் அப்படியும் அலைந்தது.

பிறகு கரையில் செழித்து வளர்ந்திருந்த உயரமான புற்செடிகளுக்கு வெளிச்சம், பாய்ச்சி விட்டு, சற்றுத் தள்ளி இருந்த சவுக்குத்தோப்பு பக்கம் கொஞ்சம் இருட்டு கழுவி விட்டு... அணைந்து கொண்டது.

சில விநாடிகள் நிசப்தம். எந்த அசைவும் இல்லை. அலைகள் கரை அருகில் வந்து சோர்வாய் மனமுடைந்து கொண்டிருக்க... படகு லேசாய் அசைந்து கொண்டிருந்தது.

ஒரு நிமிட இடைவெளிக்குப் பிறகு மறுபடி வெளிச்ச வட்டம் கரை முழுக்க எதையோ தேடியது. அணைந்து கொண்டது.

இப்போது சவுக்குத் தோப்பில் நிழலசைவு. காலடி இலைகளின் முனகல்கள். தொடர்ந்து... இரண்டு உதடுகளையும் குவித்து நாயைக் கூப்பிட ஒரு சப்தம்



செய்வோமே, அந்த சப்தம் கரையிலிருந்து வந்தது.

படகிலிருந்து இறங்கினான் அவன்.

சவுக்குத் தோப்பிலிருந்து வந்தான் இவன்.

இவன் குனிந்து பாண்ட்டின் இரண்டு கால்களையும் முழங்கால் வரை ஏற்றி விட்டுக் கொண்டு, தண்ணீரில் சளக் சளக் என்று நடந்து அவனை அடைந்து தோளில் தட்டி, கை குலுக்கினான்.

"வெரிகுட் அண்ணே..."

"பாராட்டு விழா எல்லாம் அப்புறம். நேரமில்லை... சீக்கிரம் பிடி..."

இருவருமாகப் பிடித்து படகுக்குள் இருந்த ஒரு கனத்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு வந்து கரையில் வைத்தார்கள்.

பிறகு மறுபடி படகுக்குச் சென்று அடுத்த மூட்டையைத் தூக்கினார்கள். மொத்தம் 5 மூட்டைகள். பாலிதீன் சாக்கு மூட்டைகள். உள்ளே ஒரு சொட்டுத் தண்ணீர் நுழையாத மூட்டைகள்.

"என்ன கொண்டு வந்தே?"

"மினி லாரி..."

"எங்கே நிக்கிது?"

"ரோட்டோரமா இறக்கத்திலே நிறுத்தியிருக்கேன்."

"ரோட்லேர்ந்து பார்த்தா லாரி தெரியுமா?"

"சேச்சே... தெரியாது..."

"தலையிலே தூக்கி விட்டுமா, இல்லை ஒரு பக்கம் பிடிக்கட்டுமா?"

"வேணாம். தலையிலே தூக்கி விட்டாப் போதும்."

"வழியிலே நடமாட்டம் எதுவும் இருக்கா?"

"தோப்புக் காவல்காரன் குடிசை வாசல்ல லாந்தர் கவுந்ததும் தெரியாம, வேட்டி அவுந்ததும் தெரியாம, சாராயம் குடிச்சிட்டு படுத்துக் கிடக்கான்."

"சரி, இந்தா. பிடி."

தலையில் தூக்கி விடப்பட்டதும், அவன் வேகமாக தோப்புப் பக்கமாகச் சென்று மறைந்தான். படகில் வந்தவன் ஒரு பீடி பற்ற வைத்துக்

கொண்டான். போனவனுக்காகக் காத்திருந்தான்.

அவன் திரும்பி வந்து அடுத்த மூட்டை எடுத்துச் சென்றான். ஐந்தில் மூன்று மூட்டைகளைக் கொண்டு சென்று திரும்பி வந்து, ''அப்புறம்? போதுமா?''

''போதும்... ரொம்ப ஆசைப்படக் கூடாது மணி. ரெண்டு மூட்டையை தானம் செஞ்சுடலாம்.''

''ஒரு மூட்டை போதாதாண்ணே?''

''நான் சொல்றதைச் செய்டா நீ. போன் நம்பர் வச்சிருக்கியா?''

''வச்சிருக்கேன்.''

''நான் சொன்ன மாதிரியே சொல்லிடு.''

''ரைட்டு. நீ எங்கே இருப்பே?''

''தோப்புக்குள்ளே இருப்பேன். அவங்க வந்து கைப்பத்தினதும் நான் அங்கேருந்து நகருவேன். நீ சரக்கை நான் சொன்ன இடத்திலே பத்திரப்படுத்திட்டு உடைஞ்ச பாலம் பக்கத்திலே லாரியோட நில்லு. வந்து சேர்ந்துக்கறேன்.''

''சரிண்ணே...''

மணி, அண்ணனிடம் நெருப்புப் பெட்டி வாங்கிக் கொண்டு சிகரெட் பற்ற வைத்தான். புறப்படும் முன் கேட்டான்.

''எவ்வளவுண்ணே தேறும்?''

''மூட்டை ஒண்ணு கொறைச்சலா ஒண்ணரை லட்சம்...''

''அப்போ ஆளுக்கு ரெண்டே கால்! வடக்குப் பாக்கப் போயிடலாம். என்ன சொல்றே?''

''மொதல்ல திட்டப்படி எல்லாத்தையும் முடி. கல்யாணம் பண்றதுக்கு முந்தியே ரெட்டைக் கட்டில் வாங்காதே... போ...''

மணி சிகரெட்டை ஆழமாக இழுத்துக் கொண்டே நடந்தான். சேதுவாகிய இவன் இரண்டு மூட்டைகளையும் அப்படியே விட்டு விட்டு சவுக்குத் தோப்பின் முகப்பிற்கு நடந்தான்.

உயரமாய், உரமாய், அகலமாய், அழுத்தமாய் இருந்த சேது, பேண்ட்டின் இடுப்பில் டார்ச் லைட்டை



நெருக்கி கொண்டு தூரத்தில் இருந்த படகைப் பார்த்துக் கொண்டு மற்றொரு பீடி பற்ற வைத்துக் கொண்டான்.

* * * *

மணி பக்கத்து வீடு முழித்து விடக் கூடாது என்கிற ஜாக்கிரதை உணர்வோடு மிக மெதுவாக கதவைத் தட்டினான்.

நான்கு முறை தட்டியதும் உள்ளே அறுபது வாட்டின் ஒளிபரப்பு. கதவைத் திறந்து கொண்டே, ''யாரது?'' என்றாள் தலையும் உடையும் கலைந்திருந்த கனகா. கறுப்பு ஜாக்கெட்டின் கடைசி கொக்கி கழன்று கவிழ்த்துப்போட்ட 'வி'யாக முனைகள் பிரிந்திருக்க... இரண்டு கைகளாலும் கண்களைக் கசக்கிக் கொள்கையில் மணி மனம் கலங்கினான்.

''கனகா, நான் அதுக்கு வரல்லை...''

''நீயா? உள்ளே வாயேன். தபால்காரன் மாதிரி வெளியவே நிக்கிறியே... மணி என்ன? செகண்ட் ஷோ விட்டு வர்றியா?''

''கேள்வி கேட்டுக்கிட்டே இரு. என்னைப் பேச விடாதே. சேது அண்ணன் விஷயம் சொல்லலையா உன்கிட்டே?''

''என்ன விஷயம்...?''

''சரியாப் போச்... நான் சரக்கோட வந்துருக்கேன் கனகா. நீ நேரா கனகா வீட்டுக்குப் போ, நான் விவரம் சொல்லிருக்கேன்னு சொன்னாரே...''

''அதுவா? அது வெள்ளிக்கிழமை அன்னிக்கு இல்லை?''

''இன்னைக்குத் தாண்டி எழவே வெள்ளிக்கிழமை.''

''போவ், வாடி, போடின்னு மட்டும் சொல்லாதே. வெறியாப்டுவேன்.''

''காம வெறியா? நேரமில்லை இப்போ. இன்னொரு கதவையும் திற.''

மணி மூன்று மூட்டைகளையும் உள்ளே கொண்டு வந்தான். கதவைச் சாத்தினான். அங்கே இருந்த நெல் பத்தாயத்தை தட்டிப் பார்த்தான்.

''பாதி தான் இருக்கு...''

''ஸ்டூல் கொண்டா...''

ஸ்டூல் போட்டு ஏறி, பத்தாயத்தின் மேல் சதுரக் கதவைத் திறந்து வைத்தான். கனகா தூக்கிக் கொடுக்க, ஒவ்வொரு மூட்டையாக உள்ளே இறக்கினான். மூடினான்.

''வரட்டுமா?''

''நல்லா தூங்கிட்டிருந்தேன். எழுப்பிட்டே... நிசமா நோவில்லையா?'' என்றாள் உடம்பை முறுக்கிக் கொண்டு.

''இன்னிக்கு போணியாகலையா? குப்புறப் படுத்துத் தூங்கு. நாளைக்கு ராவைக்கு வர்றேன்.''

மணி வெளியே வந்தான்.

தூரத்தில் நிறுத்தியிருந்த மினி லாரியில் ஏறிக் கொண்டு ஊருக்கு வெளியே இருந்த உடைந்த பாலம் அருகே வந்து நிறுத்தினான். காத்திருந்தான்.

* * * *

சேது பீடியை மண்ணில் குத்தி அணைத்தான். கடலில் தூரத்தில் தலையில் சர்ச் லைட் தாங்கிய கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட்டின் எந்திரப் படகு தண்ணீரைக் கூறு போட்டுக் கொண்டு வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் உடம்பு முழுக்கச் சிலிர்த்தது.

சேதுவை இன்னும் விபரமாக அறிமுகப்படுத்திக் கொள்ள... அவனுடைய முப்பத்தி இரண்டு வருட வாழ்க்கையின் முன்கதைச் சுருக்கம் இதோ அடுத்த வரியில் ஆரம்பம்.

சேது பிறந்தது ஆஸ்பத்திரியிலா, வீட்டிலா இல்லை நடுக்காட்டிலா என்கிற ஜனன தகவல்கள் அவனிடம் இல்லை. 'பொறந்ததுமே அம்மாவை முழுங்கிட்ட முண்டமே!' என்று பாட்டியிடம் திட்டு வாங்கியிருக்கிறான்.

அப்பாவுக்குப் பிரதான தொழில்- கை கட்டி நிற்றல். யார் முன்னால்?

புதுப்பேட்டை ஏ.ஆர்.பி. முன்னால். யார் ஏ.ஆர்.பி.? ஏ.ஆர்.பீட்டர். ஏ ஃபார் தாத்தா ஆண்டனி.



ஆர் ஃபார் அப்பா ரொஸாரியோ.

புதுப்பேட்டை- கடல் கொண்ட ஊர். சத்தம் போட்டுப் பேசினால் தஞ்சாவூரில் கேட்கும். பரம்பரை பணக்காரன் யார்? ஏ.ஆர்.பி! போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் எல்லாம் இருந்தும் நியாயம் கேட்க, யாரிடம் வருகிறார்கள்? ஏ.ஆர்.பி! ஊரின் முக்கியத் தொழில்கள் மூன்று. அவையாவன: 1. அரசாங்கம் நடத்தும் உப்புத் தொழிற்சாலை. 2. மீன் பிடித்தல். 3. கள்ளக் கடத்தல்.

புதுப்பேட்டையில் டூப்ளிகேட்டே கிடையாது. செருப்பில் இருந்து செண்ட் வரை ஒரிஜினல் மயமாய். ஒரிஜினல் யார்ட்லி. ஏ.ஆர்.பி.க்கு கொஞ்சம் தென்னை, கொஞ்சம் வாழை, கொஞ்சம் மல்லிகைத் தோட்டம், கொஞ்சம் காலனி வீடுகள், கொஞ்சம் லாஞ்ச் எனப்படும் மோட்டார் படகுகள், கொஞ்சம் அடியாட்கள், கொஞ்சம் வைப்பாட்டிகள் என்று சொத்துக்கள்.

ஆனால் ஏ.ஆர்.பி. ஒரு மைதாஸ். இந்த சொத்து போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமே... என்று மனதிற்குள் சதா கோஷம். அதனால் தன் முகத்திற்குப் பின்னால் இன்னொரு முகம் வளர்த்து வைத்திருந்தான். இந்த முகத்தோடு பஞ்சாயத்து. அந்த முகத்தோடு கடத்தல்.

மற்றொரு முகம் அறிந்தவர்களில் ஒருவன் சேதுவின் அப்பன். அவன் இறந்ததும் வாரிசை அந்த இடத்தில் வைத்துக் கொண்டான் ஏ.ஆர்.பி.

வாரிசான சேதுவுக்கு ஒரே ஒரு பெண்டாட்டி. திலகவதி- இட்ட பெயர். திலகம்மா- சேதுவின் அழைப்புப் பெயர். திலகவதிக்கு மதமதவென்று அப்படி ஒரு உடம்பு. வீட்டைக் கடந்து போகும்போது மீசை முளைத்தவன் ஒருத்தன் பாக்கியில்லாமல் தாகமே இல்லாத போதும் தண்ணீர் கேட்டுக் குடித்து விட்டு, பார்க்க வேண்டியதைப் பக்கமாய் நின்று பார்த்துவிட்டுப் போவது- பல் தேய்த்தல் போல ஒரு தினக்காரியமாயிருந்த ஒரு காலகட்டத்தில்...

ஒரு சுபயோக சுபதினத்தில் திலகவதியைக்

காணவில்லை.

சேது அங்கே இங்கே தேடினான். போலீசில் ரைட்டர் எழுதின கம்ப்ளைண்ட்டில் இடது கை பெருவிரல் பதித்தான். புலம்பினான். அழுதான். திலகவதி யாரையோ இழுத்துக் கொண்டு ஓடி விட்டாள் என்று யூகம் சொன்ன ஒருத்தனை உதடு கிழியும் வரை அடித்தான். சாராயம் குடித்தான். சாலையில் மயங்கி அண்ட்ராயருடன் கிடந்தான். 'குடிக்காதேய்யா, உடம்பு கெட்டுப் போயிடும்' என்று கனகா அணைத்துக் கொண்டு சொன்னபோது கொஞ்சம் இதமாய் இருந்தது.

அப்புறம் அந்த இதம் அடிக்கடி தேவைப்பட்டது.

சேது ஒரு எல்லையில் திலகவதி ஒரு சண்டாளி என்று தீர்மானமே போட்டு விட்ட போதுதான் மணியுடன் நெருக்கம் அதிகரித்தது.

மணி- மற்றொரு சகா. ஏ.ஆர்.பி.யின் மந்தையில் மற்றொரு ம்மேமே... சதா கெட்ட ஜோக். பிரசித்தி பெற்ற ஊறுகாய் கதை ஒன்று பார்ப்பவரிடத்தில் எல்லாம் சொல்வான். புத்தம் சரணம் கச்சாமி என்று சொல்லச் சொன்னால் புத்தம், சரணம், கஞ்சாமி என்பான். ஒரு நாளைக்கு கஞ்சா இல்லையெனில் தவித்துப் போய் விடுவான். ஏ.ஆர்.பி.யின் நம்பகமான உள் வட்டத்து உறுப்பினன்.

சேதுவுடன் ஒரு இது ஏற்பட்டு அதற்கப்புறம் இருவரும் ஒரே தீக்குச்சியில் பீடி பற்ற வைத்துக் கொண்டு, ஒரே கிளாசில் சாராயம் குடித்து, ஒரே கனகாவை...

ஏற்பட்ட இண்டிமஸியில்... போன வாரம் சேதுவிடம்...

''அண்ணே, உங்கிட்ட ஒரு ரகசியம் சொல்லணும்...''

''என்னடா?''

''சொன்னா நீ என்ன சொல்லுவியோன்னு பயமா இருக்கு...''

''சும்மா சொல்லு...''

''உன் பொண்டாட்டி ஓடிப் போகலை.''



''பின்னே?''

''செத்துப் போய்ட்டா...''

''என்னடா சொல்றே?''

''சரியாச் சொல்லணும்னா சாகடிக்கப்பட்டா...''

''டேய்!''

''பொறுமையாக் கேளுண்ணே. நம்ம ஏ.ஆர்.பி. பத்திதான் உனக்குத் தெரியுமே. காவலுக்குக் கூட பொம்பளை நாயைத்தானே வாங்கி வச்சிருக்காரு... உன் பொண்டாட்டி மேல குறி வச்சி... அவரோட சொந்த போட்டுக்குத் தூக்கிட்டு வரச் சொல்லி... நடுக்கடல்ல நிறுத்தி... கதறக் கதற அனுபவிச்சிட்டு, கல்லைக் கட்டி கடல்ல போட்டுட்டாரு... கூடப் போனதும், தூக்கிட்டுப் போனதும் நம்ம சேடப்பன். போதையிலே ஒரு நாள் என்கிட்டே சொன்னான்...''

சேதுவின் மனதில் ஸ்பெஷல் எஃபெக்டில் கடல்கள் கொந்தளித்தன. புயல் அடித்தது. மரங்கள் விழுந்தன. எரிமலை வெடித்து நெருப்பு ஆறு ஓடியது.

சேது கோபக்கார ஜாதி. கொஞ்சம் நகர்ந்து நில்லுப்பா என்று தோளில் எவனாவது கை வைத்தாலே, பட்டன் கத்தியை விரித்துக் கொள்கிற ஜாதி.

திலகவதி மேல் எம்புட்டு பிரியம் வைத்திருந்தான்! குட்டி போட்ட பூனையாய்ச் சுற்றிச் சுற்றி வந்தாளே... என் கண்ணு, என் செல்லம், என் வெல்லம் என்று குழந்தையைப் போல கொஞ்சினாளே... அந்தத் திலகாவை... ராஸ்கல்ஸ்!

இனி பொறுப்பதில்லை என்று கொதித்தான் சேது. தொட்ட கையை வெட்டுகிறேன் என்று சபதம் எடுக்கப் போனவனைத் தடுத்தான் மணி.

''அண்ணே, அதனால என்ன லாபம்? போன உன் பொண்டாட்டி திரும்பி வந்து மச்சான்ங்கப் போகுதா? கொல்றதும், வெட்டறதும் ஒரு நிமிஷ வேலை. அதுவா பெரிசு? அவனை ஆட்டிப் படைக்கணும். என்னடா கட்சி மாறிப் பேசறேனேன்னு பாக்கறியா? இவன் கிட்டேர்ந்து எப்படா விலகுவோம்னு தான் நான் இருக்கேன். எனக்குப் பிடிக்கலை. மும்பாய்ல

இருக்கா என் முறைப் பொண்ணு. சரளான்னு பேரு. கொஞ்சம் பணத்தோட வாய்யா. பர்மனன்டா படுத்துக்கலாம்னு சொல்றா. குடும்பத்ல செட்டில் ஆகிடலாம்னு முடிவு பண்ணிட்டேன். உனக்குப் பழி வாங்கணும். எனக்குப் பணம் வாங்கணும். சேர்ந்து இப்படிச் செஞ்சா என்ன?''

''எப்படி?''

''நிறையத் தண்ணி இருக்கிறதாலதானே குடம் துள்ளுது. தளும்புது. தண்ணியைக் கொஞ்சம் கொஞ்சமாக் குறைச்சிட்டா?''

''புரியலை.''

''ஏ.ஆர்.பி.யோட பலம் பணம். அதைப் பிடுங்கிடலாம் முதல்ல...''

தீவிரமாக யோசித்து, முடிவெடுத்து, திட்டத்தை வடிவமைத்து.. இதோ ஃப்ளாஷ்பேக் முடிந்து சேது மறுபடி பிடியை மண்ணில் குத்தி அணைக்கிறான். கடலில் தூரத்தில் தலையில் சர்ச் லைட் தாங்கிய கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட்டின் எந்திரப் படகு தண்ணீரைக் கூறு போட்டுக் கொண்டு வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் உடம்பு முழுக்க சிலிர்க்கிறது.

அந்தப் படகு நெருங்க... நெருங்க சேதுவின் இதயத் துடிப்பு ரேஸ் விட்டது. சேது நிறுத்தி வைத்த படகை அடையாளம் கண்டு கொண்ட கஸ்டம்ஸ் படகு நேராக அதைக் குறி வைத்து வர ஆரம்பித்ததும்...

சேது சாலையை நோக்கி ஓடினான். தோப்பின் உள் வழிகளில் அதிக ஓசை எழாமல் ஓடி, சாலைக்கு வந்து... மறுபடி ஓடி... உடைந்த பாலத்திற்கு வந்து அங்கே காத்திருந்த மினி லாரியில் ஏறிக் கொண்டு மூச்சு விட்டான்.

''என்னாச்சு அண்ணே?''

''முதல்ல ஸ்டார்ட் பண்ணுடா. உன் போனை அலட்சியம் பண்ணாம வந்துட்டாங்க. இந்நேரம் ரெண்டு மூட்டையையும் கைப்பத்தியிருப்பாங்க. ஏ.ஆர்.பி.க்கு இதான்டா ஆரம்ப வேட்டு. அங்கே



போலப் பேச வேண்டிய கதை, வசனம் ஞாபகம் இருக்கா?''

''புரிஞ்சு வெளாண்டுடலாம்...''

''நான் சொன்ன எடத்தில பத்திரப்படுத்துனியா?''

''ஆமாம்...''

* * * *

ஏ.ஆர்.பி.யின் மல்லிகைத் தோட்டத்தில் ஒரு ரெஸ்ட் ஹவுஸ். வாசலில் மாருதி கார். இரண்டு சேம்பேரிகள். மூன்று நாய். உள்ளே பெரிய ஹால். மாடி. பெரிய ரூம். கட்டில். நேர் மேலே ரசம் பூசின கண்ணாடி. அதில் முழுக்க அவிழ்த்திருந்த அவளிடம் இடம், வலம் மாறிய ஏ.ஆர்.பி. மொச்சு மொச்சு என்று இன்ச் பாக்கியில்லாமல் முத்தம் கொடுத்துக் கொண்டிருந்தவன்- ங்ஙீ, ங்ஙீ, ங்ஙீ -புரண்டு...

இண்டர்காமை எரிச்சலாய் எடுத்தான்.

''சேதுவும் மணியும் வந்திருக்காங்க... அவசரமா உங்களைப் பார்க்கணுமாம். போன காரியம் தோல்வி.''

''என்ன, தோல்வியா? அள்ளிக் கட்டிக்கிட்டு சொல்லுடி மூதேவி! உன்னை இல்லைய்யா, இதோ வர்றேன்.''

ஏ.ஆர்.பி. உடை அணிந்து கீழே வந்தான்.

கை கட்டி நின்றிருந்தார்கள் சேதுவும், மணியும்.

''என்னடா ஆச்சு?''

''கஸ்டம்ஸ்ல மாட்டிட்டோங்க. நம்ம போட்டை விடாம துரத்திக்கிட்டு வந்தாங்க. நாங்க மாட்டிக்காம தப்பிச்சி வந்ததே பெரிய விஷயமாய்டுச்சிங்க...''

''சரக்கு?''

''மாட்டிக்கிச்சிங்க. அசரப் அலி சவுக்குத்தோப்பு பக்கமா போட்டோட போட்டுட்டு ஓடி வந்துட்டோம்...''

''பாவிங்களா, எட்டு லட்சம்டா கிட்டத்தட்ட''

''நாங்க என்னங்க செய்யட்டும்? இத்தனை வருஷ சர்வீஸ்ல இப்படி நான் கோட்டை விட்டதே இல்லைங்க. இதுக்காகவே ரெண்டு எஞ்சின் வெச்சிருந்தோம். ஒண்ணு காலை வாரிடுச்ச வேலை செய்யாம. போட்டும் போய்டுச்சிங்களே...''

''போட்டை வாங்கிடலாம்ய்யா. அது ஒண்ணும் பிரமாதமில்லை...'' என்ற ஏ.ஆர்.பி. பக்கத்தில் ''இன்ஸ்பெக்டர் நின்றவனை,
முழிச்சிட்டிருக்காரான்னு பாரு...'' என்றான்.

கட்டம் போட்ட சட்டை போட்ட அவன் போன் எடுத்துச் சுழற்றி, ''ஒரு நிமிஷங்க. ஏ.ஆர்.பி. அய்யா பேசணும்னாரு'' என்று ரிசீவரைத் தர...

வாங்கி, ''இன்ஸ்பெக்டரா? தொந்தரவா? ஒண்ணுமில்லை. நேத்து காலையிலேர்ந்து நம்ம போட் ஒண்ணு காணலை. நாமே தேடிப் பார்த்துட்டு அப்புறம் சொல்லலாம்னுதான் சொல்லலை. போட் பேரு 'வல்லவன்'. புகார் எழுதிக்கிட்டு காலைல முயற்சி பண்றீங்களா? புகார்ல நேத்து தேதியே போட்டுடுங்க. வர்ற ஞாயிற்றுக்கிழமை ஃப்ரீன்னா உங்களுக்கு நம்ம ரெஸ்ட் ஹவுஸ்ல ஒரு சல்யூட் தரலாம்னு பார்க்கறேன். சாதாரண சல்யூட் இல்லை, ராயல் சல்யூட்! அப்ப... வர்றீங்க? சந்தோஷம்!'' என்று வைத்து...

சேதுவையும், மணியையும் பார்த்து...

''என் கண்ணு முன்னாடி நிக்காதீங்கடா, நாய்ங்களா!'' என்று குலைத்தான் ஏ.ஆர்.பி.

வெளியே வந்த சேது, மணியின் கையைக் குலுக்கி, ''இதுதான் ஆரம்பம்'' என்றான். கதை படமாகும் போது இந்த இடத்தில்தான் டைட்டில்-எழுபது வயலின்களின் பி.ஜி.எம்முடன்.



## 2

**கா**ரைக்குடி.

அரசாங்க ஆஸ்பத்திரி. வாசலில் சைக்கிள்கள். எம்டி பாட்டில் வியாபாரி. கொசுக்கள்.

டாக்டர் பாரதி நன் சிந்தி வீட்டிற்குப் புறப்படும் முன்னர் தனது மகப்பேறு பிரிவில் ஒரு ரவுண்ட் வந்தாள். பெண்கள் மேடாகப் போர்த்திக் கொண்டு,



சைடில் படுத்து குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டு, ஸ்ரீராமஜெயம் எழுதிக் கொண்டு, கூட வந்தவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் அழுது கொண்டிருந்தன.

பாரதி சிவப்பு. சின்னதாகக் கொண்டையிட்டிருந்தாள். பாரதி வனப்பு. வெள்ளைக் கோட்டில் ஸ்டெத் நீட்டிக் கொண்டிருந்தது. பாரதி சின்னப்பூ. லேசாக லிப்ஸ்டிக் போட்ட உதடுகளில் சதா புன்னகை. ஒற்றைச் செயின். ஸ்டிக்கர் பொட்டு. காதில் வளையங்கள். கறுப்பு லெதர் ஸ்ட்ராப் போட்ட வாட்ச். சத்யம், சிவம், சுந்தரம்.

''சிஸ்டர், இவங்களுக்கு மெட்ரோஜில் - ஐ.வி. போட்டுடலாம். உனக்கெப்படிம்மா இருக்கு வலி? தையல போட்டுருக்கில்லே? வலிக்கத்தான் செய்யும். கொஞ்சம் பொறுத்துக்க. என்ன மாரியம்மா, உன் புருஷன் வந்து பார்க்கலையா குழந்தையை? சீச்சி, ஏன் அழுவறே? பொம்பளைப் பிள்ளைன்னா கேவலமா? ரேடியத்தைக் கண்டு பிடிச்ச மேரி க்யூரி பொம்பளைதான். இந்திரா காந்தி நாட்டையே ஆளலையா? தைரியமா இரு. டேய், சுட்டிப் பயலே, சிரிக்கிறான் பாரு. கைக்குள்ள என்னடா வச்சிருக்கே? ஒண்ணுக்கு போயிருக்கான். பாரும்மா யசோதா, அப்புறம் உன் பேரென்ன வளர்மதிதானே. உனக்கு வந்தது பொய் வலிதான். எப்படியும் டெலிவரிக்கு ஒரு வாரம் ஆகும். வீட்டுக்குப் போயிட்டு வலி வர்றப்போ வந்தா போதும்மா. சிஸ்டர், நான் வீட்டுக்குப் போறேன்.''

பாரதி வராந்தாவில் நடந்தாள். பினாயில் போட்டு துணி சுற்றின குச்சியால் மொழுகிக் கொண்டிருந்தார்கள். ஸ்டாஃப் ரூமுக்கு வந்து கோட்டைக் கழற்றி வைத்து விட்டு நைட் டூட்டி டாக்டர் பன்னீர் செல்வம் படித்துக் கொண்டிருந்த ஆங்கில நாவலின் அட்டையில் பெயர் படித்தாள்.

''நல்லா இருக்கும் டாக்டர் இந்த நாவல். எத்தனை பக்கம் வந்திருக்கீங்க?''

"இப்பத்தான் நூத்தி பத்து பக்கம் வந்திருக்கேன்."

"இருநூறு பக்கத்துக்கு மேலே ரொம்ப பிரமாதமாப் போகும்."

"புறப்பட்டாச்சா?"

"சாப்டுட்டு மறுபடி வரணும். புதுவயல்ல தூக்கு மாட்டிக்கிட்ட கேசு ஒண்ணு கொண்டாந்து போட்ருக்காங்க... உடனே போஸ்ட் மார்ட்டம் பண்ணிட்டா தேவலாம்னாரு இன்ஸ்பெக்டர். சாப்டுட்டு வந்துடறேன்னு சொன்னேன். வரட்டுமா?"

"வாங்க..."

பாரதி ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தாள். நாடா விளக்கொளி வியாபாரத்தில் பேரம் பேசாமல் வெண்டைக்காயும், தக்காளியும் வாங்கிக் கொண்டாள். அருகே போஸ்டரில் நாளைக்கு மாலை கால் பந்தாட்டத்தில் எந்த எந்த ஊர்கள் என்று பார்த்தாள். நடந்தாள்.

வழியில் கெடிகாரக் கம்பெனி ஏறி, "அந்த டைம்பீஸ் இன்னும் ரிப்பேர் பண்ணலையா?" என்று கேட்டு விட்டு வீட்டுக்கு வந்தாள்.

சித்தியின் பெண் குப்புறப்படுத்து புதிதாக பூஜை போடப்பட்ட படங்களின் விபரங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, சித்தப்பா டி.வி.பார்த்துக் கொண்டே உப்புமா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"பாரதி, உன்னைப் பார்க்க யாரோ வந்தாங்கம்மா" என்றாள் சித்தி அவள் தட்டில் சாதம் சரித்துக் கொண்டு. மூன்று கல் மூக்குத்தி. இடுப்பில் டிராக்டர் டயர்.

"யாரு?"

"கனகசபைன்னு சொன்னாரு. புதுவயலாம்."

"தெரியலை. வேற என்ன சொன்னாரு?"

"இன்னும் வரலைன்னதும், கொஞ்ச நேரம் கழிச்ச வர்றேன்னாரு."

"வரட்டும். கேட் சாவி எடுத்துட்டுப் போறேன் சித்தி. மறுபடி ஆஸ்பத்திரி போகணும். வேலை இருக்கு."



"இன்னிக்கு அம்மா லெட்டர் போட்ருந்தா போலிருக்கு?"

"ஆமாம்... எப்ப டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வரப்போறேன்னு எழுதியிருக்கா. நான் என்னவோ வேணாம்னு சொல்றமாதிரி."

"நீ ஏன் வேணாம்னா சொல்லப் போறே. அம்மாவுக்காக இல்லாட்டாலும் அத்தானுக்காகவாவது நீ முயற்சி பண்ணாம இருப்பியா?"

"அடப் போங்க சித்தி. இருபத்தெட்டு வயசுல வெக்கப்படக் கூட பயிற்சி வேணும் போலிருக்கு. முயற்சி என்ன முயற்சி? என் சொந்த மாவட்டத்துக்கு டிரான்ஸ்ஃபர் கிடைச்சா சௌகரியம்னு ஒரு அப்ளிகேஷன் போட்டு வச்சிருக்கேன். அவ்வளவுதான்."

"அது போதுமா?"

"வேற என்ன செய்யச் சொல்றீங்க?"

"யாரையாச்சும் சிபாரிசு பிடிச்சி..."

"சித்தி!" என்றாள் குரல் உயர்த்தி. "நான் கணபதிராம் பொண்ணுங்கறதை மறந்துடாதிங்க. அப்பா நினைச்சிருந்தா, அவருக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி கோடீஸ்வரர் ஆகியிருப்பாரு. ஒரு டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் பதவிங்கிறது இன்னைக்கு காமதேனு பசுமாதிரி ஆய்டுச்சி. தியேட்டர் லைசென்ஸ், ரோடு காண்ட்ராக்ட், ரைஸ் மூவ்மெண்ட்டுன்னு ஆயிரம் வழிகள்ல பையை நிறைச்சிக்கிறாங்க. சொந்த விஷயம்னா அப்பா கவர்ன்மெண்ட் காரைத் தொட மாட்டாரு. ஒரு பைசா லஞ்சம்னு வாங்கினதில்லை. ரூல்னா ரூல்தான். சட்டத்தை மீறி ஒரு ஸ்டெப் எடுக்க மாட்டாரு. மறந்துட்டிங்களா, இவர் நேர்மையா இருந்ததாலே ஏழு தடவை பதவி மாத்தினாங்க. கடைசி வரைக்கும் மாறலையே? எனக்கு எம்.பி.பி.எஸ். சீட் வேணும்ங்கிற சந்தர்ப்பத்திலே கூட அம்மாகிட்டே 'உன் பொண்ணை எல்லாரையும் மாதிரி அப்ளிகேஷன் போடச் சொல்லு. தகுதி

இருந்தா செலக்ட் ஆவா'ன்னு ஆணியடிச்ச மாதிரி சொல்லிட்டாரு. இதையெல்லாம் விடுங்க சித்தி.... ஃபர்ஸ்ட் ஹார்ட் அட்டாக் வந்ததுமே தான் பாங்கல, வெளியிலே வாங்கியிருந்த கடனை எல்லாம் அடைச்சார். உயில் எழுதினார், என்னைக் கூப்புட்டு பக்கத்திலே உக்காத்தி வச்சி, 'பாரதி, உனக்கு பாரதின்னு அழகுக்காக பேர் வைக்கலைம்மா. அந்த மகாகவி மேல எனக்கிருந்த அபிமானத்துலதான் வெச்சேன். சிறுமையும் கொடுமையும் எங்கே நடந்தாலும் பாரதி கோபப்பட்டான். கொதிச்சுப் போனான். சொந்த லாபம் என்ன பார்த்தான்? நீதி. நேர்மை, நியாயம்னு ஒரு தார்மீக சிந்தனை வச்சிருந்தான். என்னோட லட்சிய மனிதன்ம்மா அவன். என்னால முடிஞ்ச வரைக்கும் நான் நேர்மை தவறாம வாழ்ந்துட்டேன். உனக்கும் அதான் சொல்றேன். பணமோ, புகழோ, பாசமோ எதுவுமே உன்னை வளைச்சிடக் கூடாது. நீ செய்ற தொழில்ல நேர்மையை கடைசி வரைக்கும் கடைபிடி'ன்னாரு. இன்னிக்கு சொன்ன மாதிரி இருக்கு. என்னைப் பார்த்து சிபாரிசு பிடிக்கச் சொல்றிங்களா?''

''என்னடி இது, ஒரு வார்த்தை சொன்னதுக்கு இவ்வளவு வியாக்யானம் பண்றே? உன்னை மாதிரி, உங்கப்பா மாதிரி ஆசாமிகளுக்கு இன்னிக்கு ஏமாளிப்பட்டம்தான் கிடைக்கும்.''

''கிடைச்சிட்டுப் போகட்டும்.''

''நாட்ல எந்த காரியம் லஞ்சமோ, சிபாரிசோ இல்லாம நடக்குது?''

''எனக்கு அப்படி காரியம் ஆகணும்னு அவசியம் இல்லை. உங்க வீட்ல நான் தங்கியிருக்கிறது பாரமா இருந்தா சொல்லுங்க. நாளைக்கே நான் லேடீஸ் ஹாஸ்டலுக்குப் போய்டறேன்.''

பாரதி பாதி சாப்பாட்டில் எழுந்து கை கழுவிக் கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்தாள். சித்தி மோவாயில் தோளில் நொடித்துக் கொண்டு பின் பக்கம் போனாள். பாரதி தனியறையில் கண்ணாடி முன் நின்று தலையை மேலாக வாரிக்




வேளை. போது, வாசலில் குரல் கேட்டது.

''டீச்சரம்மா இருக்காங்களா?''

''பாரதி, யாரோ பார்க்க வந்திருக்காங்க'' என்றார் சித்தப்பா.

பாரதி வெளிப்பட்டு வாசலுக்கு வந்தாள். கக்கத்தில் கைப்பையுடன் ஜிப்பா போட்ட அந்த மனிதர், ''வணக்கம்மா, என் பேரு கனகசபை, புதுவயலேர்ந்து வர்றேன். கொஞ்சம் உங்கக்கிட்டே தனியா பேசணும்.''

வீட்டின் வாசலில் ஒரு சின்ன காய்கறித் தோட்டம். கொஞ்சம் வெற்று வெளி. ''ஒரு நிமிஷம்'' என்று சொல்லி இரண்டு நாற்காலிகளைக் கொண்டு வந்து அங்கே போட்டு, ஒன்றில் அமர்ந்து, மற்றொன்றில் அமரச் சொல்லி, ''என்ன சொல்லுங்க?'' என்றாள் பாரதி.

''அது வந்து... ஒண்ணுமில்லை. நீங்க கொஞ்சம் தயவு பண்ணணும்.''

கனகசபையின் விரலில் வைரம் மின்னியது. உதட்டில் பல் வரிசை சுமாராக போட்டி போட்டது. உடம்பு நாற்காலியில் காந்தாலக்ஸ் சாப்பிட்டதாய் நெரிந்தது.

''நான் ஹாஸ்பிடல் போகணும். கொஞ்சம் சீக்கிரம், தெளிவா சொல்லுங்க.''

''நான் இன்ஸ்பெக்டர் அய்யாகிட்டேயே கேட்டேன். முயற்சி பண்ணிப் பாருங்கன்னு சொன்னாரு. அதான் வந்தேன்.''

''எதுவும் புரியலை எனக்கு.''

''தங்கராசு நம்ம பங்காளிதான். கொஞ்சம் முன் விரோதம். நம்ம பையன் ரொம்ப துடுக்கு. கொஞ்சம் பட்டை சாராயம் வேற அடிச்சிருந்தான் நேத்து. தங்கராசு, ஆயி அம்மான்னு வாய்க்கு வந்ததை எல்லாம் பேசிருக்கான். இவனுக்குத் தாங்கலை. பாஞ்சி குரல்வளையைப் பிடிச்சிருக்கான். பாவிப்பய, செத்துத் தொலைச்சிட்டான்.''

''இருங்க. இதையெல்லாம் ஏன் என்கிட்டே சொல்றீங்க?''

"சொச்சத்தையும் கேட்டுடுங்க. நயினா, இதுமாதிரி ஆயிடுச்சின்னு என்கிட்டே வந்தான். தங்கராசுக்கு அல்பாயுசுடா. அதுக்கு நீ என்ன பண்ணுவேன்னு கேட்டேன். அப்புறம் ஒரு கயிறு கட்டி அதில தொங்க விட்டு தற்கொலை மாதிரி ஒரு செட்டப் நடந்து போச்சு."

"மை காட்!"

"நாம மனுஷங்களைப் பார்த்து செய்ய வேண்டிய காரியத்துக்கு அவரை எதுக்குங்க கூப்பிடறீங்க? இப்போ, அந்த தங்கராசோட பிரேதத்தைதான் நீங்க போஸ்ட் மார்ட்டம் பண்ணி ரிப்போர்ட் எழுதப் போறீங்க."

"போலீஸ் உங்க பையனை அரெஸ்ட் பண்ணியிருக்கா?"

"இவனுங்க சண்டை போட்டதை ரெண்டு பெத்துப் பசங்க பார்த்துட்டானுங்க. அதை வச்சி சந்தேகம்னுட்டு அரெஸ்ட் பண்ணி உள்ளாற வச்சிருக்காங்க. ஸ்டேஷன் லாக்கப்புலதான். ரிமாண்ட்ல இல்லை. இப்போ டாக்டரம்மாதான் மனசு வைக்கணும்."

"எதுக்கு?"

"ரிப்போர்ட்டை நமக்கு சாதகமா எழுதறதுக்குதான். ரெக்கார்டு உறுதியா இருந்தா போதுமே. சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் பார்த்திடுவேனுங்க..."

"எந்திரிய்யா முதல்ல!" என்றாள் பளிச்சென்று.

"அம்மா, பொறுமையா பேசுங்க."

"ஒரு கொலையை தற்கொலைன்னு கூசாம மாத்தச் சொல்றீங்களே, வெக்கமா இல்லை உங்களுக்கு? எனக்கு கோபம் அதிகமானா என்ன செய்வேன்னே தெரியாது. போய்டுங்க முதல்ல..."

"டாக்டரம்மா, என்ன எதிர்பார்க்கிறீங்கன்னு சொல்லுங்க. செஞ்சிடலாம்."

"போய் உங்க பிள்ளைய கொலையை ஒத்துக்கச் சொல்லுங்க."

"வாழ வேண்டிய பையன்ம்மா இவன்."



"தூக்குல சாக வேண்டிய பையனா?"

"அடுத்த மாசம் கல்யாணம் வேற வெச்சிருக்கேன்."

"நல்ல வேளை - கல்யாணத்துக்கப்புறம் நடக்கலையேன்னு சந்தோஷப்படுங்க."

கனகசபை தன் கைப்பையைத் திறந்து, உள்ளிருந்த வைர அட்டிகை வெளியில் எடுத்து, "இது என் பொண்டாட்டியோடது. எழுபது ரூபா ஆச்சி, கல்லை கைல வாங்கிப் பாருங்க டாக்டரம்மா..."

பாரதி எழுந்து கொண்டாள்.

"இப்போ நீங்க இடத்தைக் காலி பண்ணலைன்னா, நான் போலீசைக் கூப்பிட வேண்டியதா வரும். போங்க. என்னை விலைக்கு வாங்க முடியாது. உண்மையை உயிரே போனாலும் உண்மையைத்தான் சொல்வேன். எது முறையோ, எது சட்டமோ அப்படித்தான் நடப்பேன்."

விருட்டென்று உள்ளே வந்தாள் பாரதி. கனகசபை நெக்லஸை உள்ளே வைத்து ஜிப்பை இழுத்துக் கொண்டு எழுந்து வெளியேறினார்.

உள்ளே வந்த பாரதி தன் அறைக்குச் சென்று வியர்வை ஒற்றிக் கொண்டு கைப்பை எடுத்துக் கொண்டு வெளியே வந்த போது சித்தப்பா எழுந்து டி.வி.யை அணைத்து விட்டு, "பாரதி, நீங்க பேசிக்கிட்டதைக் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். கொலைங்கிறது கதையிலேயும் சினிமாவுலேயும் தான் பெரிய விஷயம். இப்போ நாட்ல அது சர்வ சாதாரணமா ஆய்டுச்சி. யாரைக் கேட்டாலும் எங்க தெருவுல ஒரு கொலை நடந்திருக்குன்னு நிச்சயம் சொல்வாங்க. எல்லா கொலையும் ரெக்கார்ட் ஆகுதா? எல்லா கொலைகாரங்களும் மாட்டிக்கிறாங்களா? சட்டத்தை செயலாக்குற போலீஸ், நீதிமன்றம் இதிலே எதாச்சும் ஒரு கட்டத்திலே பணத்தால விலைக்கு வாங்கிடறாங்க. ஒண்ணும் வேணாம். இந்தாளையே எடுத்துக்க. இப்போ எழுபதாயிரம் ரூபா நெக்லசை தர்றேங்கறான். நீ உதவ மாட்டேன்னுட்டே. இவன் ஓய்ஞ்சுடுவானா? அடுத்த

லெவல்ல. இதை விட அதிகமா கொடுத்து எப்படியாச்சும் கேசை திசை திருப்பிடுவான். என்ன பந்தயம் கட்றே?"

"உங்ககிட்டே பந்தயம் கட்ட எனக்கு நேரமில்லை. இப்ப என்ன சொல்ல வர்றீங்க? அதைச் சொல்லுங்க சித்தப்பா."

"அப்பட்டமா ஒரு கொலையை மூடி மறைக்க முயற்சி நடக்குது. இது ரொம்ப அநியாயம்தான். நீ ஒருத்தி நேர்மையா இருக்கிறதாலே இந்த அநியாயம் நடக்காம இருக்கப் போகுதா? உன் நேர்மையாலே உனக்கு நஷ்டம் தானேயொழிய லாபம் இல்லை."

கைகளைக் கட்டிக் கொண்டு "அப்புறம்?" என்றாள்.

"ஊரோட ஒத்துப் போனா என்ன தப்புன்னு கேக்கறேன். பிரதமர் லெவல்லேயே ஊழல் புகார் வருது. கொஞ்ச நஞ்சமில்லை. கோடிக் கணக்கில! ஊழலை அம்பலப்படுத்தறதுக்காகவே ஒரு டஜன் பத்திரிகை வந்தாச்சு. ஒவ்வொரு பக்கத்திலேயும் அம்பத்தி ரெண்டு கோடி ஊழல், நாப்பது கோடி ஊழல்னு. எல்லாம் கோடிக்கணக்கிலேதான். நீ மட்டும் நேர்மை, நீதின்னு நிக்கிறதிலே என்ன சாதிக்கப் போறே?"

"பேசிட்டீங்களா, இன்னும் இருக்கா?"

"எழுபதாயிரத்தைக் கோட்டை விட்டுட்டு நிக்கிறியேங்கிற ஆதங்கம்தான். வேறென்ன?"

"சித்தப்பா, பணம்தான் பெருசன்னா, ஒரு பொண்ணு. அதிலயும் ஒரு அழகான பொண்ணு நினைச்சட்டான்னா, சுலபமா சம்பாதிக்க ஆம்பளையை விட அவளுக்குதான் அதிகம் வாய்ப்பு இருக்கு. நான் ஒருத்தி கற்போட இருக்கிறதால, நாட்ல விபசாரம் எல்லாம் ஒழிஞ்சுடுமா? ஒழியாதில்லையா? நாளைக்கே வாசல்ல ஒரு சிவப்பு விளக்கை தொங்கப் போட்டுட்டு அமோகமா ஆரம்பிச்சிட்டுமா?"

வாயில் அடித்துக் கொண்டாள் சித்தி.

"ஏண்டி, அவர் என்ன சொன்னாரு... நீ என்ன



சொல்றே? ஊழலையும் இதையும் இணைச்சுப் பேசறே?"

"என்னைப் பொறுத்தவரைக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை சித்தி. இதிலே உடம்பை விக்கிறாங்க. அதிலே மனசாட்சியை விக்கிறாங்க. அதுவும் ஒரு விபச்சாரம்தான்."

பாரதி செருப்பணிந்து வேகமாக வெளியேறினாள்.

"ம்கூம்... இவ உருப்படவே போறதில்லை" என்றார் சித்தப்பா.

* * * *

பாரதி தங்கராசுவின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில் குரல்வளை நெறிக்கப்பட்டுள்ள குறிப்புகளை உண்மையாக எழுதினாள்.

அன்றிலிருந்து மூன்றாம் நாள் இரவு... ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்குப் போகும் வழியில் அந்த இருட்டான தெருவில் பின் மண்டையில் கட்டையால் தாக்கப்பட்டாள். அதே ஆஸ்பத்திரியில் கட்டுப் போட்டுப் படுத்திருந்தாள்.

பஸ் ஸ்டாண்டில் இறங்கி, சாத்துக்குடி வாங்கிக் கொண்டு ரிக்ஷாவில் வந்து இறங்கி, வெள்ளை பெயிண்ட் அடித்த ஸ்டூலில் அமர்ந்து கண் கலங்கினான் கிருஷ்ணன். நீல சட்டை, நீல பேண்ட், வளப்பமான மீசை.

"என்ன பாரதி இதெல்லாம்?"

"ஒண்ணுமில்லை. சின்ன ஆக்ஸிடெண்ட்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"பொய் பிரயோஜனப்படாது. உன் சித்தப்பா விவரமா லெட்டர் எழுதிட்டார். ஏன் உனக்கு இந்த வம்பெல்லாம் பாரதி?"

"நான் என்ன வம்பு செஞ்சேன் கிருஷ்?"

"சாக்கடை மேலே கல் எறிஞ்சா சட்டைப் பாழாகத்தானே செய்யும்?"

"கிருஷ், என்னை நீ நல்லாப் புரிஞ்சவன். இருந்தும் கேக்கறியே... உன்னைத் துப்பாக்கி முனையிலே என்னைக் கொல்லச் சொல்லி உத்தரவு போட்டா கொல்வியா?"

"என்ன கேள்வி இது?"

''சொல்லு. என்னைக் கொல்லியா?''

''நான்சென்ஸ். ஏன் இப்படி எல்லாம் பேசறே பாரதி? என்னைச் சட்டாசட்டுக்கங்கடான்னு பேசாம இருந்துடுவேன். உன்னை நான் என் உயிரை விட மேலாதான் நினைக்கிறேன்.''

''ஏன் அப்படி?''

''பிகாஸ், ஐ லவ் யு.''

''அது மாதிரிதான். ஐ லவ் மை மனசாட்சி. என் உயிரை விலையாகக் கேட்டாலும் தந்துடுவேன். அதைக் கொல்ல மாட்டேன்.''

''பாரதி, நீ நேர்மையா நடந்துக்கிறதிலே எனக்கு சந்தோஷம். பெருமிதம் எல்லாம் இருக்கு. அது உனக்கு ஆபத்தா முடியுதே...''

''எனக்கு லாங் லைஃப் வேணாம் கிருஷ். எனக்குப் பிடிச்ச நிம்மதியான, சந்தோஷமான வாழ்க்கை காலம் சின்னதா இருந்தாலும் சம்மதம்.''

''உன்கிட்டே பேசி ஜெயிக்கவே முடியாதே... ரொம்ப வலிக்குதாம்மா?''

''நேத்து வலி அதிகமா இருந்தது. இப்ப பரவாயில்லை. அம்மாவுக்குத் தெரியுமா?''

''நானும் வர்றேன். அழைச்சுட்டுப் போங்கன்னாங்க. வேணாம், நான் மட்டும் போய் பார்த்துட்டு வந்துடறேன் அத்தைன்னு சொல்லிட்டு வந்துட்டேன். எப்போ டிஸ்சார்ஜ்?''

''நாளைக்கு. சித்தி வீட்டுக்குப் போக பிடிக்கலை.''

''ஏன்மா?''

''பிடிக்கலைன்னா பிடிக்கலை. ஒரு உதவி செய்யேன். ஒரு லேடீஸ் ஹாஸ்டல்லே இடம் பிடிச்சிக் கொடேன்.''

''தஞ்சாவூருக்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டு வந்துடேன் பாரதி.''

''நானா மாட்டேங்கறேன்? அப்ளை பண்ணி நாலு மாசமாச்சி. ரெண்டு நாள் தங்கறயில்லே?''

''லீவு இல்லைம்மா. உனக்கு லீவு இருந்தா ஒரு வாரம் போட்டுட்டு வாயேன். ரெஸ்ட்டா இருந்துட்டு



[illegible].''

''உன்னைப் பக்கத்திலே வச்சிக்கிட்டு ரெஸ்ட் எடுக்க மாதிரிதான்.''

''ஏன்... நான் பக்கா ஜெண்டில்மேன். உன் [illegible] தொட்ருக்கேனா?''

''அட... அட... அட! தெரியாதா சார் உங்களை? [illegible] படம் பார்த்த கதை எல்லாம் மறந்து போச்சா? சரி, ஏன் கிருஷ்... இன்னும் டிலே பண்றே? [illegible] உங்களுக்கு எத்தனை குழந்தைன்னு கேக்க ஆரம்பிச்சுட்டாங்க. இப்படியே விட்டா உங்க மருமக உங்களோட தானே இருக்கான்னு கேட்பாங்க.''

''வாஸ்தவம். எத்தனை நாளைக்கு உன் போட்டோவுக்கே முத்தம் கொடுத்துட்டு இருக்கிறது? வேலை பர்மனெண்ட் ஆகட்டும்னு தள்ளிப் போட்டேன். போன மாசம் கன்ஃபர்ம் ஆயிடுச்சி. அப்பாவை கன்சல்ட் பண்ணி டேட் ஃபிக்ஸ் பண்ணிடலாம். ஜூஸ் சாப்பிடறியா?''

கிருஷ் சாத்துக்குடியை கிரஷ் செய்து கொண்டிருந்த போது, சித்தியின் பெண் வந்து, ''அக்கா உங்களுக்கு லெட்டர் வந்திருக்கு'' என்று நீட்டினாள்.

FOR GOVERNMENT SERVICE ONLY என்று முத்திரை குத்தப்பட்டிருந்த நீளக் கவரைக் கிழித்து, காகிதத்தை விரித்தாள். டைப் செய்த வாக்கியங்கள் அவள் முகத்தில் ஒளிபாய்ச்சின.

''கிருஷ், என்னைப் பாராட்டு. எனக்கு டிரான்ஸ்பர் வித் ப்ரமோஷன்.''

''எந்த ஊருக்கு? எந்த ஊருக்கு?''

''நாம கேட்ட தஞ்சாவூர் மாவட்டம்தான். ஆனா தஞ்சாவூர் இல்லை. புதுப்பேட்டை ஜி.ஹெச்ல சீஃப் மெடிக்கல் ஆஃபீஸரா போட்ருக்காங்க.''

''பரவால்லையே... லஞ்சமோ, சிபாரிசோ இல்லாம கூட சமயத்திலே காரியங்கள் நடக்கும் போலிருக்கே. கங்கிராஜுலேஷன்ஸ். எப்போ ஜாய்ன் பண்றே?''

''இன்னும் மூணே நாள்ல'' என்றாள் பாரதி உற்சாகமாக.



# 3

ஏ.ஆர்.பி. - வீட்டின் தோட்டத்தில் நாற்காலி போட்டு அமர்ந்திருந்தான். கைலி மட்டுமே கட்டியிருந்தான். கையில் காலை செய்தித்தாள் விரித்து வைத்திருந்தான். சட்டை போடாத ஒல்லியான நாவிதன் பீட்டரின் பின் தலையில் கிரிச், கிரிச் என்று முடிவெட்டிக் கொண்டே வாயில் வெற்றிலையை மென்று கொண்டிருந்தான்.

எதிரே இதமான வெயிலில் ஏ.ஆர்.பியின் வளர்ப்பு நாய் தன் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்தது. தோட்டக்காரன் பைப்பில் இருந்து பூவாளியில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்க.... நிர்வாணப் பூக்கள் குளிக்கத் தயாராயின.

''அய்யா'' என்று வந்தான் அவன்.

காட்டெருமை மாதிரி உடம்பை வளர்த்திருந்தான். மார்பில் குத்தினால் குத்தின கையில்தான் எலும்பு ஒடியும்.

''என்னடா?'' என்றான் ஏ.ஆர்.பி.நிமிராமல்.

''படகுத் துறையிலே சின்ன தகராறு.''

''என்னன்னு விபரம் கேட்டாதான் சொல்லுவியா?''

''ஒண்ணுமில்லைங்க. இருளப்பன் மறுபடி நம்ம ஆளுங்ககிட்டே தகராறு பேசினான். வாய் வார்த்தை முத்திப் போயி ரெண்டு தட்டு தட்டிட்டேன். கீழே விழுந்துட்டான். தஞ்சாவூருக்குத் தூக்கிட்டுப் போயிருக்காங்க.''

''தஞ்சாவூருக்குத் தூக்கிட்டு போற அளவுக்கு...''

''இடுப்புல எலும்பு முறிஞ்சிருக்கு.''

''எப்படிடா தெரியும்?''

''மிதிச்சப்போ மளுக்குன்னு சத்தம் கேட்டுதே.''

''மிதிச்சியா...?''

''ஆத்திரம் தாங்காம...''

''ஜேம்ஸ், உன்னோட பெரிய ரோதனைடா.



[illegible] யார் மேலயும் கை வைக்காதேன்னு [illegible]சிருக்கேனில்ல? இருளப்பனை எப்படி [illegible]கிறதுன்னு எனக்குத் தெரியாதா? அவன் [illegible]...''

[illegible] ஆனா நடமாட ஒரு மாசமாகும்.''

[illegible] எல்லாம் சேர்ந்திருப்பானே...''

[illegible] போகப் போறாங்க...''

[illegible] நமக்கு?''

இனிமே இப்படி நடந்துக்கலை அய்யா.''

இப்போ இன்ஸ்பெக்டர்கிட்டே நான் [illegible]. அவனோ ஒரு மூடான ஆளு. மனசு இருந்தா சாதகம் செய்வான். மனசில்லைன்னா [illegible] பேசுவான். அவன்கிட்டே போய் தொங்கச் [illegible].''

நாவிதன் வெட்டி முடித்து கண்ணாடியை நீட்டி, ''அய்யா பாத்துக்குங்க'' என்றான். பீட்டர் தலையை இப்படி, அப்படி திருப்பிப் பார்த்து திருப்தியாய் தலையாட்டிக் கொண்டான்.

அவன் கத்தியை விரித்து உள்ளங்கையில் இரண்டு தேய்ப்பு தேய்த்துக் கொண்டதும், பீட்டர் கையை உயர்த்திக் காட்டினான்.

''சொந்த தகராறுன்னு சொல்லிடறேங்கய்யா. தர்ற தண்டனையை வாங்கிக்கறேன்'' என்றான் தலை குனிந்த ஜேம்ஸ்.

''உடம்பையும், தலைமுடியையும் மட்டும்தான் வளர்த்து வச்சிருக்க. நீ என்கிட்டே வேலை பாக்கிறது தெரியும். படகுத்துறையில மீன் பிடிக்கிறதிலே நமக்கும், இருளப்பனுக்கும் முன் தகராறு இருக்கிறதும் தெரியும். இப்ப நான் சொந்த தகராறுன்னு அடிச்சேன்னு சொன்னா எவன்டா நம்புவான்? ஏ.ஆர்.பி. பின்னால இருந்து தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கறான்னுதான் இப்ப சொல்லுவான். எனக்குத்தான் கெட்ட பேரு.''

அடுத்த கையை உயர்த்திக் கொண்டு, ''போய் வெந்நீர் ரெடியாய்டுச்சான்னு பார்த்துட்டு வா'' என்றான் மௌனமாய் நின்ற ஜேம்ஸிடம்.

ஜேம்ஸ் திரும்பி வந்து, "கரண்ட் இல்லைங்கய்யா... வேற அடுப்புல போட்ருக்காங்க. இன்னும் ரெண்டு நிமிஷத்துல ரெடியாய்டும்."

"அப்ப, என்ன செய்யலாம் ஜேம்ஸ்?"

"மன்னிப்பு கேட்டுக்கறேங்கய்யா..."

"நடந்தாச்சு. சரி விடு. இருளப்பன் திருப்பி தாக்கலையா?"

"எங்க தாக்க விட்டேன்?"

"உனக்குச் சின்னக் காயம் கூட இல்லையா?"

"அவன் இடுப்புல தாயத்து கட்டியிருந்தான் மணல்ல கட்டிப் பிடிச்சிப் புரண்டதிலே அது கீறிடுச்சி."

ஜேம்ஸ் தன் சட்டையை உயர்த்தி இடுப்பில் காட்டினான். எதிரே ஒரு சின்ன கீறல் இருந்தது. அதில் ரத்தம் வந்த அடையாளம் கூட இல்லை.

"ரத்தம் வந்திச்சா?"

"இல்லை. சின்ன கீறல்."

"நம்ம கணக்குப் பிள்ளை சர்மா வந்துட்டாரான்னு பாரு."

நாவிதன் வேலை முடிந்து தன் துணிப்பைக்குள் உபகரணங்களை எடுத்து வைத்தான். சோப்பு நீரை ஓரமாக ஊற்றினான். ஏ.ஆர்.பி.கொடுத்த ஐந்து ரூபாயை பவ்யமாக வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

ஏ.ஆர்.பி.தோட்டத்தில் நட்டிருந்த பார கம்பிகளுக்கு மையமாகப் போய் நின்று கொண்டு கைலியை மடக்கிக் கட்டிக் கொண்டு எவ்வி ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை தவ்வித் தவ்விச் சென்றான்.

ஜேம்ஸ் கையோடு சர்மாவை அழைத்து வந்திருந்தான். சர்மா மூக்கின் முனையில் மூக்குப் பொடிக் கறையோடும், சட்டையின் பாக்கெட் பகுதியில் இங்க் கறையோடும், தலையில் நரையோடும் இருந்தார்.

"சர்மா, ஸ்டேஷனுக்கு ஒரு கம்ப்ளைண்ட் எழுதுய்யா..."

"யார் எழுதற மாதிரிங்க?"



"ஜேம்ஸ் எழுதற மதிரி."

"என்ன எழுதணுங்க?"

"படித்துறையில் இருளப்பன் வலுவில் என்னுடன் சண்டைக்கு வந்தான். என் தாயை [illegible] தகாத வார்த்தைகளைப் பேசினான். நான் அப்படி பேசாதே என்று எச்சரித்த பின்னரும் [illegible] முதலில் என்னை அடித்தான். என்னைக் கழுத்தை நெரித்துக் கொல்ல வந்தான். நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடினேன். இருவரும் மணலில் உருண்டோம். எனக்கு உடம்பில் சில ரத்த காயங்கள் ஏற்பட்டிருப்பதுடன் நெஞ்சில் அடி பலமாகப் பட்டிருப்பதால் வலி தாங்க முடியவில்லை. தாங்கள் இருளப்பன் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்."

"எழுதிடறேங்க..."

"ஜேம்ஸ்! கம்ப்ளைண்டை எடுத்துக்கிட்டு கூட [illegible] அழைச்சக்கிட்டு ஸ்டேஷனுக்கு சீக்கிரமா போ. நான் போன்ல இன்ஸ்பெக்டர்கிட்டே பேசறேன். அவர் உன்னை ஆஸ்பத்திரியில சேர்ப்பார். ரெண்டு நாள் பேசாம கிட. பார்த்துக்கலாம். என்ன?"

"சரிங்கய்யா..."

"இப்படி நிமிர்ந்து போகாதேடா. அடிபட்டவன் மாதிரி போ. எழவு! எல்லாம் சொல்லித் தரணும் உனக்கு."

ஜேம்ஸ் போனதும் ஏ.ஆர்.பி. குளிக்கப் போனான்.

* * * *

புதுப்பேட்டை பஸ் ஸ்டாண்டில் நுழைந்து, இஞ்சின் பதற, உடனே புறப்படத் தயாராய் நின்றது தஞ்சாவூரில் இருந்து வந்த டவுன் பஸ்.

"சீக்கிரம் இறங்குங்க."

பாரதியும் இறங்கிக் கொண்டாள்.

நிழலுக்கு ஒதுங்க ஒரு ஷெல்டர் கூட இல்லாமல் திறந்தவெளி மைதானமாய் இருந்தது பஸ் ஸ்டாண்ட். இறங்கினதுமே அருகே இருந்த கழிவறை நாற்றம் மூக்கைப் பொத்த வைத்தது. சுவர் ஓரமாக ஆண்கள்

லஜ்ஜையே இல்லாமல் தின்று பிளாட்பாஃர்ம் சவ ஓரமாக தின்று பிளாடர் காலி செய்து கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளி ஒரு மரம் அடியில் நிழல். நிழலில் மூட்டைகளோடு, பைகளோடு ஏதோ பஸ்சுக்கு காத்திருப்பவர்கள். பால் கொடுத்துக் கொண்டு ஒரு தாய். ட்ரங்கு பெட்டி மேலே உட்கார்ந்து கொண்டு ஒரு பையன். கூறு கட்டி வறுத்த கடலை விற்கும் ஒரு கிழவி. சரவணா ஒட்டல் வாசலில் நான்கு சைக்கிள்கள். தடியுடன் ஒரு பிச்சைக்காரன். சற்றுத் தள்ளி பாட்டில் பாட்டிலாய் அடுக்கின, வாழைத்தாரும், பத்திரிகைகளும் தொங்கும் பெட்டிக்கடை. அதனருகில் ரிக்ஷா. ஒரே ஒரு ரிக்ஷா.

பாரதி சூட்கேசுடன் நடந்து ரிக்ஷாவை நெருங்கி, ரிக்ஷாக்காரன் ஊதுபத்தி கொளுத்தி ரிக்ஷாவுக்குள் இருந்த முருகன் பட பிரேமில் செருகும் வரை காத்திருந்து "வர்றியாப்பா?" என்றாள்.

"எங்கே போவணும்மா?"

"கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு"

அவன் பொசுக்கென்று சிரித்து, "அதோ தெரியுதே கொடிக் கம்பம். அதுக்கு லெஃப்ட்ல திரும்பி பத்து தப்படி நடந்தா மணிக்கூண்டு. மணிக்கூண்டுக்கு மேற்கால ஆஸ்பத்திரி. நடந்தே போயிடலாம்மா" என்றான்.

பாரதி "நன்றிப்பா" என்று விட்டு நடந்தாள். அவன் சொன்ன கொடிக் கம்ப மேடையில் இருந்து இடது பக்கம் திரும்பினதும் கடைத் தெரு ஆரம்பித்திருந்தது. மளிகை கடை, கயிறு கடை, ஆரிய பவன், சாந்தி லாட்டரி செண்டர், காய்கறிக் கடை, ராஜி சலூன், பாத்திரக் கடை, ரம்யா மெடிக்கல்ஸ் என்று கொஞ்சம் பிஸியாய் இருந்தது. சாலை ஓரங்களில் டயர் போட்ட தள்ளு வண்டிகளில் சாத்துக்குடி, கொய்யாப்பழம், திராட்சை, வாழை, உதிரி மல்லிகை, எதை எடுத்தாலும் ஒரு ரூபாய் பொருட்கள் நிரம்பியிருந்தன.

மணிக்கூண்டில் சின்னமுள் உடைந்து உள்ளேயே



விழுந்திருக்கது. சந்திரா தியேட்டரில் பகல் நேர [illegible] 'காம தேவதை' - மனதை அள்ளும் [illegible] நிறைந்த மலையாள கலர் படம் [illegible] கலர் போஸ்ட்டரும், அதனடியில் [illegible] ரஜினிகாந்தின் பிறந்த நாளான இன்று [illegible] நீடூழி வாழ வாழ்த்துகிறோம். இவண் - [illegible] ரஜினிகாந்த் ரசிகர் மன்றம், புதுப்பேட்டை - என்று கலர் ஸ்கெட்சில் கையால் எழுதிய போஸ்ட்டரும் ஒட்டப்பட்டிருந்தது.

பாரதி மணிக்கூண்டைக் கடந்து அரசாங்க மருத்துவமனை நோக்கி நடந்தாள். காதுக்குப் பக்கமாக அலறிக் கொண்டு ஒரு மைக் கட்டின ரிக்ஷா வந்தது. 'இன்று மாலைச் சரியாக ஆறு மணி அளவில் [illegible] வடகரையில் அண்ணா கலையரங்கில் தே.தி.மு.க.வின் பத்தாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அவ்வமயம் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற சோ அண்ட் சோ வருகிறார்கள். அனைவரும் திரளாக வரும்படி கேட்டுக் கொள்கிறோம். இங்ஙனம் நகர தே.தி.மு.க., புதுப்பேட்டை.'

பாரதி அரசாங்க மருத்துவமனைக்குள் நுழைந்தாள். காம்பௌண்டிற்குள் தெரிந்த நாலு கட்டிடங்களில் அலுவலகம் எங்கே இருக்கிறது என்று எதிர்பட்ட ஆயாவை விசாரித்துக் கொண்டு அணுகி, படியில் கால் எடுத்து வைக்கும் போது அப்பாவை நினைத்துக் கொண்டாள்.

'செய்யும் தொழிலே தெய்வம். என் பொறுப்பில் நான் அக்கறையாய் இருப்பேன். நேர்மையாய் நடப்பேன், உண்மையாய் செயல்படுவேன்.'

படியில் கால் வைத்து உள்ளே வந்தாள்.

ரிலீவ் ஆகும் சி.எம்.ஓ. சடகோபன் தொந்தி தள்ளியிருந்தார். தங்கப் பல் கட்டியிருந்தார். சிரிப்போடு வரவேற்று பொறுப்புகளை ஒப்படைத்தார். ஆஸ்பத்திரியின் மூன்று கட்டிடங்களை அழைத்துச் சென்று காட்டினார். ஆபரேஷன் தியேட்டர். அழைத்துப் போனார்.

''மொத்தம் இங்கே அஞ்சி டாக்டர்கள். நாலு ஆம்பளை டாக்டர்கள். ஒரு லேடி டாக்டர். ரெண்டு எம்.எஸ்., ஒரு எம்.டி., ஒரு டி.ஜி.ஓ., ஒரு டி.சி.ஹெச்'' என்று விபரங்களைச் சொன்னார். ஸ்டாஃப்களை அறிமுகப்படுத்தினார்.

அரைமணி நேரம் கழித்து அறைக்கு வந்து பாரதி தன் நாற்காலியில் அமர்ந்ததும் வாழ்த்து சொன்னார்.

''ஹாஸ்பிடல் காம்பௌண்ட்டுக்குள்ளேயே குவாட்டர்ஸ் இருக்கு. நான் அங்கேதான் தங்கியிருந்தேன். வெக்கேட் பண்ணி ரெடியா இருக்கு. நீங்க அங்கேயே தங்கலாம். தண்ணி வசதி இருக்கு. காத்து நல்லா வரும்.''

''தாங்க் யு''

''அப்புறம்... பர்சனலா ஒரு விஷயம். ஆப்பிளோ, ஆரஞ்சோ வாங்கிக்கிட்டு போய் ஏ.ஆர்.பி. சாரை கண்டுகிட்டு வந்துடுங்க.''

புருவம் சுருக்கினாள். ''கண்டுக்கிறதா? அப்படின்னா?''

''அதாவது... அறிமுகப்படுத்திக்கங்கன்னு சொல்ல வந்தேன்.''

''யாரு அவரு ஏ.ஆர்.பி?''

''ஊர்ல பெரிய புள்ளி. பாதி சொத்து அவருதுதான். கொஞ்சம் முரட்டு ஆசாமி. மேல் மட்டம் வரைக்கும் இன்ஃப்ளுயன்ஸ் உள்ளவர்.''

''அதுக்காக?'' என்றாள் கடுமையாக.

''உங்களுக்கு இஷ்டமில்லைன்னா விடுங்க டாக்டர். ஊரு நடப்பைச் சொன்னேன். புதுசா இன்ஸ்பெக்டரோ, சப் இன்ஸ்பெக்டரோ வந்தாக் கூட போய்ப் பார்க்கிறது வழக்கம்.''

''ஸாரி டாக்டர். எனக்கு இதெல்லாம் பிடிக்காது. யார் கிட்டயும் நானா போய் வலிய அறிமுகப்படுத்திக்கணும்னோ, ஐஸ் வைக்கணும்னோ எனக்கு அவசியமில்லை. என் டூட்டியை நான் ஒழுங்கா செய்வேன். அதனால யார் தயவும் நான் எதிர்பார்க்கிறதில்லை.''

''ஓக்கே. விஷ் யு ஆல் த பெஸ்ட்''



[illegible] டுவிட்டு சடகோபன் நடந்து சென்றார்.

பாரதி ரெக்கார்டுகளை எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தாள்.

மேஜை மீதிருந்த டெலிபோன் ஒலித்தது. எடுத்தாள்.

''ஹலோ, சி.எம்.ஓ. பாரதி'' என்றாள்.

''டாக்டர் சடகோபன் இல்லை?''

''ரிலீவ் ஆகிட்டார். அவர் சீட்லதான் நான் உக்கார்ந்திருக்கேன். நீங்க யாரு?''

''வணக்கம் மேடம். நான் புதுப்பேட்டை [illegible] இன்ஸ்பெக்டர் குமார் பேசறேன்.''

''வணக்கம் சார்.''

''டாக்டர் சடகோபன் சொல்லிக்கிட்டிருந்தார் டிரான்ஸ்ஃபர் ஆகிறதா, என்னைக்குன்னு சொல்லலை. நீங்க எப்போ ஜாய்ன் பண்ணிங்க டாக்டர்?''

''இப்பத்தான் ஒரு மணி நேரமாச்சி''

''சந்தோஷம். வெல்கம் டு புதுப்பேட்டை. உங்களை ஒய்வா வந்து சந்திக்கிறேன் டாக்டர்.''

''நல்லது சார்.''

''அப்புறம்... ஜேம்ஸ்ன்னு ஒரு பேஷண்ட்டை கான்ஸ்டபிளோட அனுப்பறேன். அடிதடி கேஸ். கேஸ் ரிஜிஸ்டர் பண்ணியிருக்கேன். அட்மிஷன் போட்டுக்குங்க. கொஞ்சம் வேண்டப்பட்ட நபரோட ஆளு. ஏ.ஆர்.பின்னு பேரு. நேர்ல பேசறப்போ விபரமா சொல்றேன். கொஞ்சம் ஃபேவரபிளா சர்ட்டிஃபிகேட் வேணும்.''

''மிஸ்டர் குமார், என்கிட்டே சட்டத்தை மீறின எந்த சலுகையையும் தயவுசெஞ்சி எதிர்பார்க்காதீங்க. யாருக்கும் எந்த ஃபேவரும் செய்ய மாட்டேன். நீங்க பேஷண்ட்டை அனுப்புங்க. அட்மிட் பண்ண வேண்டிய நிலைமையிலே இருந்தா அட்மிட் பண்ணிக்கிறேன். என்ன அவன் கண்டிஷனோ, அதுதான் சர்ட்டிஃபிகேட்ல வரும். வச்சிடட்டுமா?''

''டாக்டர், ஏ.ஆர்.பி. ஊர்ல ரொம்ப முக்கியமான புள்ளி.''

''வி.ஐ.பி.க்களுக்காக இந்தியாவில தனியா ஒரு சட்டம் இல்லை மிஸ்டர் இன்ஸ்பெக்டர்''

''இந்த வேகம் வேணாங்க டாக்டர். வம்புல முடியும்.''

''மிரட்டலா?''

''இல்லைங்க. எச்சரிக்கை. பொலிட்டிகல் இன்ஃப்ளூயன்ஸ்.''

''எந்த வார்த்தையும் என்னை பாதிக்காது இன்ஸ்பெக்டர். என் கடமையை ஒழுங்கா, நேர்மையா செய்ய அனுமதிங்க. ஒத்துழைங்க. வச்சிடறேன்.''

இன்ஸ்பெக்டரின் பதிலுக்கு முன்பே வைத்தான்.

மேஜை மேல் இருந்த அழைப்பு மணியை அழுத்தினான். உள்ளே வந்த அட்டெண்டரை அருகே அழைத்து ''ஏ.ஆர்.பி.ன்னா யாரு? விபரமா சொல்லுங்க'' என்றான்.



## 4

ஒவ்வொரு வேளை சாப்பிட்ட பின்பும், பல் குத்தியாக வேண்டும் ஏ.ஆர்.பி.க்கு. இப்போது சாப்பிட்டு முடித்திருந்தான். ஹாலின் சோபாவில் அமர்ந்து சாவிக் கொத்தில் இணைந்திருந்த வெள்ளிக்குச்சி கொண்டு பல் குத்தினான்.

கொஞ்சம் தள்ளி மேஜை போட்டு சர்மா கணக்கெழுதிக் கொண்டிருந்தார். பூக்கள் வைக்கிற பித்தளைத் தொட்டிகளை ஒருத்தன் அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தான். கண்ணாடி போட்ட ஜன்னல்கள் வழியாக ஹால் வழிய வழிய வெளிச்சம். நிசப்தம்.

உள்ளே வந்தான் ஒரு சேவகன். கெட்டித் துணியில் பேண்ட். பூப்போட்ட டைட் சட்டை.

''அய்யா?'' தலையில் கீறல்.

''என்னடா?''

''கோயமுத்தூர்லேர்ந்து சினிமா புகழ் வனஜா



வந்திருக்கு.'' பல்லெல்லாம் வாய்.

''அடடே! எப்போ?''

''இப்பதான். தஞ்சாவூர்ல நாடகமாம். அப்படியே உங்களைப் பாக்க...''

''கூட யார் வந்திருக்கா?''

''தனியாத்தான் வந்திருக்கு.''

''வாசல்ல நிக்க வச்சிருக்கியா?''

''ஆமாம்.''

''சரி. நீ கார்ல ஏத்தி மல்லிகை தோட்டம் ரெஸ்ட் ஹவுஸுக்குக் கொண்டு போய் விடு. குளிச்சிடச் சொல்லு. சாப்டாச்சான்னு விசாரி. வான்கோழிக் கறின்னா பிடிக்கும் அவளுக்கு. வீரனார் ஹோட்டல் [illegible] பார்சல் பண்ணி கொண்டு போய் கொடுத்துட்டு அப்புறம் இங்கே வா. என்ன?''

''சரிங்கைய்யா'' என்று கார் சாவியை கேட்ச் பிடித்தான்.

அவன் வெளியே வந்து, தொப்புள் தெரிய சேலை கட்டியிருந்த ஒரு இன்ச் திக்கிற்கு பவுடர் அப்பியிருந்த, புறப்படத் தயாராய் இருக்கும் ராக்கெட்டுகளின் மூக்குகள் போல கிண்ணென்று உடம்பை, உடம்பில் வைத்திருந்த வனஜாவை மாருதியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். ''இப்ப சினிமால நடிக்கலையாங்க?''

ஏ.ஆர்.பி. அலமாரி திறந்து இந்த சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்படுத்தும் இரண்டு மாத்திரைகளை வாயில் போட்டு விழுங்கினான். குதிரை படம் போட்ட கையடக்க ஸ்பிரே பாட்டிலை எடுத்து ஜிப்பாவின் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டான். மற்றொரு பாக்கெட்டில் பணம் திணித்துக் கொண்டான். செண்ட் எடுத்து சர், சர்...

போன் அடித்தது.

''சர்மா... யாருன்னு பாருய்யா...''

சர்மா யாருன்னு பார்த்து, ''அய்யா, இன்ஸ்பெக்டர் பேசறாருங்க.''

வந்து, வாங்கி, காதில் வைத்து, ''ஹலோ இன்ஸ்பெக்டர், என்ன சொல்லுங்க?''

''ஜி.ஹெச்சல கொஞ்சம் பிரச்னையாய்டுச்சி சார்.''

''என்ன பிரச்னை?''

''புதுசா பாரதின்னு ஒரு லேடி டாக்டர் சீஃப் மெடிக்கல் ஆபீஃஸரா இன்னைக்குத்தான் டூட்டியில ஜாய்ன் பண்ணியிருக்காங்க. நீதி, நேர்மைன்னு பேசறாங்க. ரூல்ஸ் பேசறாங்க. யாருக்கும் அட்ஜஸ்ட் பண்ணிட்டு போக முடியாதுன்னுட்டாங்க. ஜேம்சை அனுப்பி வைச்சேன். சோதிச்சப் பார்த்துட்டு அட்மிட் பண்ண வேண்டிய நிலமையிலே பேஷண்ட் இல்லைன்னு கான்ஸ்டபிள்கிட்டே சொல்லி திருப்பி அனுப்பிச்சிட்டாங்க.''

''என்னாங்க இது. ஒரு பொம்பளை இவ்வளவு சதாய்க்கிறாங்களா? நம்ம பேரைச் சொன்னீங்களா?''

''சொன்னேன். இன்னைக்குத்தானே வந்திருக்காங்க. யார் எப்படின்னு எதுவும் புரியாதில்லை?''

''புரிய வெச்சிடுவோம். இப்ப எங்கே இருக்காங்க?''

''ஆஸ்பத்திரியிலதான்.''

''நானே நேர்ல போய் பார்க்கிறேன். பேசறேன்.''

''முயற்சி பண்ணுங்க சார்.''

''ஏ.ஆர்.பி.பத்திதான் உங்களுக்கு தெரியுமே சார். ஒண்ணு வளைச்சி போடப் பார்ப்பேன். இல்லைன்னா உடைச்சு போடப் பார்ப்பேன்.''

போனை வைத்து விட்டு செருப்பு மாட்டிக் கொண்டு வீட்டின் வாசலுக்கு வந்தான். நாயை தூக்கிக் கொண்டான். தொங்கும் மூங்கில் கூடையில் அமர்ந்து கார் வரக் காத்திருந்தான். நகம் கடித்துத் துப்பினான்.

வந்ததும் ஏறி ''கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போ ரத்னம்''

''அய்யா, ரெஸ்ட் ஹவுஸ்ல.''

''தூங்கிட்டிருக்கட்டும். வேற ஒரு ஜோலி. நீ போ...''

போகும் வழியில் காரை நிறுத்தி ஒரு டஜன்



ஆப்பிள் வாங்கிக் கொண்டான்.

* * * *

கார் ஜி.ஹெச். அலுவலகம் முன்னால் நின்றது. மூங்கில் கூடையில் பழங்களைத் தாங்கி ரத்னம் தொடர, ஏ.ஆர்.பி. உள்ளே நடந்து, பாரதியின் அறை வாசலில் நின்று, அறைக்கதவுகளின் ஒன்றில் லேசாகத் தட்டி, ''உள்ளே வரலாமா டாக்டரம்மா?'' என்றான்.

''வாங்க...'' என்றாள் பாரதி.

உள்ளே வந்து எதிர் நாற்காலியில் அமர்ந்து, ''டேய் பழத்தை அப்படி வைடா.''

''இருங்க. இருங்க. என்ன அது?''

''சும்மா... பழம்... ஆப்பிள். எப்படி வெறுங்கையோட வந்து சந்திக்கறது?''

''மன்னிக்கணும். அந்தக் கூடையை மொதல்ல எடுத்துடுங்க. நீங்க யாரு, என்ன விஷயம்னு சொல்லுங்க...'' பார்த்துக் கொண்டிருந்த நோட்டை மூடினாள்.

''என் பேரு ஏ.ஆர்.பீட்டர். ஊர்ல ஏ.ஆர்.பின்னு சொல்லுவாங்க...''

பாரதி பேனாவை மூடி வைத்து விட்டு அவனை அளப்பது போல பார்த்தாள்.

''சரி'' என்றாள். ஃபேன் காற்றில் காதருகில் ஒரு கூந்தல் முடி தள்ளாடிக் கொண்டிருந்தது.

''லான்ச் ஓடுது. மல்லிகை தோட்டம். தோப்பு, வயல் எல்லா வகையிலேயும் சொத்து இருக்கு.''

''சந்தோஷம்.''

''ஆளுங்கட்சி மினிஸ்டர்ஸ் இந்தப் பக்கம் மீட்டிங்குக்கு வந்தா நம்ம ரெஸ்ட் அவுஸ்லதான் தங்கறது வழக்கம்.''

''சரி''

''நீங்களே வந்து பார்ப்பீங்கன்னு நினைச்சேன். வரக்காணோம். அதான் நாம பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன். ரொம்பச் சின்னப் பொண்ணா இருக்கீங்களே... நான் ஒரு நாப்பது, நாப்பத்தஞ்சி வயசுல எதிர்பார்த்தேன். என் மக வயசுதான்

இருக்கும்னு நினைக்கிறேன் உனக்கும்.''

''ஓக். மரியாதை கொடுத்தா மரியாதை கிடைக்கும்.'' என்றாள் பட்டென்று.

''என் பொண்ணு டெல்லியில இருக்கா. என் மாப்பிள்ளைக்கு ஹோம் மினிஸ்ட்ரியில வேலை. ஒரேப் பொண்ணு. வைஃப் இறந்துட்டா. தனியாத்தான் இருக்கேன்.''

''சரி. வந்த விஷயத்தைச் சொல்றீங்களா?''

''நம்மாளு ஜேம்ஸ் இங்கே அட்மிட் ஆகறதுக்கு வந்தான் - இன்ஸ்பெக்டர் அனுப்பி வச்சார். அட்ஜஸ்ட் பண்ண மாட்டேன்னுட்டீங்களாம். வருத்தப் படாதீங்க இன்ஸ்பெக்டர், புதுசா வந்திருக்காங்க. நம்மை அறிமுகம் இல்லைன்னு சொன்னேன். உடனே புறப்பட்டு வந்துட்டேன். ஆறு வருஷமா எஸ்.ஐ.யா இருந்தாரு குமார். அப்புறம் நான் முயற்சி எடுத்துக்கிட்டு இன்ஸ்பெக்டரானாரு. எதுக்குச் சொல்ல வர்றேன்னா... ஏங்கம்மா, உங்களுக்கு கல்யாணம்...''

பாரதி எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''இன்னும் ஆகலை. உங்க சிபாரிசிலே ஒரு கலெக்டர் மாப்பிள்ளை பார்த்துத் தர்றேன்னு சொல்லப் போறீங்களா?''

''தமாஷ் பண்றீங்க. நம்ம வீட்டுக்கு எப்ப வர்றீங்க? ஒரு விருந்து கொடுக்கணுமே உங்களுக்கு.''

''ஸாரி, சார். உங்களை எப்படி எனக்கு அறிமுகம் இல்லையோ, அப்படி என்னையும் உங்களுக்கு அறிமுகம் இல்லை. திருச்சி கலெக்டரா இருந்து ரிட்டையர் ஆனாரே, கணபதிராம், தெரியுமா?''

''தெரியுமாவா? பக்கா கலெக்டரு. காந்தித் தாத்தாவுக்கு இவர் தான் சப்ஸ்ட்டிடியூட்னு சொல்வாங்க. மனுஷன் தானும் பைசா வாங்க மாட்டான். வாங்கறவனையும் விடமாட்டான். பேஜாரான அளு. காலத்துக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகத் தெரியாத பொழைக்கத் தெரியாத மனுஷன்.



[illegible]டைப்பிலே ஆர்.டி.ஓ.வா கொஞ்சநாள் இருந்தாப்போ.. மூணே மாசத்திலே அங்கேர்ந்து [illegible]. அதிலே முக்கிய பங்கு [illegible]துதான். அவருக்கு நீங்க உறவா?''

''ஆமாம். ரத்த உறவு. அவர் பொண்ணுதான் நான்.''

''அதானே பார்த்தேன். அந்த ரத்தம்தான் இப்படிப் பேசுது. அம்மா, உனக்கு... மன்னிச்சுக்குங்க... உரிமையாச் சொன்னா கோபம் வருது... உங்களுக்குத் [illegible] இருக்கிறது நியாயம்தான். ஆனா எல்லா [illegible]திலேயும், எல்லார்கிட்டேயும் விரைப்பா நடந்துக்கறது நல்லதில்லை. ஸ்ட்ரிக்ட்டா இருக்க வேண்டியதுதான். கொஞ்சம் ஆள் பார்த்து அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டும் போக வேண்டியதுதான்.''

''நான் எப்படி நடந்துக்கணும்னு அரசாங்கத்திலேயே விதிமுறைகள் நிர்ணயிச்சி இருக்காங்க. அதுபடி நடந்துப்பேன். அப்புறம்? நான் கொஞ்சம் ரவுண்ட்ஸ் போகணும்.''

''வெளியே போடான்னு சொல்றீங்களா?''

''நான் எங்கே அப்படிச் சொன்னேன்?''

''அர்த்தம் அதான். அப்போ ஜேம்சை அட்மிட் பண்ணிக்கிட்டு உள்ளுக்குள்ளே நிறைய அடி பட்டிருக்கிறதா ஒரு சர்ட்டிஃபிகேட் கொடுக்க முடியாதுன்றீங்க?''

''நீங்க சொல்ற ஜேம்சை நானே செக்கப் செஞ்சிப் பார்த்தேன் சார். அவருக்கு ஒண்ணும் இல்லை. நல்லா இருக்கார்.''

''அது எங்களுக்குத் தெரியும். அவன் கையால அடி வாங்கின இருளப்பன் ஒரு அனாதைப் பயலா இருந்தா இவ்வளவு தூரம் நான் வந்திருக்க மாட்டேன். அவனுக்கு ஜாதி ஜனம் அதிகம். பெரிய பிரச்சினையாக்கிடுவாங்க. நிச்சயம் ரெண்டு மூணு வருஷம் உள்ளே தள்ளிடுவாங்க. ஒண்ணுமில்லாம செய்ய எனக்கு ஒரு மணி நேரம் கூட ஆகாது. ஆனா அடிப்படையிலே கொஞ்சம் ரெக்கார்ட்ஸ் சாதகமா இருக்கணுமேன்னு பார்த்தேன். என்னை

பகைச்சிக்கிறது நல்லது இல்லைங்க. முடிவா என்ன சொல்றீங்க?''

''இந்த அட்ஜஸ்ட் பண்ணிக்கிற வேலையே கிடையாது சார். சட்டப்படிதான் நான் நடந்துப்பேன். வயசிலே மூத்தவர்ங்கிறதாலே மரியாதை கொடுத்து பேசிட்டிருக்கேன். போய்ட்டு வர்றீங்களா?'' என்று கை கூப்பினாள் பாரதி.

''இப்படி மூஞ்சிலடிச்ச மாதிரி பேசி என்னை எதிர்த்துக்கிறது உங்களுக்கு சரியில்லை டாக்டரம்மா. விளைவுகள் நல்லா இருக்காது.''

''என்ன சார், அதிகபட்சம் உங்க செல்வாக்கை வச்சி இந்த ஊரை விட்டுத் தூக்கி அடிப்பீங்க. செய்ங்க சார், தாராளமா செய்ங்க. வேலையை விட்டே அனுப்பினாலும் என் மனசுக்கு சரின்னு படறதைத்தான் செய்வேன்.''

''அப்படிங்களா? அப்ப சரி, சந்தோஷம். டேய் ரத்னம், பழக்கூடையை எடுத்துட்டு வாடா'' என்றான் ஏ.ஆர்.பி. கோபமாய், விருட்டென்று எழுந்து வெளியே வந்து காரில் ஏறி கதவை ஓங்கிச் சாத்தினான்.

ரத்னம் காரில் அமர்ந்து கொண்டு ஸ்டார்ட் செய்து, ''அய்யா, ரெஸ்ட் அவுசுக்குத்தானே?'' என்றான் தயக்கமாக.

''வீட்டுக்குப் போடா. அவளைப் பணத்தைக் கொடுத்து அனுப்பு. என்ன பேச்சு பேசினா பார்த்தியா? இவளுக்கு ஒரு வழி பண்ணிடணும்டா முதல்ல.''

''டிரான்ஸ்பர்தானேய்யா?''

''ம்கூம்... அதுக்கெல்லாம் கவலைப்படமாட்டா. தியாகி பரம்பரை. சுத்தக் குடும்பம். ரோஷக்காரி. படிச்ச திமிரு. சட்டம் பேசறா. இவளை இங்கே உட்கார்த்தி வெச்சே நான் யாருன்னு காட்டணும்டா.''

''காட்டலாங்க. ஆனா இப்ப ஜேம்சு?''

''இவ இல்லைன்னா வேற வழியே இல்லையா? அதெல்லாம் பார்த்துக்கலாம் வா. தஞ்சாவூர்ல போய் படுத்துக்க வச்சிடலாம் ஜேம்சை. இவ திமிரை தலையிலே தட்டணும்டா.''



ஜீப் வந்து இறங்கியதும் ஆப்பிளை எடுத்துக் கொடுத்துக் கொண்டு, ''நீ என்ன செய்றே? தகவல் தெரிஞ்சுக்கிட்டு வா. இவ யாரு, என்ன பின்னணி, எந்த பலத்தில இப்படி விடைக்கிறான்னு புரிஞ்சுக்கிட்டு அப்புறம் பாடம் சொல்லித் தருவோம். கோபமா பேசறாளே ஒழிய... ஆளு சும்மா செவசெவன்னு ஆலப்புழையிலேர்ந்து ஒருத்தி வந்தாளே, அவ பேரென்ன கிருஷ்ணவேணியா? அவ மாதிரியே இருக்கா அசப்புல'' என்றான் ஏ.ஆர்.பி.

ஆப்பிளை நாயிடம் வீசிவிட்டு உள்ளே வந்து போனை எடுத்துச் சுழற்றி, ''எம்.எல்.ஏ.ஊர்ல இருக்காருங்களாம்மா? வெளில போயிருக்காரா? நான் ஏ.ஆர்.பி. பேசறேன். அர்ஜெண்ட்டான விஷயம்... வந்ததும் என்னைக் கூப்புடச் சொல்லுங்க.''

போனை வைத்ததும் பீட்டருக்கு சம்பந்தமில்லாமல் அந்த கிருஷ்ணவேணியின் மாரில் பார்த்த மச்சம் நினைவுக்கு வந்தது.



## 5

வாசலில் பைக் சத்தம் கேட்டு கியாஸ் அடுப்பின் குமிழைத் திருப்பி நெருப்பின் அடர்த்தியைக் கட்டுப்படுத்தி விட்டு வெளியே வந்து, ''வாணும் மகாராஜா. முன்கூட்டியே சொல்லியிருந்தா, சிவப்புக் கம்பளம் வாங்கி விரிச்சிருப்பேன்'' என்றாள் பாரதி.

கிருஷ்ணன் பைக்கைப் பூட்டி விட்டு, சைடு பாக்சில் செருகியிருந்த அட்டைப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு ''நாலு நாளா ஊர்ல இல்லை. புதுக்கோட்டைக்கு டெபுடேஷன்ல போயிருந்தேன். இதான் குவார்ட்டர்ஸா?'' என்று உள்ளே வந்தான்.

"இன்னும் சரியா அரேன்ஜ் பண்ணலை. உக்காரு. என்ன ஸைக்கலயே வந்துட்டே?"

"என்ன பெரிய தூரம்? அரை மணியிலே வந்துட்டேன் தெரியுமா? என் பாரதி, நீ தஞ்சாவூர்லயே அம்மாவோட தங்கிட்டு தினம் பஸ்ல வரலாமே?"

"ஆமாம். உன்னை மாதிரி ஆஃபீஸ் உத்தியோகம் பார்க்கிறேன் பாரு. ஹாஸ்பிடல் இன்சார்ஜே நான்தான். எந்த நேரத்திலேயும் அவைலபிளா இருக்கணும். எத்தனை வகையான எமர்ஜென்சி இருக்கு!"

"அதிலே ஒரு வகைதான் இந்திரா காந்தி கொண்டாந்ததா?"

செல்லமாக கிருஷ்ணனின் மூக்கைத் திருகி விட்டு, "இரு. சாதம் வச்சிருக்கேன். இறக்கிட்டு வந்துடறேன்." என்று உள்ளே சென்றாள்.

பத்து நிமிடத்தில் திரும்பி வந்து அவன் கையிலிருந்த பேப்பரை வாங்கி மடக்கி வைத்து, "பேப்பர் படிக்கத்தான் வந்தியா? சொல்லு அப்புறம்? இதென்ன பார்சல்? எதுவும் கல்யாணத்துக்குப் போறியா?"

"உனக்குத்தான்."

"எனக்கா? என்னது ரொம்ப ஃபார்மலா கிப்ட் பேக்கிங் எல்லாம் பண்ணி, ரிப்பன் கட்டி... எதுக்கு?"

"உன் ப்ரொமோஷனுக்காக. சேலை கலர் பிடிச்சிருக்கான்னு பாரேன்."

பாரதி பார்சலை ஆர்வமாகப் பிரித்துப் பார்த்து, "போ கிருஷ், உனக்கு நினைவே இருக்கிறதில்லை. இதே பொடிக்கலர்ல தானே போன பர்த் டேக்கு வாங்கித் தந்தே?"

"ஆமாம். உன் உடம்புக்கு டார்க் கலர்தான் எடுக்கும்னு எடுத்துப் போடச் சொன்னேன். இந்த கலர் இருக்கா, இல்லையான்னு மறந்துட்டேன். சரி, கொடு. வேற கலர் மாத்திடலாம். தெரிஞ்ச கடைதான்."



"வேணாம் விடு. இது டிசைன் வேற. காப்பி [illegible] தயா?"

"வேற கொடுக்காதே."

"உபசரிக்கிறதுக்கு நீ என்ன விருந்தாளியா? [illegible] கேளேன்" என்று எழுந்து பாதி காபி கலந்து வந்து கொடுத்தாள்.

பருகிக் கொண்டே, "தனியா இருக்கிறதுக்கு போரடிக்கலை?"

"அடிக்குது. ரேடியோ, புக்ஸ்னு ஓட்டறேன். நீதான் மனசு வைக்க மாட்டேங்கிறியே, முழங்கைல என்ன கீறல்? எங்கே, காமி, ஏய், ரத்தம் வந்திருக்குப்பா."

"அது ஒண்ணுமில்லை விடு. வர்றப்போ ஒரு ஆட்டோ வண்டில கம்பி நீட்டிக்கிட்டிருந்துச்சி. ஓவர்டேக் பண்றப்போ லேசா கிழிச்சிடுச்சி. சரியாய் போயிடும்."

"அதான் சார் அரை மணி நேரத்தில வந்திங்களா? இரு, டிங்க்ச்சர் போட்டு விடறேன்."

பாதி டிங்க்ச்சர் பாட்டிலும், காட்டனும் கொண்டு வந்து, நனைத்து ஒற்றி விட்டு, "சமீபத்தில போட்டதில்லைன்னா ஒரு டெட்டானஸ் போட்டுக்கறியா? என்கிட்டே இருக்கு."

"தும்முனாக்கூட ஊசி போடுவியே நீ."

பஞ்சைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, கை கழுவி விட்டு வந்து அமர்ந்து, "வேலை எப்படி இருக்குன்னு கேக்க மாட்டியா?" என்றாள்.

"சொல்லு."

"வந்து சேர்ந்த அன்னைக்கே தயாரா நிக்கிது வம்பு."

"என்னாச்சி?"

ஏ.ஆர்.பியுடன் ஏற்பட்ட மோதலை விவரித்தாள் பாரதி. மௌனமாக இருந்தான் கிருஷ்ணன்.

"என்ன பேச மாட்டேங்கறே?"

"காரைக்குடில வாங்கின காயமே இன்னும் ஆறலை சரியா, அதுக்குள்ளே இன்னொரு வம்பா?"

''நானா வம்புக்குப் போறேன்?''

''நீ போகலை பாரதி. ஏன் அனாவசியமா பகையை உருவாக்கிக்கறே?''

''பகை வரக்கூடாதுன்னு பார்த்தா அந்தாளுக்கு உடந்தையா போகணும். பொய் சர்ட்டிஃபிகேட் கொடுக்கச் சொல்றான். கொடுக்கச் சொல்றியா?''

''பாரதி, நீ பக்கா ஜெண்டில்வுமனா இருக்கிறது, நடந்துக்கிறது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். பாதிக்கப்படறவங்களோட கோபத்தால உனக்கு எந்தப் பிரச்னையும் வந்துடக்கூடாதேங்கிறதுதான் என் கவலை.''

''காந்தி வாங்காத அடியா? என்னடா இது இப்படி அடி வாங்க வேண்டியிருக்கேன்னு சோர்ந்து போய் தன் அஹிம்சைக் கொள்கையை மாத்திக்கிட்டாரா? இல்லை, லட்சியப் போராட்டத்திலேர்ந்து விலகிக்கிட்டாரா? சுட்டப்போ கூட படுபாவின்னு திட்டலையே... ஹே ராம்ன்னாரே... அந்த அளவுக்கு ஒரு உன்னதமான வாழ்க்கை வாழ முடியாவிட்டாலும் கொள்கைகளை எந்த காரணத்துக்காகவும் விட்டுக் கொடுத்து வாழ எனக்கு விருப்பமில்லை. நேர்மையை நான் கற்பு மாதிரிதான் நினைக்கிறேன். அதுக்கு பங்கம் வர்றப்போ துடிச்சிப் போறேன். பணம் தர்றேன், படுத்துக்கறியான்னு கேக்கறதுக்கும், பதவி நிலைக்கணும்னா பொய் சர்ட்டிஃபிகேட் கொடுன்னு கேக்கறதுக்கும் அதிக வித்தியாசமில்லை. என்னை விலைபொருள் ஆக்கிக்க நான் தயாரா இல்லை. அதை தைரியமா சொல்றதுக்கு தயங்கறதும் இல்லை. இதனால என்ன சோதனைகள், சங்கடங்கள் வந்தாலும் சமாளிக்க முடியும்ங்கிற நம்பிக்கை இருக்கு'' என்று பாரதி கைகளைக் கட்டிக் கொண்டு, கண்களை மூடிக் கொண்டு சொன்னாள்.

'மென்மைப் படுவாய் மனமே! கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே.
பயத்தால் ஏதும் பயனில்லை.''



''யாரு? பாரதியாரா? அப்புறம்?'' என்றான் கிருஷ்ணன்.

பாரதி மேலும் தொடர்ந்தாள்.

''அச்சமில்லை, அமுங்குதலில்லை,
நடுங்குதலில்லை, நாணுதலில்லை,
பாவமில்லை, பதுங்குதலில்லை,
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்;
அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்;
கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம், எதற்கும் அஞ்சோம்.
எங்கும் அஞ்சோம். எப்பொழுதும் அஞ்சோம்.''

பாரதி கண்களைத் திறந்த போது தேங்கியிருந்த இரு துளிகள் இமைதாண்டி வெளிப்பட்டன.

கிருஷ்ணன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டு, ''மன்னிச்சுமா, உன் மனசு புண்படும்படியா பேசியிருந்தா மன்னி, ரொம்ப சென்சிடிவா இருக்காதே. வித்தியாசமா நீ இருக்கிறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. ஐ ப்ராமிஸ், உன் கொள்கைகளிலே நீ உறுதியா நிற்க... நான் எப்பவும் துணையா இருப்பேன். வேற பேசலாம். அப்புறம், என்ன சினிமா பார்த்தே?'' என்றான்.

கொஞ்ச நேரமாயிற்று பாரதி கலகலப்பான மனநிலைக்குத் திரும்புவதற்கு.

''அம்மாவை வேணும்னா இங்கே கொண்டாந்து வச்சிக்கிறியா பாரதி? உனக்கு பாதுகாப்புக்கு பாதுகாப்பு, உதவியாவும் இருப்பாங்களே...''

''அப்புறம் தம்பி எங்கே சாப்பிடுவான்? தனியா கஷ்டப்படணும் அவன். இங்கே ஒண்ணும் சிரமம் இல்லை. ராத்திரி துணைக்கு ஒரு ஆயா படுத்துக்கறாங்க கிருஷ்.''

''நான் புறப்படட்டுமா? நாலு நாளைக்கு ஒரு தடவை வந்து பார்க்கறேன். விடுமுறை தினத்துக்கு தஞ்சாவூர் வந்துடு.''

கிருஷ்ணன் புறப்பட்டுப் போனதும், சேலையை எடுத்து வைத்துவிட்டு, காபி கப்புகளைக் கழுவிவைத்து விட்டு டூட்டிக்குப் புறப்பட ஆயத்தமானாள்.



# 6

சோப்புப் போட்டுக் குளிப்பாட்டப்பட்ட கடலின் நுனியெல்லாம் நுரை. அப்படியும் கடல் நீலமாகத்தான் இருந்தது. நிலா தயவில் மினுக்கிக் கொண்டது. கம்பு நட்டு கட்டப்பட்டிருந்த படகுகளைத் தாலாட்டிக் கொண்டிருக்க, பாடுவதாக நினைத்து அலைகள் ஓவர் ஆக்ட் செய்து கொண்டிருந்தன.

சேது சிமெண்ட் பூசின ஏல மேடையில் உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தான். வெகு தூரத்தில் லைட் ஹவுஸ் தெரிந்தது. மினுக் என்ற அதன் ஒளிச்சுழற்சி தெரிந்தது. உப்புக்காற்று முகத்தில் சுள் என்று அறைந்தது. தோளின் துண்டெடுத்து தலையில் கட்டிக் கொண்டான். சட்டையில் அவிழ்ந்திருந்த பட்டன்களைப் போட்டுக் கொண்டான்.

கையில் டார்ச் லைட்டுடன் அதன் வெளிச்சத்தை கீழ் பக்கமாகத் திருப்பிப் பிடித்துக் கொண்டு கை வீசி யாரோ நடந்து வந்தார்கள்.

சேதுவை மிகவும் நெருங்கினதும்,

"வா மணி" என்றான் சேது.

மணி டார்ச்சை அணைத்து விட்டு ஒரு எம்பு எம்பி மேடை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, "சுட்ட சோளம் சாப்பிடறியா?" என்று நீட்டினான்.

வாங்கிக் கொண்டு, "அப்புறம்? எதுக்கு வரச் சொன்னேன் தெரியுமா?"

"சொல்லுண்ணே?"

"நாளன்னைக்கு சரக்கெடுக்கப் போகணுமாம்."

"அடிரா சக்கை. அடுத்த சான்சா?"

"பொறு, என்ன காரணம்னு தெரியலை. மணி வேணாம். மெய்யப்பனைக் கூட அழைச்சுட்டுப் போன்னு சொன்னான் ஏ.ஆர்.பி."



"அப்படியோ, என்னை சந்தேகப்படறானா?"

"அப்படித்தான் தெரியுது."

"அப்ப ரொம்ப ஆபத்தாச்சேண்ணே. தெரிஞ்சு போச்சா?"

"அதெப்படித் தெரியும்?"

"கனகா வாயி டமாரம். செறுக்கி விஷயத்தை வெளில விட்டுட்டாளா?"

"உளறாதே. அவளும் சம்மந்தப்பட்டிருக்கா. அவ வீட்டுப் பத்தாயத்துலதான் இன்னும் சரக்கு இருக்கு. பங்கு தாறதா பேசியிருக்கோம். எந்த கூறு கெட்டவளாவது வெளிய சொல்வாளா?"

"பின்னே விஷயம் எப்படித் தெரிஞ்சுது?"

"தெரிஞ்சிருந்தா இவ்வளவு நேரம் நம்மை விட்டு வைப்பானா மணி? ஏதோ ஒரு சந்தேகம்னு நினைக்கிறேன். இந்த தடவை நான் யோக்யமா நடந்துக்கலாம்னு முடிவு பண்ணிருக்கேன். அப்பதான் என்மேல நம்பிக்கை வரும்."

"சரி, என் கதி? இத பாருண்ணே. ஒண்ணு செய்யலாம்."

"என்ன?"

"என் பங்கைப் பிரிச்சிக் கொடுத்திடு. எப்டியோ மும்பாய் போய் காசாக்கிடறேன். பொருளா இருக்கிற வரைக்கும் பிரச்னை அதிகம். பணமா மாத்தி அங்கே சரளா பேர்ல பேங்க்ல போட்டு வச்சிட்டேன்னு வையி - எந்த நிமிஷம் என்னை அடிச்சி துரத்தினாலும், ஓடிப்போய் சந்தோஷமா இருப்பேன்."

"சரக்கோட ஓரேயடியா ஓடிடேன்."

"அதான் தப்பு. துரத்திப் பிடிப்பான். எந்த மூலை முடுக்குக்குப் போனாலும் விடமாட்டான். வயத்துல கத்தி செருகிடுவான். சமாதி பண்றதுக்கு இருக்கவே இருக்கு கடல்."

"என் சரக்கு?"

"அதை ஒரேடியாய் விக்காதே. வேற மாநிலம் போய் கொஞ்சம் கொஞ்சமா வித்திடு. இங்கேயே நம்பிக்கையான ஆளா நடந்துக்கிட்டே சரண்டு. கனகா மூச்சு விடாத வரைக்கும் பத்தாயம் உனக்கு

சிசர்வ் பேங்க் கஜானா மாதிரி. வெளிய தெரியவே தெரியாது.''

மேலும் விவாதித்து, முடிவுக்கு வந்தான் சேது. மணியின் பங்கை கொடுத்து விடுவதென்று. பேச்சுப்படி ஏ.ஆர்.பி.யிடம் ஒரு வாரம் லீவு வேணும். அக்கா பொண்ணு வயசுக்கு வந்திருக்கு என்று பு... சுற்றிவிட்டு நள்ளிரவில் கனகா வீட்டுக்கு மாட்டு வண்டியோடு வந்தான் மணி.

கதவு சாத்தினதும் சேது, கனகா, மணி மூவருமாக மூட்டைகளை வெளியே எடுத்துப் பிரித்து டேப்ரிக்கார்டர்கள், வீடியோ பிளேயர்கள், கேஸட்டுகள், துணிகள், ஜிப்புகள், கால்குலேட்டர்கள் என்று பிரித்து பங்கு வைத்துக் கொண்டு மணிக்கு கொடுத்தது போக மற்றவற்றை உதிரி உதிரியாக பத்தாயத்திற்குள் போட்டு கீழே கூடை எடுத்து கூடையில் நெல் பிடித்து... பொருள்களின் மேல் கொட்டி மூடினார்கள்.

ஜல் ஜல் என்று மாட்டு வண்டியில் ஊர் எல்லையைத் தாண்டிய மணி, காத்திருந்த சொந்தக்காரனின் டாக்ஸியில் பொருள்களை அடுக்கின பெரிய சூட்கேஸ்களை ஏற்றிக் கொண்டு பறந்தான்.

* * * *

''எப்பலேர்ந்து ராணி, கலர் பாடி போட ஆரம்பிச்சே?''

''ச்சீ. போங்க. வெக்கமா இருக்கு.''

''வெக்கமா? உனக்கா?''

''ஏன், வராதாக்கும்.''

''முப்பத்தாறு போட்டோவுக்கு போஸ் கொடுக்கிறப்போ வராத வெக்கம் இப்பப் புதுசா வந்துடுச்சான்னு கேக்கறேன்.''

''போதை மாத்திரையைப் போட்டுக் கொடுத்து எனக்குத் தெரியாம எடுத்துட்டு பேச்சா பேசறீங்க? அசிங்கம் பிடிச்ச ஆளுப்பா. என்ன ரசனையோ?''

''அதில்லடி கண்ணு விஷயம். வேற தத்துவம்



இருக்கு இதில.''

''படுக்கை சமாச்சாரத்துல கூட தத்துவமா?''

''இல்லையா, பின்னே? வேணாம். உனக்குப் பிடிக்காது. சோடா உடை.''

''எனக்கு வேணாம். சொல்லிட்டேன்.''

''யாரு விட்டா? விலை தெரியுமா உனக்கு? பாருக்குப் போனா இது அறுபது மில்லி எண்பது ரூபா. வெளிநாட்டு சரக்கு. சாராயத்தைத் தவிர வேறெதைப் பார்த்திருக்கப் போறே கழுதை! கிளாஸைக் காட்டு.''

''வேணாம்னா விடுங்களேன்.''

''ஏன் வேணாம்? ஜோரா இருக்கும். பூ கொட்டி மேல படுத்த மாதிரி இருக்கும்.''

''அதெல்லாம் சரிதான். அப்பறம் எனக்குத் தெரியாம போட்டோ பிடிப்பீங்க.''

''சீச்சீ. அதான் ஒரு தடவை ஆச்சே. சோடா போதுமா. இன்னும் கொஞ்சம் ஊத்தவா?''

''உரைக்குமா? இன்னும் கொஞ்சம் ஊத்திடுங்க.''

''ரைட். இந்தா இரு. சியர்ஸ் சொல்லணும்டி கண்ணு. சியர்ஸ்! இப்பக் குடி. மெதுவா. வேணாம் வேணாம்னே, சர்பத் குடிக்கிற மாதிரி குடிக்கிறே... இன்னும் கொஞ்சம் துணி இருக்கே... என்னத்துக்கு அது? கழட்டிடலாம். திரும்பு.''

''லைட்டு... லைட்டு.''

''அட! யாரு வர்றா இங்கே... திரும்பு. அச்சு பதியுது பாரு. இவ்வளவு டைட்டா போடாதே. எப்படி இருக்கு போதை?''

''சுகம்மா இருக்கு. சுத்துது.''

''சாஞ்சிக்கோ. அண்ணன்கிட்டே கேளு. உன்னை வீடு பார்த்து பர்மனென்ட்டா வச்சிடறேன். கண்டவனை கட்டிப் பிடிக்க வேண்டியதில்லை பாரு.''

''ஆமா! தண்ணில பேசற பேச்சு, தெளிஞ்சதும் போச்சு. நாலு தடவை சொல்லிட்டிங்க. ரெண்டு பவுன்ல ஜிமிக்கி நானும் ஏழு தடவையா கேட்டுக்கிட்டிருக்கேன். பேச்சுதான் பெரிசு.''

''நாளைக்கே ஜிமிக்கி வாங்கிடலாம். இப்போ

பேச்சை நிப்பாட்டு."

இன்டர்காம் ஒலிக்க...

எரிச்சலாய் எடுத்தான் ஏ.ஆர்.பி.

"அய்யா, ரத்னம் வந்திருக்கான். ரொம்ப அவசரமா உங்களைப் பார்க்கணுமாம்."

"எழவு! எப்பத் தொந்தரவு பண்றதுன்னே தெரியாதாடா முண்டங்களா!"

"சொன்னேன்! - அய்யா தனியா இல்லைன்னு அப்படியும் ரொம்ப அவசரம்னு சொன்னதாலதான்..."

"எங்கே அவன் ரத்னம்?"

"இதோ எதுர்க்க உக்காந்திருக்கான்."

"பேசச் சொல்லு."

"ஹலோ... வணக்கம் அய்யா."

"நல்ல நேரம் பார்த்துடா வணக்கம் சொல்ல. என்ன அர்ஜன்ட்டு?"

"கஸ்டம்ஸ்ல எட்டு லட்ச ரூபா சரக்கு மாட்னிச்சில்லையா?"

"ஆமாம். அதுக்கென்ன?"

"அது சம்பந்தமா ஒரு துப்பு கிடைச்சிருக்குங்க."

"ஒரு பத்து நிமிஷம் அந்த துப்பு காத்திருக்குமில்லே?"

"காத்திருக்கும் அய்யா."

"உக்காந்திரு. வந்துட்டேன்."

ராணியை அணைத்துக் கொண்டு, "போச்சு, பாதி போதை தெளிஞ்சி போச்சி. ம். சீக்கிரம். உன்னைப் பாதில அனுப்பவும் மனசு வரல்லை" என்றான் ஏ.ஆர்.பி.

பத்து நிமிடம் கழித்து "நீ சுகம்மா தூங்கிட்டு காலைல வெள்ளன எந்திரிச்சி போவலாம். எனக்கு ஜோலி இருக்கு... வர்றேன்" என்று வெளியேறி படியிறங்கி வந்தான்.

கூடத்தில் அமர்ந்திருந்த ரத்னமும், மற்றொரு வேலைக்காரனும் எழுந்து கொண்டார்கள். பீட்டர் குஷன் சோபாவில் உட்கார்ந்து, "வெவரமா சொல்லு."



[illegible] கைகட்டிக் கொண்டு சொன்னான்:

"நம்ம சம்சாரம் இன்னிக்கு ஊருக்குப் போகுதுங்க [illegible] வீட்டுக்கு. அங்கே கொஞ்சம் கஷ்ட [illegible]. பத்து கிலோ அரிசி வாங்கிட்டுப் போன்னு [illegible] கொடுத்திருந்தேன். இவ வாங்கி வைச்சிருந்த [illegible] பார்த்தேன். 'க்'குன்னு ஆய்டுச்சி. எதுடி [illegible] இந்த பாலிதீன் சாக்குன்னு கேட்டேன். [illegible] இல்லை கனகா..."

"யாரு?"

"அதாங்க யாரு வேணாலும் காசு போடற உண்டியலு! பச்சைத் தே...! அவ வீட்ல போய் கேட்டேன். எடுத்துத் தந்தான்னு சொன்னா என் சம்சாரம். பையை ஆராய்ஞ்சேன். சிவப்பு மார்க் போட்டிருக்கு. நம்ம சரக்கு கொண்டு வர பயன்படுத்தற அதே சாக்கு. இன்னொரு விஷயமுங்க. நம்ம மணியும் சரி, சேதுவும் சரி, கனகாவோட ரொம்ப இழைவாளுங்க. கணக்குப் போட்டுப் பார்த்ததுல..."

"என்டா தீவட்டி கம்னாட்டி! யோசனை என்னடா யோசனை! ரெண்டு பேரை அழைச்சுக்கிட்டு நேரா கனகா வீட்டுக்குப் போயி வயத்துல நாலு உதை விட்டா துப்பறா செறுக்கி. வீடு பூரா அலசிப் பார்த்துட வேண்டியதுதானே?"

"அய்யாக்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு..."

"இத பாரு! தாமசம் பண்ணாதே. உடனே போ. சரக்கு அங்கே இருந்துச்சின்னு வையி. அந்த் சேதுப் பயலை இழுத்துக்கிட்டு தென்னந்தோப்புக்கு கொண்டாந்துடு. நான் இங்கே இருக்கேன். எனக்கு சேதி சொல்லி விடு."

* * * *

ரத்னம் ஜரூராகப் புறப்பட்டு நாலு பேர் கொண்ட படை திரட்டிக் கொண்டு நேராய் கனகாவின் வீட்டுக்குப் போனான். அறைந்து தட்டினான்.

"கதவைத் திறடி பத்தினி!"

கதவைத் திறந்த கனகாவின் நெஞ்சில் காலை உயர்த்தி உதைத்துத் தள்ள, அவள் அப்படியே தடுமாறி

மல்லாக்க விழுந்தாள். பட்டன் கழண்டா... பதறினாள்.

நாலுபேரும் நுழைந்து கதவு சாத்தினார்கள்.

''என்ன இது! அக்கிரமம்!'' என்று கத்தினா... எழுந்து உட்கார்ந்தாள். விழித்தாள்.

ரத்னம் அவள் அருகில் மண்டியிட்டு அமர்ந்... ''இங்கே பாருடி கத்தினே, சொருகிடுவேன்'' என்... பட்டன் கத்தியை விரித்துக் கொண்டு, அவ... கூந்தலை மறுகையால் இறுக்கமாகப் பற்றி... கொண்டு, ''சொல்லு, சேது உன்கிட்டே எத்தனை மூட்டை சரக்கு கொடுத்து வச்சிருக்கான்?''

''என்ன மூட்டை?''

''ம். மொளகா மூட்டை. ரத்தம் பார்க்காம சொல்ல மாட்டியா?'' என்று கத்தியின் முனையால் அவ... தாடையை உயர்த்த. கூர்பட்டு ரத்தம் வந்தது. மடியி... சொட்டியது.

''ஆ!'' என்றாள் கனகா. ''எனக்கு ஒண்ணும் தெரியாது. என்னை விடு.''

''அப்படியா? வீட்ல தேடப் போறோம். எதாச்சு... கிடைச்சிச்சின்னு வச்சிக்க. கசாப்புக்கடையை விட மோசமா உன்னைத் துண்டு போடுவேன். ரெண்டு தடவை ஜெயிலுக்குப் போய்ட்டு வந்தவன்.''

''என்னை ஒண்ணும் செய்யாதே. சொல்லிடறேன்.''

கனகா அட்சரம் பிசகாமல் அனைத்தும் சொன்னாள். பத்தாயத்தில் இருந்த பொருள்கள் அனைத்தும் வெளியே எடுக்கப்பட்டன.

''மெய்யப்பா, நீ இதையெல்லாம் கட்டி நம்ம இடத்துக்குக் கொண்டு போ. சேடப்பா, நீ போய் அய்யாகிட்டே விபரத்தைச் சொல்லி தோப்புக்கு வரச் சொல்லு. வா காசி, நீயும் நானும் படகுத் துறைக்குப் போலாம். சேது அங்கேதான் படுத்துக்கிடப்பான்.'' என்றான் ரத்னம் சுறுசுறுப்பாக. ''பங்கு போட்டுக்கலாம்னு கழுதை பதுக்கியா வச்சே? இரு. உன்னை வந்து பேசிக்கிறேன்.''



## 7

தென்னந்தோப்பில் காற்று ஜிலுஜிலுத்தது. கயிறுக் கட்டிலில் உட்கார்ந்திருந்தான் ஏ.ஆர்.பி. வானத்தில் பாதி நிலாவின் யாத்திரை. கொறித்துப் போட்ட கடலைத் தோல்களாய் சிதறிய நட்சத்திரங்கள். சாமரம் வீசிக் கொண்டு மேகங்கள்.

மலைபோல் குவிக்கப்பட்ட உரிக்க வேண்டிய தேங்காய்கள். மணலில் குத்தி நடப்பட்டிருக்கும் கூரான கடப்பாறைகள். மற்றொரு புறம் உரித்த மட்டைகளின் மற்றொரு மலை. காவலுக்காக ஒரு மரத்தில் கட்டிப் போடப்பட்டிருந்த ராஜபாளையத்து லொள்!

இந்தப் பக்கம் இருவர் இழுத்துப் பிடித்துக் கொள்ள, வியர்த்துக் கொட்டும் விழி விரித்த சேது. தவிர ஏ.ஆர்.பியின் கை பொம்மைகள். அமைதி.

''என்னடா ரத்னம் இப்படி துரோகம் பண்ணிட்டான் இவன்?'' கலைத்தவன் ஏ.ஆர்.பி.

''நீ செஞ்சதுக்குப் பேரென்னடா? என் பொண்டாட்டியைக் கதறக் கதற அனுபவிச்சி கடல்ல போட்டுட்டு, எவன் கூடவோ ஓடிட்டான்னு கதை கட்டி விட்டியே, அதுக்கு பேரு துரோகமில்லையா?'' என்று வசனம் சொன்னான் திமிறின சேது.

''அட துப்பறிஞ்சு கண்டுபிடிச்சியா மாப்ளை? பொறில மாட்டிக்கிட்ட எலி வீரம் பேசுதய்யா. என்னடா சேது. அதுக்காக பழி வாங்கற நடவடிக்கையில எறங்கினியா?''

அமைதியாக இருந்தான் சேது.

''வாயால கேட்டா சொல்ல மாட்டான்ய்யா'' என்று ரத்னம் முழுக்கை சட்டையின் முனையை மேலே இழுத்துக் கொண்டு சேதுவை நெருங்க... ''வேணாம்'' என்றான் ஏ.ஆர்.பி.

''அவன் மேல ஒரு சின்னக் கீறல் கூ விழக்கூடாது. சந்தோஷமா சாகடிச்சிடலா எப்படின்னா ஒரு சின்ன விபத்து. அதாவது... ஙநு கண் முழிச்சி தேங்கா உரிச்சா... அதிக சம்பா கிடைக்கும். அதுக்காக நம்ம சேது இங்கே இ டத்திலே தேங்கா உரிச்சிக்கிட்டிருந்தான். கொஞ் தண்ணி வேற போட்டிருந்தான். என்ன ஆச் கவனப் பிசகா இருந்ததாலே குத்தி வச்ச கடப்பாற நெஞ்சல பாய்ஞ்சிடுச்சி. செத்துட்டான். எப்படி?''

சேதுவின் கண்களில் மரண பயம் குடி வந்தது எச்சில் ஊறியது. விழுங்கினான்.

''வேணாம். வேணாம்'' என்று அலறினா தவித்தான். மருண்டான்.

''மாப்ளைக்கு மூக்கை பிடிச்சிக்கிட்டு கொஞ்ச சாராயத்தை உள்ளே இறக்குங்கடா முதல்ல.''

சேது திமிறத் திமிற மூன்று பேராய் சேர்ந்து அ பாட்டில் சாராயத்தை வலுக்கட்டாயமாகப் புகட்டினார்கள்.

''ரெண்டு பேர் கையைப் பிடிங்க. ரெண்டு பே காலைப் பிடிங்க. குப்புற தொங்கற மாதிரி தூக்குங்க. ரைட்.. அப்படித்தான். உயரமா தூக்கி... கடப்பாறை நெஞ்சல செருகுற மாதிரி அப்படியே நச்சுன்னு கீழே இறக்குங்க. இருங்க. கத்தக்கூடாது அவன். வாயைத் துணி போட்டுக் கட்டுங்க.''

என்னவோ கல்யாண ஏற்பாடுகள் போல கட்டிலில் அமர்ந்து. கால் மேல் கால் போட்டுக் கொண்டு ஏ.ஆர்.பி. சொல்லிக் கொண்டிருக்க...

சொன்னபடி செயல்பட்டு...

சொத் என்று கடப்பாறையை மையமாக வைத்து. திமிறின சேதுவின் உடம்பை இறக்க... எல்லாத் திசைகளிலும் பீய்ச்சியடித்தது ரத்தம்!

கடப்பாறை மார்புக்கு கீழே. வயிற்றுக்கு மேலே சொருகி, நடு முதுகில் வெளிப்பட்டிருந்தது. சிகப்பு பூசிக் கொண்டிருந்த உடம்பு துள்ளியது. துடித்தது. அடங்கியது.

சேதுவின் வாயிலிருந்து துண்டு எடுக்கப்பட்டது.



ஏ.ஆர்.பி. எழுந்து கொண்டு ''நாயை அவுத்து இழுத்துட்டு வந்துடுங்க. எல்லோரும் போங்க.'' என்றான். வெளியே நடந்தான்.

அனைவரும் நடந்தார்கள்.

ஹோட்டல் கல்லா மேஜையில் இரும்புக் கம்பியில் பில் காகிதம் குத்தப்பட்டிருப்பது போல அந்தக் கடப்பாறையில் கோர்க்கப்பட்டிருந்த சேதுவின் தலை பூமி பார்க்கத் தொங்கியது. அதில் விழிகள் திறந்திருந்தன.

* * * *

நைட் டூட்டியில் இருந்தவர்கள் டாக்டர் வெங்கடேசனும். டாக்டர் பாரதியும். வெங்கடேசன் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து தொடையில் காயம் பண்ணிக் கொண்டிருந்த ஒரு அவுட் பேஷண்டுக்கு டிரெஸிங் செய்து கொண்டிருந்தார்.

பாரதி வலி தாள முடியவில்லை என்று கத்தின வயிற்றில் ஆபரேஷன் செய்யப்பட்ட ஒரு நோயாளிக்கு அவனைத் தூங்கச் செய்ய ஒரு ஊசி போட்டுவிட்டுத் திரும்பி தன் அறைக்கு வந்த போதுதான்...

ஆஸ்பத்திரி வாசலில் ஏழெட்டு பேர் கூட்டமாக வருவதைப் பார்த்தாள். அவர்களில் ஒருவன் வேகமாக ஓடி வந்து பதறினான்.

''டாக்டரம்மா... தோப்புல தேங்கா உரிக்கிறப்போ தவறி விழுந்து நட்டு வச்ச கடப்பாறையை வயத்துல வாங்கிக்கிட்டான். வெள்ளம் மாதிரி ரத்தம் போயிடுச்சி. சத்தம் கேட்டு பக்கத்து தோப்புல காவலுக்கு இருந்த நான் போய் பார்த்தேன். லேசா மூச்சு இருக்குதுங்க.''

சேதுவை பெஞ்சில் கிடத்தினார்கள். வயிற்றில் துணி கட்டியிருந்தார்கள். அது முழுக்க சிவப்பாகி மேலும் சொதசொதப்பாகிக் கொண்டிருந்தது.

பாரதி சேதுவின் பல்ஸ் பார்த்தாள். கண்களின் கீழ் இமைகளை இழுத்துப் பார்த்தாள். டாக்டர் வெங்கடேசனை அழைத்தாள். தலைமை நர்சை

அழைத்தான். லேப் டெக்னீஷியனை அழைத்தான். அவசரமாக உத்தரவுகள் இட்டான்.

"முதல்ல போலீசுக்கு ஒரு போன் பண்ணி தகவல் கொடுங்க. வந்து ஒக்கே சொல்லிட்டா பிரச்னையில்லை. ரத்தம் என்ன குருப்னு பாருங்க. குத்து இதயத்துல விழல. இதயத்துக்குக் கீழேதான் விழுந்திருக்கு. உடனே ஆபரேஷன் பண்ணியாகணும். ஏற்பாடு பண்ணுங்க. பிழைக்கிறது கஷ்டம். ஆனாலும் அதிகபட்சம் முயற்சி பண்ணுவோம்."

தகவல் போய் இன்ஸ்பெக்டர் குமார் வந்தார். சேதுவை தூக்கி வந்தவர்களைப் பார்த்து முதல் கேள்வி கேட்டார்.

"யாருய்யா இந்த ஆளு?"

"சேதுன்னு பேருங்க. நம்ம ஏ.ஆர்.பி.அய்யாவோட லான்ச்ல டிரைவரா வேலை பார்க்கறாங்க. அவரோட தோட்டத்துல தேங்கா உரிச்சிக்கிட்டிருந்தப்போ தவறி விழுந்திருக்கணும். சாராய வாடை மூக்கைத் துளைக்குது."

ஏ.ஆர்.பி. என்றதுமே இன்ஸ்பெக்டர் சந்தேகத்தைக் கழற்றி தனியாக வைத்து விட்டார். பாரதியை அணுகி, "இது ஆக்ஸிடெண்ட் மாதிரிதான் இருக்கு. நீங்க எடுத்துக்கலாம். பிழைக்க வைக்க முயற்சி பண்ணலாம்." என்று விட்டு பைக்கைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டார்.

சேதுவை ஸ்ட்ரெட்சரில் கிடத்தி ஆபரேஷன் தியேட்டருக்குள் தள்ளிச் சென்றார்கள்.

பாரதி கிளவுஸ் அணிந்தாள். தியேட்டருக்கான உடை அணிந்தாள். வெங்கடேசனும், மற்றொரு நர்சும் உதவ, ஆபரேஷனை ஆரம்பித்தாள்.

* * * *

போன் அடித்த போது, தூக்கம் கலைந்து ரத்னம்தான் கொட்டாவியுடன் எழுந்தான்.

"யாரு பேசறது? ஏ.ஆர்.பி.இருக்காரா? நான் இன்ஸ்பெக்டர் பேசறேன்."

"வணக்கமுங்க. அய்யா அசந்து அசதியாத் தூங்கறாரு. எழுப்பட்டுமாங்க?"



"வேணாம். ஒரு தகவல் சொல்லு. உங்ககிட்டே சேதுன்னு யாரும் வேலை பார்க்கறானா லான்ச்சல?"

"ஆமாங்கய்யா."

"அவன் எங்க இருக்கான் இப்போ?"

"தென்னந்தோப்புல தேங்கா உரிச்சிக்கிட்டிருக்கான். ராத்திரி வேலை பாக்கறதுன்னா அவனுக்குப் பிடிக்கும். ஏனுங்கய்யா?"

"உரிக்கிறப்போ தவறி கடப்பாறை வயத்திலே செருகிடுச்சி போலிருக்கு. ஜனங்க தூக்கிட்டு வந்து ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்க. உசுரு இருக்கு. ஆனா பிழைக்கிறது சிரமம்னு டாக்டர் சொன்னாங்க. ஆபரேஷன் நடந்துக்கிட்டிருக்கு. அதான் கேட்டேன். காலைல வந்து அய்யாவைப் பார்க்கறேன்னு சொல்லு. எழுப்ப வேணாம்."

வைத்துவிட்டு மாடியேறி உடனே எழுப்பினான் ரத்னம்.

கதவைத் திறந்த ஏ.ஆர்.பி. "என்னடா? இன்னிக்குத் தூங்க விடறதில்லைன்னு வச்சிட்டியா?"

"அதில்லிங்கய்யா... வந்து... சேது சாகலை."

"என்னடா சொல்ற மூதேவி?"

"ஆமாங்கய்யா... கடப்பாறையிலே செருகினோமே தவிர, உசுரு இருக்கா, போய்ருச்சான்னு நாம பார்க்கலை. லேசா ஒட்டிக்கிட்டிருந்துருக்கு. முனகியிருக்கான் போல. யாரோ உதவிக்கு வந்து தூக்கிட்டுப் போயி ஆஸ்பத்திரில சேர்த்திருக்காங்களாம். ஆபரேஷன் நடந்துக்கிட்டிருக்காம். இன்ஸ்பெக்டர் போன் பண்ணிச் சொன்னாரு இப்போ."

பளீர் என்று அவன் கன்னத்தில் இறங்கினது அறை!

"ஏண்டா கம்மனாட்டி. ஆளு செத்தானா, உசுரு இருக்கான்னு கூட பார்க்காம ஏண்டா வந்தே? அடச் சனியனே... பொழைச்சு தொலைச்சான்னா

சிக்கல்டா."

"பொழைக்கிறதுக்கு சான்ஸ் கம்மின்னு டாக்டர் சொன்னதா இன்ஸ்பெக்டர் சொன்னார்."

"அட! பொழைக்கணும்னு இல்லைடா. பத்து நிமிஷம் சுயநினைவு வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தாப் போதும். தொலைஞ்சோம். இரு."

ஏ.ஆர்.பி.ஸ்டாண்டில் தொங்கின சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே வந்தான்.

"மணி என்னடா?" என்று கண்களைக் குறுக்கி வாட்ச்சைப் பார்த்தான்.

1.30 ஆகியிருந்தது.

கீழே இறங்கி வந்து சோபாவில் உட்கார்ந்து அவசர அவசரமாக நகம் கடித்தான். துப்பினான்.

"ரத்னம், நீ ஜேம்ஸ், இல்லைன்னா சேட்டப்பனைக் கூட்டிக்க. ஆஸ்பத்திரிக்குப் போ. ஆபரேஷன் என்ன ஆச்சின்னு தெரிஞ்சுக்க. ஒருவேளை பொழைச்சுட்டான்னு வையி... ம்கூம்... அது கூடாது. நீ என்ன செய்வியோ, எது செய்வியோ அவனை மேல அனுப்பிட்டு திரும்பி வந்து என்னைப்பாரு. நான் நம்ம வக்கீலைப் பார்த்து கலந்துகிட்டு வர்றேன்."

ஏ.ஆர்.பி.காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

ரத்னம் ஆஸ்பத்திரிக்குப் புறப்படும்போது நினைவாக கத்தியை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான்.




குவார்ட்டர்சில் உறங்கிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் குமாருக்கு போன். ஸ்டேஷனில் இருந்து சப்-இன்ஸ்பெக்டர் ராம் பேசினார்.

"சார், சூரக்கோட்டையில திருவிழால கோஷ்டி சண்டையாம். ரெண்டு பேர் மண்டை உடைஞ்சிடுச்சாம். இப்பத்தான் தகவல் வந்துச்சி. நான் போகட்டுமா?"



"நீங்க போனா சரியா வராது. ஜீப் நிக்குதா?"

"நிக்குது சார்."

"நாலு கான்ஸ்டபிள்சை எத்தி இங்கே குவாட்டர்சுக்கு அனுப்புங்க. நான் யூனிஃபார்ம் மாட்டிக்கிட்டு ரெடியாயிடறேன். டி.எஸ்.பி.க்கு ஒரு கால் போட்டு சொல்லிடுங்க."

பத்தாவது நிமிடம் இன்ஸ்பெக்டர் ஜீப்பில் புறப்பட்டு சூரக்கோட்டைக்கு விரைய... ஸ்டேஷனில் ஒலித்த போனை சப்-இன்ஸ்பெக்டர் ராம் எடுத்தார்.

"ஹலோ... இன்ஸ்பெக்டரா?"

"இல்லைங்க. அவர் வெளில போயிருக்காரு. நான் எஸ்.ஐ.பேசறேன். நீங்க யார் மேடம்?"

"நான் ஜி.ஹெச்சிலேர்ந்து சி.எம்.ஓ.பேசறேன். ரொம்ப அவசரமா நீங்க ஒரு நடவடிக்கை எடுக்கணும் எஸ்.ஐ.சார்."

"என்ன? சொல்லுங்க டாக்டர்?"

"இங்கே கடப்பாறைக் குத்துப்பட்ட ஒரு எமர்ஜென்சி கேசுக்கு ஆபரேஷன் செஞ்சேன். ஆள் இன்னும் அபாய நிலையிலேதான் இருக்கான். ஆனா உணர்வு ஒரு தடவை திரும்பினப்போ பேச முடிஞ்சது. 'நடந்தது விபத்து இல்லை. கொலை'ன்னு சொன்னான். மறுபடி மயங்கிட்டான். எந்த நேரமும் மறுபடி உணர்வு வந்து அவன் பேசலாம். அவன்கிட்டேர்ந்து மரண வாக்குமூலம் வாங்கணும். ரொம்ப முக்கியம் அது."

"இதோ உடனே புறப்பட்டு வர்றேன் மேடம்."

"வாங்க! நாலு கான்ஸ்டபிளோட வாங்க. அவனுக்கு பாதுகாப்பு தேவை. வர்றதுக்கு முன்னாடி நீங்க தஞ்சாவூருக்கு போன் பண்ணி உங்க எஸ்.பி.ஆபீஸ் மூலமா மாஜிஸ்ட்ரேட்டை தொடர்பு கொள்ளுங்க. காரை எடுத்துக்கிட்டு வரச் சொல்லுங்க. இந்த மாதிரி புதுப்பேட்டை ஜி.ஹெச்சல ஒரு விக்டிம் டையிங் டிக்ளரேஷன் கொடுக்கணும்னு சொல்லுங்க."

"சரிங்க டாக்டர்" என்றார் ராம் சுறுசுறுப்பாய்.

*     *     *     *

சேதுவுக்கு ரத்தம் ஏறியது. வயிற்றில் பேண்டேஜ். அருகில் ஸ்டூலில் அமர்ந்து பாரதி, நின்று கொண்டு டாக்டர் வெங்கடேசனும், நர்சும்.

மணி இரவு 2.40. பாரதியின் கண்களைத் தூக்கம் சுழற்றியது. மடியில் ஒரு கிளிப் பேடில் வெள்ளைக் காகிதத்துடனும், பேனாவுடனும் பாரதி, சேதுவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சேதுவின் புஜத்தில் வெங்கடேசன் மூன்று ஊசிகளை நர்ஸ் மாறி மாறி எடுத்துக் கொடுக்க குத்தினார்.

''என்ன டாக்டர், மறுபடி நினைவு திரும்புமா?'' என்றாள் பாரதி.

''சொல்ல முடியாது. ஆனா பல்ஸ் இறங்கிட்டிருக்கு. பிழைக்கிறதுக்கான வாய்ப்பு இல்லை.''

''கொலைன்னு ஏதோ சொல்ல வந்தான் டாக்டர். கவனிச்சிங்களா?''

''கவனிச்சேன்.''

''இரக்கமே இல்லாம யாரோ கடப்பாறையில இறக்கியிருக்காங்க. யு சி டாக்டர். இவன் ஏ.ஆர்.பி.கிட்டே வேலை பார்க்கிறவனாம். ஏ.ஆர்.பீயை நமக்குத் தெரியும். எனி ஹவ் இவன் வாயைத் திறந்து சொல்லாத வரைக்கும் நாமா எதையும் முடிவு செய்துக்கறது தப்பு.''

பூட்ஸ் சப்தத்துடன் உள்ளே வந்தார் ராம்.

''என்னாச்சு. அப்புறம் மறுபடி பேசினானா?''

''இல்லை. அதுக்குத்தான் வெய்ட் பண்றோம். மாஜிஸ்ட்ரேட்டுக்கு...''

''போன்ல வெச்சதுமே வயர்லெஸ்ல தகவல் சொல்லிட்டேன். அனேகமா வந்துக்கிட்டிருப்பாரு...'' என்று ராம் மற்றொரு ஸ்டூலில் அமர்ந்து, ''ரூம் வாசல்ல ரெண்டு கான்ஸ்டபிள்லை நிறுத்தியிருக்கேன். ஆஸ்பத்திரி வாசல்ல ரெண்டு பேரை நிறுத்தியிருக்கேன். போதுமில்லே?''

''போதும்'' என்றாள் பாரதி.

*     *     *     *



ஹாலில் குறுக்கே, நெடுக்கே நடந்து கொண்டிருந்த ஏ.ஆர்.பி - ஓடி வந்து மூச்சிரைத்த செட்டப்பனை, ''சொல்லு? என்னாச்சு? சேது செத்துட்டானா?'' என்றான் ஆர்வமாய்.

''இல்லை, உசுரு இருக்கு. போலீஸ் வந்து ரூம் வாசல்ல நிக்குது. எஸ்.ஐ.ராம் வந்திருக்கார். என்ன செய்றதுன்னு தெரியாம கையைப் பிசைஞ்சிக்கிட்டு மரத்தடியில நிக்கிறான் ரத்னம்.''

ஏ.ஆர்.பி.போனெடுத்துச் சுழற்ற...

''ஹலோ.. போலீஸ் ஸ்டேஷன்.''

''நான் ஏ.ஆர்.பி.பேசறேன். இன்ஸ்பெக்டர் எங்க போனாருன்னு சொல்லுங்க.''

''சூரக்கோட்டைத் திருவிழாவுல கோஷ்டிச் சண்டைன்னு தகவல் வந்து புறப்பட்டுப் போயிருக்கார் சார். நான் ஹெட் கான்ஸ்டபிள் பேசறேன். வந்தா என்ன சொல்லட்டும்?''

''ஒண்ணும் சொல்ல வேணாம்.''

ரிசீவரை வைத்து விட்டு ஏ.ஆர்.பி.கைகளைப் பிசைந்தான்.

*     *     *     *

''டாக்டர், டாக்டர், கண்ணு முழிக்கிறாரு...'' என்றாள் நர்ஸ்.

சேது மெதுவாக விழிகளையும் உதடுகளையும் பிரித்தான்.

சப்-இன்ஸ்பெக்டர் ராம் சற்றே பதட்டத்தோடு, ''சீக்கிரம் சொல்லுப்பா. உன்னைக் கொலை செய்ய முயற்சி பண்ணது யாரு?''

பாரதி குறுக்கிட்டாள்.

''ஸாரி சார். சட்டப்படி இப்போ அவர்கிட்டே வாக்குமூலத்தை நீங்க வாங்கக் கூடாது. மாஜிஸ்ட்ரேட்தான் வாங்கணும்.''

''அவரை இன்னும் காணோமே...''

''அதனால நான் வாங்கறேன். இந்த டாக்டரையும், நர்ஸையும் சாட்சிகளா வச்சிக்கறேன். நீங்க தயவுசெஞ்சி கொஞ்சம் வெளியே இருக்கிங்களா?''

''சரி டாக்டர். தெளிவா கேட்டு எழுதுங்க.

கையெழுத்து வாங்குங்க. நான் வெளியே இருக்கேன்.''

ராம் வெளியே போனதும் பாரதி பேனாவைத் திறந்து கொண்டு, ''இங்க பாருப்பா, உன் பேரென்ன?'' என்றாள்.

''சேது'' என்றான் பலவீனமாக.

''நான் யாரு?''

''டாக்டர்.''

''இது எத்தனை?'' என்று கையின் கட்டை விரலை மடக்கிக் காட்டிக் கொண்டு கேட்டாள்.

''நாலு''

''ஹி ஈஸ் இன் சவுண்ட் ஸ்டேட் ஆஃப் மைண்ட். நீங்க தாராளமா டிக்ளரேஷன் வாங்கலாம் டாக்டர்'' என்றார் வெங்கடேசன்.

''சொல்லுப்பா. நீ என்ன சொல்ல நினைக்கிறியோ அதை சொல்லு''

சேது மிக பலவீனமாக, நிறுத்தி, நிறுத்தி தன்னைப் பற்றி, தான் ஏ.ஆர்.பி.யிடம் வேலைக்கு இருப்பதைப் பற்றி, தன் மனைவி திலகவதியை ஏ.ஆர்.பி. அடைந்ததைப் பற்றி, தான் மூட்டைகளை ஒதுக்கியதைப் பற்றி, மாட்டிக் கொண்டதைப் பற்றி, தென்னந்தோப்பில் ஏ.ஆர்.பி.யின் உத்தரவின் பேரில் நான்கு பேராக சாராயம் புகட்டி, தூக்கி கடப்பாறையைச் செருகினதைப் பற்றி விவரமாகச் சொல்ல...

அவன் சொன்ன வார்த்தைகளில் ஒரு வார்த்தை மாற்றாமல் அப்படியே எழுதிக் கொண்டாள் பாரதி.

''கையெழுத்துப் போடுவியா? கைநாட்டா?''

''கைநாட்டுதாங்க.''

''நீ சொன்னதை அப்படியே எழுதியிருக்கேன். உன் வாக்குமூலம் இது. படிக்கிறேன் கேளு. சரியா இருக்கான்னு சொல்லு.''

பாரதி படித்துக் காட்டினாள்.

''சரியா எழுதியிருக்கீங்க டாக்டரம்மா.''

ஸ்டாம்ப் பேடில் சேதுவின் இடது கை பெருவிரல் ஒற்றப்பட்டு, வாக்குமூலத்தின் அடியில்



ஒற்றப்பட்டது.

''சேது, வேற ஏதாச்சும் சொல்ல விரும்புறியாப்பா?''

இல்லை என்பதற்குத் தலையாட்டினான். களைப்பு மேலிட கண்களை மூடிக் கொண்டான்.

''டாக்டர், சாட்சிக் கையெழுத்து நீங்க போடுங்க. விமலா, நீயும் ஒரு கையெழுத்தைப் போட்டுடும்மா'' என்றாள் பாரதி.

டாக்டர் வெங்கடேசனும், நர்ஸ் விமலாவும் முழு விலாசம் எழுதி கையெழுத்துப் போட்டு முடித்த போது... ஹக் என விக்கல் போல ஒரு சத்தம் கேட்க... திரும்பிப் பார்த்தார்கள். சேதுவின் தலை சைடில் தொங்கியிருக்க... அவன் கையைப் பிடித்துப் பார்த்து ''ஹி ஈஸ் டெட்'' என்றாள் பாரதி.

அரைமணி நேரம் கழித்து டாக்ஸியில் வந்த மாஜிஸ்ட்ரேட்டிடம் விபரங்களைச் சொல்லி, வாக்குமூலத்தைக் கவரில் போட்டு சீல் செய்து ஒப்படைத்தான்.

''ரொம்பப் பொறுப்பா செயல்பட்டிருக்கீங்க டாக்டர். பாராட்டுக்கள்.''



## 9

ஏ.ஆர்.பி. - தி கிரேட்... கைது செய்யப்பட்டான்.



## 10

பதினைந்து நாள் ரிமாண்டில், கோர்ட் கஸ்டடியில் தஞ்சாவூர் ஜெயில் ஏ.ஆர்.பி.யை வருக, வருக என வரவேற்றது. செய்தித்தாளின் நாலாம் பக்கத்தில் 'ஒரு கொலை வழக்கு தொடர்பாக பிரபல ஏ.ஆர்.பி. கைது' என்று செய்தி வந்தது.

முனைப்பான வக்கீலைப் பிடித்து, மாநில அமைச்சரைப் பிடித்து, கெஞ்சி, கூத்தாடி ஆறாம் நாள் நபர் மற்றும் சொத்து ஜாமீனில் வெளியே வந்தான் ஏ.ஆர்.பி. வக்கீல் வீட்டில் ஒரு மணிநேரம் விவாதித்தான். காரில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு சென்னை போனான்.

மாண்புமிகு டேனைச் சந்தித்தான்.

''எலெக்ஷன் டயத்திலே எவ்வளவு உதவியிருக்கேன். மனசு வைங்க தலைவரே. சிக்கல்லேர்ந்து வெளில எடுத்துடுங்க. ஊட்டில வாங்கிப் போட்டிருக்கிற ஃபிளாட்டை அப்படியே உங்க பேருக்கு மாத்தி எழுதிடறேன். சண்டாளி! ஒரு பொம்பளை என்னை வாரிவுட்டுட்டா.''

''பீட்டர், பதறாதே. நீ வந்து சொல்ற வரைக்கும் நான் காத்திக்கிட்டிருப்பேனா? உனக்கு ஜாமீன் ஏற்பாடு செஞ்ச கையோடு கேசை எப்படி உடைக்கலாம்னு விசாரிச்சேன். தலைகீழா நின்னாலும் நடக்காது. வாக்குமூலம் படுசுத்தமா இருக்கு. முறைப்படி நடந்திருக்குன்றாரு. செஷன்ஸ் கோர்ட் ஜட்ஜ் இதில ஃபேவர் பண்றதுக்கு வாய்ப்பே இல்லையாம்.''

''என்ன தலைவரே. இப்படிச் சொல்லிட்டா எப்படி? நழுவறீங்களே தலைவரே... அந்த செறுக்கியை...''

''ஜில்லா மாத்திடலாமா, சொல்லுங்க. அதை வேணா செய்யலாம்.''

''அதனால எனக்கு என்னங்க பிரயோஜனம்?''

''ஒரு ஐடியா சொல்றேன். சாட்சிக்காரனுக்கு சண்டைக்காரன் மேல்னு பழமொழியே இருக்கு. நேரா ஊருக்கு போங்க. போயி...''

*　　*　　*　　*

கதவைத்திறந்த பாரதி ஆச்சரியப்பட்டாள்.

புன்னகையுடன் உள்ளே வந்தான் ஏ.ஆர்.பி. கையில் சூட்கேஸ். தூரத்தில் கார்.

''என்னை எதிர்பார்க்கலை இல்லை? உக்காந்து பேசலாமா?''



எதுவும் சொல்லாமல் அமைதியாக நின்றாள் பாரதி.

''வாம்மா. இப்படி வந்து உக்காரு. மரண வாக்குமூலத்தை வாங்கி ஒப்படைச்சி கைது பண்ண வச்ச ஆளு எப்படி வெளியில வந்தான்னு பாக்கிறியா? ஜாமீன் வாங்கற பலம் இருக்கு. வாங்கிட்டேன். நேரா பேசுவோம். இப்போ என் தலைக்குப் பக்கமா தூக்குக் கயிறு தொங்குது. நீ மனசு வெச்சா விலகும். வழக்கு விசாரணை அப்போ நீ சொல்லணும். என்ன சொல்லணும்? 'எனக்கும் ஏ.ஆர்.பி.க்கும் முன்னாடியே ஒரு தகராறு. அதனால சேது சொல்லாததைத் எல்லாம் சொன்னதா, ஏ.ஆர்.பி.யை சம்பந்தப்படுத்தி எழுதி கைநாட்டு வாங்கினேன். அந்த வாக்குமூலத்தை கோர்ட் ஏத்துக்க வேணாம். நான் செஞ்ச தப்புக்கு கோர்ட் தர்ற தண்டனையை ஏத்துக்கறேன்.' அவ்வளவுதான். அதிகபட்சமா ஒண்ணும் தண்டனை இருக்காது. உன்னைக் கண்டிச்சி, வேலையை விட்டு அனுப்புவாங்க. அவ்வளவுதான். நான் என்ன செய்றேன். இதே புதுப்பேட்டையிலே கொஞ்சம் காலிமனை வெச்சிருக்கேன். அதிலே 'பாரதி நர்சிங்ஹோம்'னு ஒண்ணு கட்டித் தாரேன். நீ அமோகமா இரு. நம்பிக்கை இல்லையா? இந்தா. இதிலே லட்ச ரூபா அட்வான்சா இருக்கு. நீயே எடுத்து வச்சுக்க. நான் வாக்கு மாற மாட்டேன். என்ன சொல்றே?''

ஏ.ஆர்.பி.சூட்கேசைத் திறந்து வைக்க... உள்ளே நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் கட்டுகள் அடுக்கப்பட்டிருந்தன.

மார்புக்குக் குறுக்கே கைகளைக் கட்டி நின்று கொண்டு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பாரதி கிட்டே வந்தாள்.

''சார், வளவளன்னு பேச வேண்டாம். உங்களுக்கும், எனக்கும் நேரடியா எந்த விரோதமும் இல்லை. ஆஸ் எ டாக்டர் என் கடமை என்னவோ அதைத்தான் செஞ்சேன்.''

''உண்மை... ஆனா அது என்னைப் பாதிக்குதே.''

"அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

"நான் சொன்னபடி செய்ய முடியும்."

"ஸாரி, ஐ யாம் நாட் ஃபார் சேல். உங்க சூட்கேஸை எடுத்துக்கிட்டு வெளியே போகலாம்."

"இங்கே பாரும்மா, நான் நல்ல பாம்பு. என்னை மேல மேல நீ சீண்டாதே."

"இப்போ போறீங்களா, போலீசை கூப்பிடட்டுமா?"

ஏ.ஆர்.பி.பட்டென்று சூட்கேசை மூடிக் கொண்டு எழுந்தான். "ஏய், இங்கே பாருடி! என்ன முறைக்கிறே? எந்த வகையிலேயும் ஒத்து வராதப்போ உனக்கு எதுக்குடி மரியாதை? நான் விலாங்கு மீன், எப்படி கேசிலிருந்து நழுவி வர்றேன் பாரு. கண் குளிர பாரு. அதுக்கப்புறம் நான் வைக்கப்போற கச்சேரிகளை நீ தாங்கப் போறதில்லை. கோர்ட்டையே மதிக்காத என்னை ஆறுநாள் ஜெயில்ல தங்க வச்சிருக்கே... அதுக்கு நான் தரப்போற சன்மானத்தை வாங்கிக்க உன்னைத் தயார்ப்படுத்திக்க. வர்றேண்டி..." என்று வேகமாக நடந்தான்.

* * * *

"அப்புறம்?" என்றான் கிருஷ் - தஞ்சாவூரின் அந்த ஹோட்டலின் புல்வெளி மேஜையில் குளிர்பானம் அருந்திக் கொண்டு.

"அப்புறம் என்ன? சினிமா பாணில சவால்தான். உன்னை ஒரு கை பார்க்கிறேண்டி. ஆய், ஊய்ன்னு ஒரேக் கத்தல்..." என்று சிரித்தாள் பாரதி.

"எவ்வளவு சீரியஸான விஷயம்? எப்படி பாரதி சிரிக்கிறே?"

"குலைக்கிற நாய் என்னைக்காவது கடிச்சிருக்கா கிருஷ்?"

"இந்த நாய் வித்தியாசமான நாய் பாரதி. ரொம்ப மோசமான ஆளு அவன். அடுத்தவன் பொண்டாட்டியை அனுபவிச்சிக் கொன்னு கடல்ல போட்டவன். துடிக்கத் துடிக்க சேதுவை கடப்பாறையிலே குத்தி வச்சவன் - வேற எதையெல்லாம் செய்ய மாட்டான்? பாரதி ஒண்ணு செய். டிரான்ஸ்ஃபருக்கு அப்ளை



...யபி, ஒரு மாசம் லீவு போட்டுட்டு வந்துடு."

"அதெல்லாம் தேவையில்லை கிருஷ். ஏ.ஆர்.பி. இந்த கேஸ்லேர்ந்து தப்பப் போறதே இல்லை. நிச்சயமா மரண தண்டனை. சந்தேகமே இல்லை."

"எனக்கென்னவோ கவலையா இருக்கு பாரதி."

"கவலை கடலினும் பெரிது - அதை கலைக்க... காதலியுடன் சினிமா 'பார்'-ன்னு வள்ளுவர் சொல்லியிருக்கார். வா. போகலாம்" என்றாள் பாரதி உற்சாகம் மாறாமல்.

"பாரதி ஒரு கேரக்டர்!" என்று அவள் தலையில் வலிக்காமல் குட்டினான் கிருஷ்.



## 11

"டாக்டர் பாரதிக்கு அடுத்தபடியாக போலீஸ் தரப்பு சாட்சியான டாக்டர் வெங்கடேசன் அவர்களை விசாரணை செய்ய கோர்ட்டார் அனுமதி கேட்கிறேன்."

"யெஸ்"

"டாக்டர் வெங்கடேசன், டாக்டர் வெங்கடேசன், டாக்டர் வெங்கடேசன்."

புத்தகத்தின் மேல் கை வைத்து உறுதிமொழி எடுத்துக் கொண்ட பிறகு பப்ளிக் பிராசிகியூட்டர் கையில் வைத்திருந்த கண்ணாடியை அணிந்து கொண்டு, சேதுவின் வாக்குமூலத்தைக் காட்டி...

"டாக்டர் வெங்கடேசன், இது உங்க கையெழுத்துதானே?"

"ஆமாம்."

"இந்த மரண வாக்குமூலத்திலே என்ன எழுதப்பட்டிருக்குன்னு உங்களுக்குத் தெரியுமில்லே?"

"தெரியாது!"

பப்ளிக் பிராசிகியூட்டர், பார்வையாளர் பகுதியில்

அமர்ந்திருந்த பாரதி இருவரும் திக்கென்று அதிர்ந்தார்கள்.

"என்ன டாக்டர், சரியாச் சொல்லுங்க. சேது மரண வாக்குமூலம் கொடுத்தப்போ பக்கத்திலே இருந்திருக்கீங்க. டாக்டர் பாரதி அவர் சொல்லச் சொல்ல எழுதி, மறுபடி படிச்சிக் காட்டியிருக்காங்க. நீங்களும் சாட்சிக் கையெழுத்து போட்டிருக்கீங்க. இப்ப தெரியாதுன்னு சொன்னா எப்படி?"

"நடந்த உண்மையை விபரமா சொல்லிடறேன் சார். சேதுவுக்கு ரெண்டாவது தடவை சுயநினைவு வந்ததும் டாக்டர் பாரதி வாக்குமூலம் வாங்க தயாரானாங்க. ஏழாம் நம்பர் வார்டுல வயத்தில ஆபரேஷன் செய்யப்பட்ட ஒரு பேஷண்ட்டுக்கு தூக்க ஊசி போட்டுட்டு வந்துடுங்க டாக்டர்ன்னு சொன்னாங்க. நானும் போய்ட்டு வந்தேன். நான் திரும்பி வந்தப்போ வாக்குமூலம் முழுக்க எழுதி முடிச்சிருந்தாங்க. என்னை சாட்சிக் கையெழுத்து போடச் சொன்னாங்க. நான் தயங்கினேன். சேது வாக்குமூலம் சொன்னப்ப நான் இல்லையே, எப்படி போடறதுன்னு கேட்டேன். பரவாயில்லை, போடுங்க, முரண்டு பண்ணா உங்க மேல பொய்யா சில நடவடிக்கைகள் எடுத்து சஸ்பெண்ட் பண்ணுவேன்னு மிரட்டினாங்க. நான் வேற வழியில்லாம கையெழுத்து போட்டேன்."

பாரதி இமைகள் மூடாமல் விக்கித்து அமர்ந்திருந்தாள்.

அடுத்த சாட்சியான நர்ஸ் விமலா:

"நானும் உண்மையைச் சொல்லிடறேங்க. சேதுவுக்கு மயக்கம் தெளிஞ்சதும், என்னை அவசர அவசரமா வெளில அனுப்பி ஒரு ஊசி மருந்து எடுத்துட்டு வரச் சொன்னாங்க பெரிய டாக்டரம்மா. நான் வந்ததும் எழுதி முடிச்சிருந்த வாக்குமூலத்தில கையெழுத்து போடச் சொன்னாங்க. போடலைன்னா வேலையை விட்டு நிறுத்திடுவேன்னு மிரட்டினாங்க. அந்த வாக்குமூலத்தில என்ன எழுதியிருக்குன்னே



எனக்கு தெரியாதுங்க."

கேஸ் டமால் என்று கீழே விழுந்து சிதறியது.

"சேதுவின் மரண வாக்குமூலத்தை இந்த கோர்ட் நிராகரிக்கிறது. அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஏ.ஆர்.பி.யின் மீது தொடரப்பட்டுள்ள வழக்கும் தள்ளுபடியாகிறது. பொறுப்பற்ற முறையில் திட்டமிட்டு பழிவாங்கும் முயற்சியில் ஈடுபட்டதோடு, கோர்ட் நேரத்தையும் வீணடித்த டாக்டர் பாரதியை இந்தக் கோர்ட் வன்மையாகக் கண்டிக்கிறது. அவரை வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்து முறையான விசாரணை நடத்துமாறு மருத்துவத் துறைக்கு கோர்ட் சிபாரிசு செய்கிறது."

கோர்ட் வாசலில்...

ஏ.ஆர்.பி.க்கு மாலை மேல் மாலை போட்டார்கள்.

அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு பாரதியிடம் வந்தான் ஏ.ஆர்.பி.

ரகசியக் குரலில் பேசினான்.

"சொல்லலை? நான் விலாங்கு மீனுன்னு. பார்த்தியா? கோர்ட்ல மாட்டியிருந்த காந்தித் தாத்தாவைப் பார்த்துக்கிட்டே என்னமா சாட்சி சொன்னாங்க! டாக்டர் வெங்கடேசன் புத்திசாலி. விமலாவுக்கு தன் தாலி கழுத்தில தொங்கணுமேன்னு பயம். எல்லாரும் உன்னை மாதிரியே வர்ற வாய்ப்பை உதறி விடற ஏமாளியாவா இருப்பாங்க? உன் திமிரு ஒரு பத்து பர்சென்ட் குறைஞ்சிருக்குமா? மிச்சம் தொண்ணூறு பர்சன்ட் இருக்கே... அதையும் குறைச்சிடறேன். போம்மா. போ."

கனத்த இதயத்துடன் மௌனமாக வெளியே நடந்தாள் பாரதி.

* * * *

முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள் பாரதி.

கைகளை வீசிக் கோபமாய் பேசினான் கிருஷ்ணன்.

''நேர்மை, நேர்மைன்னியே... என்ன ஆச்சி? மூஞ்சில கரியை பூசிட்டான். கோர்ட் உன்னை கண்டிக்குது. அத்தனை பேர் முன்னிலையில அவமானம்! நடந்த உண்மை உனக்கு மட்டும்தான் தெரியும். ஊர் எதை நம்பும்? கோர்ட் சொன்னதைத்தான் நம்பும். உன்னைப் பத்தி என்ன பேசுவாங்க? தேவைதானா? டிபார்ட்மெண்ட்லேர்ந்து இன்னைக்கோ நாளைக்கோ சஸ்பென்ஷன் ஆர்டர் வரும். உங்களை ஏன் வேலையை விட்டு நீக்க கூடாதுன்னு கேள்வி கேப்பான். என்ன பதில் சொல்வே?''

''கிருஷ்... ப்ளீஸ்... நான் நொந்து போயிருக்கேன்.''

''இல்லை கண்ணம்மா. எனக்கு உன்மேல கோபம் இல்லை. உலகத்தை புரிஞ்சுக்க மாட்டேங்கிறியேன்னுதான் வருத்தப்படறேன். அவன் ரௌடின்னு தெரியும். எதுக்கு விவகாரம் வச்சிக்கணும். சொல்லு.''

''கிருஷ். என் கடமையைத்தானேப்பா நான் செஞ்சேன்?''

''அதுக்குத்தான் பரிசு தந்திருக்காங்க - சஸ்பெண்ட் பண்ணச் சொல்லி சிபாரிசு!''

''அவ்வளவுதானே? டாக்டர் தொழிலை நான் வருமானத்துக்காக தேர்ந்தெடுக்கலை கிருஷ். சேவை செய்ற வாய்ப்பு அதிலே இருக்கிறதாலே தேர்ந்தெடுத்தேன். வருமானம் ரெண்டாம்பட்சம்தான். வேலையை விட்டே அனுப்பட்டுமே. எனக்குக் கவலை இல்லை. அரசாங்க உத்தியோகத்தில இருந்துகிட்டுதான் சேவை செய்ய முடியுமா?''

''பாரதி, இது மானப் பிரச்னை. யாரையாச்சும் பார்த்து, எதையாச்சும் கொடுத்து இந்த ஆர்டரை கேன்சல் பண்ணிக் காட்டணும்.''

''கிருஷ்!'' என்று கத்தினாள். ''இத்தனை நாள் பழகியும் என்னை நீ இவ்வளவுதான் புரிஞ்சுக்கிட்டிருக்கியா? அதைவிட கேவலம் வேற



இல்லை.''

''உன்னைக் குற்றவாளி மாதிரி கேள்வி கேப்பாங்க.''

''அந்த சந்தர்ப்பம் வர்றப்போ தெளிவா சொல்வேன். என் மனசாட்சிப்படி உண்மையா நடந்துக்கிட்டேன்னு.''

''பாரதி. ப்ளீஸ் பி பிராக்டிகல். மனசாட்சியை யார் பார்க்கிறா. மனிதசாட்சிதான் எதையும் தீர்மானிக்குது. பட்டும் நீ புரிஞ்சுக்கலையா?''

''கிருஷ். என்னைத் தனிமையில விடு. குழப்பாதே. குறுக்கு வழி யோசனை எதுவும் சொல்லாதே. ஏத்துக்க மாட்டேன். சத்தியம் என்னைக்கும் சாதிக்கும்.''

''அப்படின்னு பகவத்கீதையில வருதா? எப்படியோ போ. சரி, அங்கே தஞ்சாவூருக்கு வந்துடேன் லீவு போட்டுட்டு. மனசாவது மாறும்.''

''சஸ்பெண்ட் செஞ்சி உத்தரவு வந்தா, வர்றேன்.''

''அவன் மறுபடி தொல்லை கொடுக்கப் போறான். ஜாக்கிரதை.''

''என்னை அவமானப்படுத்தணும்னு நினைச்சான். சாதிச்சுட்டான். அவன் வெறி அடங்கிப் போச்சி கிருஷ்'' என்றாள் பாரதி.

* * * *

''அடங்காதுடா... அடங்காது. என் வெறி அடங்காது- இன்னும் ஊத்து.'' என்று மற்றொரு கிளாஸ் பிராந்தி முழுங்கினான் ஏ.ஆர்.பி.

ஊற்றிக் கொடுத்த ஜேம்ஸ், ''பொம்பளைங்க. போதுங்க. விட்டுடலாம்.''

''பரிஞ்சி பேசினே பல்லைப் பேத்துடுவேன் ராஸ்கல். ஆறுநாள் ஜெயில்ல இருந்தேண்டா, என் சொத்தென்ன, வசதி என்ன, ஆள் படை என்ன, செல்வாக்கு என்ன? விசாரணைக் கைதின்னாலும் கைதி தானடா? ரெண்டு தடவை அவளைக் கெஞ்சிக்கிட்டுப் போய் நின்னேன். எடுத்தெறிஞ்சி பேசிட்டா. என்ன திமிரா எதிர்த்துப் பேசினா! ஜேம்சு...

அவ திமிரை அடக்கணும்டா."

"சரி, என்ன செய்யலாம் சொல்லுங்க செஞ்சிடறேன்."

"அவளைப் பத்தி சப்ஜாடா ஜாதகம் இருக்கு நம்மக்கிட்டே. அவளைக் கையைக் காலை முறிக்கிறது பிரமாதமான வேலை இல்லைடா. ஜெயிலுக்குப் போனப்போ நான் குறுகிப் போனேனே. அப்படி அவ வாழ்க்கை பூரா குறுகிப் போகணும். கூசிப் போகணும். மனசுல விழற ஒவ்வொரு அடியும்... ஏ.ஆர்.பி.யை பகைச்சிக்கிட்டது தப்பு, தப்புன்னு நெத்தில அடிச்சிக்கணும் அவ."

மேலும் ஒரு கிளாஸ் ஏற்றிக் கொண்டான் ஏ.ஆர்.பி.

"அவன் பேரென்னடா?"

"யாருங்கய்யா?"

"அவளோட முறைப்பையன், பைக்குல வருவான், போவானே..."

"கிருஷ்ணனுங்க, தஞ்சாவூர்ல வேலை பார்க்கறான். இன்னிக்குக் கூட பைக் எடுத்துக்கிட்டு வந்திருக்கான். குவாட்டர்ஸ் வாசல்ல நின்னுது. வர்றப்ப பார்த்தேன்."

"அவனை நல்லாத் தெரியுமா உனக்கு?"

"தெரியுங்க."

"எந்திரிடா, எந்திரி. நம்ம லாரியை எடுத்துக்கிட்டுப் போய் ஊர் எல்லையில நில்லு. துரை பைக்குல வருவாரு. நல்லா அடையாளம் தெரியுமில்லை அவனை?"

"தெரியுங்க."

"அடையாளம் தெரியாதபடிக்கு பைக்கோட வச்சி ஒரு தேய்ப்பு தேச்சிடு"

"அய்யா!"

"வேர்ல வெட்ட வெட்ட மரம் சாயும்டா மண்டு! அவ வாழ்க்கையில இனிமே நல்ல சமாச்சாரமே கிடையாது. நீ போ. நான் சொன்னதைச் செய்யி."

ஜேம்ஸ் ஒரு வினாடிதான் தயங்கினான். அடுத்த வினாடி உத்தரவுக்குக் கட்டுப்பட்டு எழுந்தான். விரைவாக நடந்தான்.



இளம் விதவையின் மனநிலை போல வானம் இருட்ட ஆரம்பித்தது.

*   *   *   *

"அப்போ நான் புறப்படட்டுமா?" என்று ஹெல்மெட்டை எடுத்துக் கொண்டான் கிருஷ்ணன்.

"போய்ட்டு வா. வண்டியை விரட்டாதே. மெதுவாவே போ."

கிருஷ் ஹெல்மெட் அணிந்து பைக்கில் அமர்ந்து, பாக்கெட்டுகளில் தொட்டுப் பார்த்தான்.

"என்ன தேடறே?"

"என் மணிபர்ஸ்."

"முகம் கழுவிக்கப் போனப்போ எடுத்து மேஜை மேல வச்சே. திரும்ப எடுத்துக்கலையா? இரு. எடுத்துட்டு வர்றேன்."

திரும்ப எடுத்து வந்தவள், "இதென்ன காகிதம்?" என்று விரிக்க... அவளிடமிருந்து அவசரமாகப் பிடுங்கி மடித்து பர்சுக்குள் வைத்துக் கொண்டான்.

"என்ன இது சஸ்பென்ஸ்?"

"ஒண்ணுமில்லை. ஆஃபீஸ்ல சும்மா இருக்கிறப்போ உன்னைப் பத்தி ஒரு கவிதை எழுத ஆரம்பிச்சேன். பாதிதான் எழுதினேன்."

"எப்ப கவிஞரானே? எங்கே? பார்க்கலாம்."

"ம்கூம். மிச்சத்தையும் முடிச்சி காமிக்கிறேன். வரட்டுமா?"

"சரி, என்னை நினைச்சி கவலைப்படாதே கிருஷ். எனக்கு ஒண்ணுமில்லை. அம்மாகிட்டே எந்த விஷயமும் சொல்ல வேணாம்."

"சரி, குட் நைட்" என்று புறப்பட்டான்.

புதுப்பேட்டையின் சின்ன கடைத் தெருவைத் தாண்டினதுமே ஊர் எல்லை. தஞ்சாவூர் நோக்கிச் செலுத்தினான்.

*   *   *   *

ஊர் எல்லையில் ஒரு அய்யனார் கோயில். அதைத் தாண்டி வரிசையாய் புளிய மரங்கள். அதைத்

தாண்டி உடைந்த பாலம். அதைத் தாண்டி ஸ்டார்ட் ஆன எஞ்சினுடன் லாரி. லாரியில் ஜேம்ஸ்.

தூரத்தில் சூரியன் அம்பேல் ஆகியிருக்க, மங்கிய வெளிச்சத்திலும் சிவப்பு ஹெல்மெட் வைத்துக் கொண்டு அய்யனார் கோயிலைத் தாண்டி லாரியை நோக்கி வந்து கொண்டிருந்த கிருஷ்ணனை சுலபமாக அடையாளம் காண முடிந்தது ஜேம்ஸால்.

ஜேம்ஸ் கியர் மாற்றினான்.

பனிரெண்டாவது வினாடியில் லாரி அலாக்காக பைக்கைத் தூக்கி எறிந்தது. தொம் என்று விழுந்தான் கிருஷ்ணன். கபாலம் பிளந்தான். ரத்தமாய் பரவினான். கடைசி வார்த்தைக்குக் கூட சந்தர்ப்பம் இல்லை.

லாரி புழுதி கிளப்பி மறைந்து போனது.

கிருஷ்ணனிடமிருந்து பறந்து போன மணிபர்ஸில் இருந்து வெளிப்பட்ட காகிதம் காற்றில் விரிந்தது. அந்த முழுமை அடையாத கவிதை வரிகள் வானம் பார்த்தன.

'என் கண்ணே,
உதட்டுக்கு உகந்த சாயமென்ன?
பார்ட்டிக்குக் காலணி என்ன கலர்?
இன்றைக்கு மேட்டினி என்ன படம்?
ரஜினியா, கமலா யார் உசத்தி?
டி.வி.தொடரில் எது போரஸ்ட்?
வாலஸ் லேட்டஸ்ட் படிச்சாச்சா?
என் நாய்க்கு ஜுரம் போயிடுமா?
இடுப்பு சதை குறைக்க நீந்தட்டுமா?
இன்னும் இது போல்
பெண்கள் கேட்க
எத்தனை இருக்கு -
பூமியில் கேள்விகள்?
ஏன் கண்ணே,
நீ மட்டும் விதிவிலக்காய்?
உன் கேள்விகளோ...'





## 12

செய்தி கேட்டு, பாரதி மயக்கமுற்றாள்.

புதுப்பேட்டை ஸ்டேஷனில் விபத்து கேஸ் பதிவாகி, மோதி விட்டுப் பறந்த லாரியைத் தேடினார்கள்.

விசாரித்தார்கள். விபத்தை நேராய்ப் பார்த்தவர் யாருமில்லை. லாரி சமர்த்தாய் குளித்து விட்டு ஏ.ஆர்.பியின் தோட்டத்தில் தூங்கிக் கொண்டிருந்தது.

ஜேம்சின் பாண்ட்டின் இரண்டு பாக்கெட்டுகளிலும் பிதுங்கப் பிதுங்க நூறு ரூபாய் காகிதங்கள்.

''இது போதாதுடா அவனுக்கு'' என்று கொக்கரித்தான் ஏ.ஆர்.பி.

★ ★ ★ ★

மூன்றாம் நாள்.

ஆஸ்பத்திரியில் தன் மேஜையில் சோர்வாய் அமர்ந்திருந்த பாரதி போன் எடுத்தாள்.

''ஹலோ, இன்ஸ்பெக்டர், என்ன ஆச்சி? அந்த லாரியைக் கண்டுபிடிச்சிங்களா?''

''முயற்சி பண்ணிக்கிட்டிருக்கோம். நடந்த விபத்து...''

''வெய்ட், நடத்தப்பட்ட விபத்து... யெஸ், இட் வாஸ் எ ப்யூர் மர்டர். உங்க ரிப்போர்ட் படியே பைக்கை அவ்வளவு தூரம் தூக்கி அடிக்கணும்னா லாரி எண்பது கிலோ மீட்டர் வேகத்தில வரணும். உடைஞ்ச பாலம் பக்கத்திலே இருக்கு. அதனால எந்த லாரிக்காரனும் அந்த எடத்தில அம்பதுக்கு மேல வர மாட்டான்.''

''டாக்டரம்மா, சஸ்பென்ஷன் ஆர்டர் வந்துடுச்சின்னா பேசாம ஸ்டேஷனுக்கு வந்து நீங்களே லாரி கண்டு பிடிக்கிற வேலையிலே

இறங்கறீங்களா?''

''இன்ஸ்பெக்டர்!''

''சுத்தாதீங்க. உங்க பூகம் எல்லாம் எங்களுக்குச் சொல்ல வேணாம். எங்களுக்கு அரசாங்கமே பயிற்சி எல்லாம் தந்திருக்கு. முறைப்படி நடந்துக்குவோம். உங்களுக்காக ஸ்பெஷல் படை போட முடியாது. வச்சிரட்டுமா?''

ச்சே! ஏன் எல்லோரும் சேர்ந்து இப்படி என்னை அம்பால் குத்துகிறார்கள்? நான் என்ன பாவம் செய்தேன்? யார் குடியைக் கெடுத்தேன்? யார் சொத்தைப் பறித்தேன்? ஏன் என் சந்தோஷச் சிறகுகள் இப்படிப் பிய்க்கப் படுகின்றன?

நாற்காலியை விட்டு எழுந்தாள்.

குவார்ட்டர்சுக்கு வந்து கட்டிலில் விழுந்து கொஞ்சம் குமுறி அழுதாள்.

கிருஷ், மை டியர் கிருஷ், என்னால்தான் உனக்கு இந்தக் கோர முடிவா? உன் சாவுக்கு என் நேர்மை தான் காரணமா? ஸ்வீட் கிருஷ், உண்மைதானா? நீ இறந்து விட்டது உண்மைதானா? இனி வரப் போவதே இல்லையா? என்னைப் பார்க்கப் போவதே இல்லையா? பேசவே மாட்டாயா? கீழ் வரிசையில் தெற்றுப் பல் தெரியச் சிரிக்கும் அந்தச் சிரிப்பை இனி பார்க்கவே மாட்டேனா?

நினைக்க, நினைக்க அழுகை அதிகரித்தது.

''பாரதி, என்னைச் சட்டா சட்டுக்கங்கடான்னு பேசாம இருந்துடுவேன். உன்னை நான் என் உயிரை விட மேலாதான் நினைக்கிறேன்.''

கிருஷ், நீயா இறந்து விட்டாய்?

''பாரதி, நீ பக்கா ஜெண்டில்வுமனா இருக்கிறது, நடத்துக்கிறது பாராட்ட வேண்டிய விஷயம்தான். பாதிக்கப்பட்டவங்களோட கோபத்தால உனக்கு எந்தப் பிரச்னையும் வந்துடக்கூடாதுங்கிறதுதான் என் கவலை.''

கிருஷ், நீயா இறந்து விட்டாய்?

''இல்லை கண்ணம்மா, எனக்கு உன்மேல கோபம் இல்லை. உலகத்தைப் புரிஞ்சுக்க



மாட்டேங்கறியேன்னுதான் வருத்தப்படறேன்.''

கிருஷ், நீயா இறந்து விட்டாய்?

''ஆஃபீஸ்ல சும்மா இருக்கிறப்போ உன்னைப் பத்தி ஒரு கவிதை எழுத ஆரம்பிச்சேன். பாதிதான் எழுதினேன். மிச்சத்தையும் முடிச்சி காமிக்கிறேன்.''

முடிக்காமலேயே போய் விட்டாயே கிருஷ்? முழுமையடையாத அந்தக் கவிதைப் போலவே உன் வாழ்க்கையும் இப்படிப் பாதியிலேயே...

பாரதி நூறு தடவைப் படித்துவிட்ட அந்தக் கவிதையை மீண்டும் எடுத்துப் படித்தாள்.

உன் கேள்விகளோ...

என்ற வரிக்குக் கீழே பேனா எடுத்து எழுதினாள்.

என்ன பாவம் செய்தேன்?

எதற்காக இந்த தண்டனை?

கதவிடுக்கு வழியே ஒரு கடிதம் வந்து விழுந்தது. சிந்தனை கலைந்தாள்.

எழுந்து சென்று எடுத்துப் பிரித்தாள்.

ஆழ்ந்த அனுதாபங்கள் - ஏ.ஆர்.பி - என்ற ஒற்றை வரி.

சந்தேகமே இல்லை, ஏ.ஆர்.பிதான் கிருஷைக் கொன்றது. ஈவு, இரக்கம் இல்லாத அந்த கல் நெஞ்சன் தான் இந்தக் காரியத்தை செய்தது.

யார் சாட்சி?

என்ன ஆதாரம்?

எதுவும் இல்லை. ஆனால் அவன்தான். அந்த அரக்கன்தான். சட்டத்தின் கண்களில் விரல் விட்டு ஆட்டும் இவனைத் தட்டிக் கேட்பது யார்? பிஸ்கெட் வீசினால் கவ்விக் கொள்ளும் நாய் வாலை ஆட்டாமல் கடிக்கவா வரும்? போலீசாவது, புடலங்காயாவது. கோர்ட்டாவது, நீதியாவது. மோதப் போகிற படை எதுவாயினும் பண அகழியில் விழுவது உறுதி. வீழ்த்துவது உறுதி.

சிந்திக்கச் சிந்திக்க உள்ளே ஒரு கோபப் புயல் மெல்ல மெல்ல உருவாக ஆரம்பித்தது. பற்களைக் கடிக்க வைத்தது. கண்களைச் சிவக்க வைத்தது. இதயத்தை இறுக வைத்தது.

கால்களை நடக்க வைத்தது.

* * * *

ஏ.ஆர்.பியின் வீட்டுக்குள் நுழையும் முன் தடுத்தவனை, ''கையை எடுடா. எங்கடா உன் முதலாளி?'' என்று கேட்டாள் பாரதி.

''ஸார் இல்லை.''

''டேய்! ஏன்டா பொய் சொல்றே. நான் இங்கேதான் இருக்கேன். அவளை உள்ளே விடு...'' என்று வீட்டுக்குள் கால்களை அகட்டி நின்ற ஏ.ஆர்.பி சொல்ல...

மார்பு படபடக்க உள்ளே வேகமாக வந்து நின்ற பாரதி, ''தூ!'' என்றாள். ''நீ ஒரு ஆம்பளையாடா? என்மேல கோபம்னா என்னோட மோத வேண்டியதுதானேடா? கிருஷ்ணன் என்ன தப்புடா செஞ்சான்? அவனை ஏன்டா கொன்னே? சொல்லுடா. பதில் சொல்லுடா...''

பாரதி ஆவேசம் வந்தவளாய் ஏ.ஆர்.பியின் சட்டையைப் பிடித்து உலுக்கினாள். அவனோ அமைதியான புன்சிரிப்புடன் அப்படியே நின்றான்.

''ம். அப்புறம்?'' என்றான்.

''உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாதுங்கற திமிர்ல தானே கிருஷ்ணனைக் கொன்னே? அப்பாவிடா, கள்ளம், கபடம் தெரியாதவன்டா. அவனை ஏன்டா கொன்னே?''

''இதோ கிடந்து துடிக்கிறியே.... இதுக்காகத்தான். நான் தான் சொன்னனே, நல்ல பாம்பைச் சீண்டக் கூடாதுன்னு. நீ சீண்டினே. இப்ப படறே. இன்னொரு வேடிக்கை பாரு இதிலே. நானே உன்னை இங்கே நம்ம வீட்டுக்குக் கொண்டாரணும்னு நினைச்சேன். எப்படிடா கொண்டார்றதுன்னு யோசிச்சேன். நீயே வந்துட்டே... உன்னோட திமிரு இப்ப ஒரு அம்பது பர்சன்ட் குறைஞ்சிருக்குமா? மிச்சம் அம்பது இருக்குமா? அதையும் குறைக்க வேணாம்?''

திக்கென்று அதிர்ந்தாள் பாரதி.

தான் இப்படி வந்தது தப்பென்று உடனே உணர்ந்தாள். சூழ்நிலையின் அபாயத்தை கணித்தாள்.



உடனே வாசலுக்கு நடந்தவள் திகைத்தாள்.

வாசல் கதவுகள் தாழிடப்பட்டு அதன் அருகே இரண்டு தடியர்கள் கைகட்டி நின்றார்கள்.

''ரத்னம், நான் மாடிக்குப் போயி படுக்கையில சென்ட் தெளிச்சி வைக்கிறேன். என்ன?'' என்று விட்டு ஏ.ஆர்.பி மாடிக்குச் செல்ல,

''நோ'' என்று கத்தினாள் பாரதி.

பாதிப் படிகளில் நின்று திரும்பின ஏ.ஆர்.பி, ''டாக்டரம்மா, எவ்வளவு செத்த உடம்புகளை நீ பரிசோதனை பண்ணியிருக்கே. உன் உடம்பை உயிரோட வச்சி நான் பரிசோதனை பண்ணிடறேன். முதல் தடவை பார்த்தப்பயே வச்ச புள்ளி. இன்னைக்குத்தான் கோலம் போடப் போறேன். சமர்த்தா வந்தாலும் சரி, சத்தம் போட்டு சடுகுடு ஆடிட்டு வந்தாலும் சரி...''

பாரதி பின்பக்கம் நோக்கி ஓடினாள். கூச்சலிட்டாள்.

உடனே தடுக்கப்பட்டாள். அறையப்பட்டாள். கீழே தள்ளப்பட்டாள். திமிறத் திமிற இரண்டு பேரால் அள்ளப்பட்டாள்.

''இந்த மாதிரி சந்தர்ப்பத்துக்காகத்தானே வீட்டை ஒதுக்குப்புறமா கட்டி வச்சிருக்கேன்'' என்று விட்டு மாடியில் தன் படுக்கையறைக்குள் நுழைந்தான் ஏ.ஆர்.பி.

அவளைத் தூக்கி வந்தவர்கள் கட்டிலில் கிடத்தி அமுக்கிப் பிடித்துக் கொள்ள...

''என்னமா டாக்டரு, நீ எத்தனை பேருக்கு ஊசி போட்டிருப்பே. உனக்கு ஒரு ஊசி போடறோம் பாரு... பிரமாதமா இருக்கும். ரத்னம்!''

ரத்னம் கப்போர்ட் திறந்து சிரிஞ்சும், ஊசி மருந்தும் எடுத்து..

''நோ! வேணாம். என்னை விட்டுடு. ப்ளீஸ்...''

''லட்ச ரூபா பெட்டில வச்சி நான் கெஞ்சினேன். நீ மட்டும் எதுவும் தராம கெஞ்சினா எப்படி?''

''என்ன வேணும் சொல்லு. தர்றேன். என்னை ஒண்ணும் செஞ்சிடாதே.''

''அய்யய்யே... அழுவறியே... உன்னைக் கொல்லப் போறதில்லைடி கண்ணு. என்னா நீதான் லஞ்சமா உன் கற்பை தரப் போறியே...''

''அய்யோ! வேணாம். வேணாம்.''

பாரதி தவித்தாள். துடித்தாள். கண்ணீர் பெருக்கினாள். கையெடுத்துக் கும்பிட்டாள். பயந்தாள். பரிதவித்தாள்.

இப்படியே இந்த வினாடியே இதயம் நின்று விடக்கூடாதா என்று ஏங்கினாள்.

ரத்னம் கையில் மருந்து ஏற்றப்பட்ட சிரிஞ்சுடன் அவளை நெருங்கினான்.

பாரதி கதறினாள். கெஞ்சினாள்.

''பாரதி கண்ணு. நீ கதறு. அலறு. எது வேணாலும் செய்யி. இது சினிமா இல்லை. கண்ணாடியை உடைச்சிகிட்டு வந்து குதிச்சி உன்னை எவனும் காப்பாத்தப் போறதில்லை. ஊசியைப் போடுறா. என்டா நிக்கிறே?''

பாரதியின் புஜத்தில் ஊசி குத்தப்பட்டது. மருந்து முழுவதும் உள்ளே செலுத்தப்பட்டது. சில வினாடிகளில் அவளின் எதிர்ப்பு குறைந்தது. கண்கள் செருகின. உடல் துவண்டது. முழுமையான மயக்கத்தில் ஆழ்ந்தாள்.

''நீங்கல்லாம் போகலாம்.''

போனபின் கதவைச் சாத்திவிட்டுச் சட்டையைக் கழற்றினான் ஏ.ஆர்.பி. படுக்கையை நெருங்கினான்.

பாரதியின் அருகில் அமர்ந்தான். சேலையின் தலைப்பைத் தொட்டான்.

*  *  *  *

பாரதி விழித்த போது...

தான் நிர்வாணமாய் இருப்பதை உணர்ந்தாள்.

பதறி எழுந்து படுக்கையின் பெட்ஷீட்டை அள்ளி அப்படியே சுற்றிக் கொண்டாள். தான் சேதப்பட்டிருப்பதை உணர்ந்தாள்.

''ஓ'' என்று குமுறி அழுதாள். நெற்றியில் அடித்துக் கொண்டாள். மேலும் அழுதாள்.



ஒரு எல்லையில் அழுகை சட்டென்று உறைந்தது.

கண்களில் ஒரு வெறிப்பு ஏற்பட்டது.

கதவு திறக்கப்பட்டதும், ஏ.ஆர்.பி. உள்ளே வந்த போதும், எதிர் சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பாடம் செய்யப்பட்டிருந்த புலியின் தலையில் அவள் பார்வை நிலைத்திருக்க... சலனமற்று அமர்ந்திருந்தாள்.

ஏ.ஆர்.பி. புன்னகையுடன் கட்டிலில் அமர்ந்தான். அவள் முகத்திற்கு முன் சொடக்கு போட்டான்.

''என்ன இப்படியே விரக்தியா உக்கார்ந்துட்டா எப்படி? சரி, ஆனது ஆய்டுச்சி. இப்போ அடுத்து என்ன செய்யலாம்னு யோசிம்மா கண்ணு.''

அப்படியே மாறாமல் அமர்ந்திருந்தாள்.

''மனசு பாபரக்குதா? என்னைக் குத்தி கொல்லணும் மாதிரி இருக்கா? முடியாது உன்னால. இப்போ நீ ஒரு பெரிய சைபர். இப்போ நீ மூணு விதமா முடிவுகள் எடுக்கலாம். என்னென்னு கேளு.''

பேசாமல் பார்வை விலகாமல் அமர்ந்திருந்தாள்.

''கேக்க மாட்டியா? வேணாம். நானே சொல்றேன். முதலாவது அவசரமான முடிவு. அதாவது நேரா போலீஸ் ஸ்டேஷன் போயி இன்ஸ்பெக்டர் அய்யா, இன்ஸ்பெக்டர் அய்யா, இந்த மாதிரி ஏ.ஆர்.பி. என்னை கற்பழிச்சுட்டான்னு புகார் சொல்றது. நீ மானமுள்ள பொம்பளை. இந்த ரகசிய அவமானம் இன்னும் ஊரெல்லாம் சந்தி சிரிக்கணும்னு விரும்ப மாட்டே. விரும்பினா, இந்த முடிவுக்கு உதவறதுக்காக ஏதோ என்னாலானது இந்தா பேப்பரும், பேனாவும் - புகார் எழுதறதுக்கு.''

ஏ.ஆர்.பி. மடக்கப்பட்ட பேப்பரையும், அதில் செருகியிருந்த பேனாவையும் படுக்கை மேல் வைத்தான்.

பாரதி திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

''ரெண்டாவது முடிவு - புத்திசாலிகள் எடுக்கற முடிவு. நீயோ சிவப்பா, அழகா இருக்கே. நானோ உன்னை ஒரு தடவை தொட்டாச்சி. இனிமே நீ வேற

கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உன் நேர்மை மனசு குத்தும். அதனால நான் பிடிச்சிக் கொடுக்கிற வீட்டில தங்கிக்கோ. தனியா வைத்தியத் தொழில பார்த்துக்கோ. மாச செலவுக்கு பணம் தர்றேன். நிறையவே தர்றேன். அப்பப்போ வந்து போய்க்கிறேன். இந்த முடிவுக்கு நீ சம்மதிப்பியா? சந்தேகம்தான். ஒருவேளை சம்மதிச்சா ஒரு அட்வான்ஸ் மாதிரி இந்த பணத்தை எடுத்துக்கலாம் நீ.''

ஏ.ஆர்.பி. அந்த புது ஐம்பது ரூபாய் நோட்டுக் கட்டை படுக்கையில் வைத்தான்.

பாரதி சிலையைப் போல் இருந்தாள்.

''மூணாவது முடிவு உணர்ச்சிப் பூர்வமான முடிவு. மயிர்நீப்பின் உயிர் வாழா கவரிமான் ஜாதி முடிவு. அதாவது தற்கொலை. அதுக்கும் உனக்கு உதவறதுக்காக நானே விஷம் வாங்கி வச்சிருக்கேன் பாரு. தரமான விஷம். குடிச்ச ஒரு மணி நேரத்தில ரத்ததுல கலந்துடும். நீட்டிப் படுத்து நிரந்தரமா தூங்கிடலாம். இதை நீ இங்கேயே குடிச்சாலும் சரி. உன் வீட்டுக்கு எடுத்துப் போயி குடிச்சாலும் சரி. கோர்ட் தீர்ப்புல ஏற்பட்ட அவமானம் தாங்காம, இல்லைன்னா உயிரா காதலிச்ச முறைப்பையன் செத்தது தாங்காம தற்கொலை பண்ணிக் கிட்டதாத்தான் ஊர் பேசும். பேச வைப்பேன்.''

ஏ.ஆர்.பி. அந்த சின்ன விஷ பாட்டிலை பையிலிருந்து எடுத்து படுக்கையில் வைத்தான்.

பாரதி அப்போதும் திரும்பிப் பார்க்கவில்லை.

''ஏய், என்ன இது. நான் பேசிக்கிட்டே இருக்கேன்... பதிலைக் காணோம்? அப்படியே செத்துக்கித்து தொலைச்சிட்டியா?''

அவள் முறைப்பாய் ஒரே ஒரு தடவை அவனைத் திரும்பிப் பார்த்து விட்டு மறுபடியும் புலியின் தலையைப் பார்க்க....

''உயிரோடதான் இருக்கே. நான் சொன்னதெல்லாம் கேட்டுக்கிட்டியா? சட்டு புட்டுன்னு ஒரு முடிவுக்கு வந்து வெளியே போ.



எனக்கு வேற ஜோலி ரெஸ்ட் அவுஸ்ல காத்திருக்கு. வரட்டுமா?''

ஏ.ஆர்.பி. அறையை விட்டு வெளியேறினான்.

வாசலில் நின்றிருந்த ஜேம்சிடம், ''அவ ரூமை விட்டு எப்ப போறாளோ போகட்டும். ஆனா ரூமுக்குள்ளே அடிக்கடி எட்டிப் பார்த்துக்க. என்ன செய்றான்னு எனக்கு ரெஸ்ட் ஹவுசுக்கு போன் செஞ்சி சொல்லு'' என்று விட்டுப் படியிறங்கினான். காரில் ஏறிப் புறப்பட்டுச் சென்றான்.

* * * *

பாரதி நிலை மாறாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். படுக்கை மேல் வைக்கப்பட்டிருந்த பொருள்களைப் பார்த்தாள். படுக்கையிலும், தரையிலும் சிந்தியிருந்த பூக்களின் இதழ்களைப் பார்த்தாள். வளையல் ஒன்று உடைந்து கையில் கீறியிருந்த காயத்தைப் பார்த்தாள்.

மகாத்மா காந்தி எழுதின புத்தகத்தில் படித்த வரிகள் கண் முன் பெரிய எழுத்துக்களில் கவர் முழுக்க வரி வரியாய் நின்றன.

'நான் பெண்களுக்குச் சொல்லுவது இதுதான். உன்னை ஒருவன் பலாத்காரமாகக் கற்பழிக்க முயலும் போது, உனக்கு நான் அகிம்சையை உபதேசிக்க மாட்டேன். அந்த மனித மிருகத்தை எதிர்த்து நீ எந்த ஆயுதத்தையும் பிரயோகிக்கலாம். உன்னிடம் ஆயுதம் எதுவும் இல்லாமலிருந்தால் இயற்கை உனக்குத் தந்திருக்கும் பற்களும், நகங்களும் எங்கே போயின? இந்த நிலைமையில் நீ செய்கிற கொலையோ, அது முடியாத போது நீ செய்து கொள்கிற தற்கொலையோ ஒரு பாபமாகாது.'

தேசப் பிதாவே, நன்றி! முயல்வதற்கே இந்த தண்டனையெனில் முடித்ததற்கு?

நான் செய்து கொள்ளப் போவது தற்கொலையே. ஆனால் ஒரு கொலைக்கும் நீங்கள் அனுமதியளித்திருக்கிறீர்கள்.

அதையும் நிறைவேற்றப் போகிறேன்.

அதற்காக என்னிடம் உள்ள ஒரே ஆயுதம் மூளை.

நான் சொல்லப் போவது ஒரே ஒரு பொய். அதற்காக என்னை மன்னியுங்கள். சட்டத்தை தன் காலடியில் மிதியடியாய் உபயோகிக்கும் இவனை அதே சட்டம் நகர முடியாத படிக்கு நழுவ முடியாத படிக்கு கவ்வ வைக்கப் போகிறேன்.

பாரதி எழுந்தாள். சற்றுத் தள்ளி கீழே கிடந்த தனது உடைகளை அள்ளிக் கொண்டாள். இணைந்திருந்த குளியலறை சென்று உடுத்திக் கொண்டாள்.

திரும்ப வந்தாள்.

ஜேம்ஸ் - பாரதி என்ன செய்கிறாள் என்று எட்டிப் பார்த்தான்.

அவனுக்கு முதுகு காட்டின பாரதி குனிந்து தன் சேலையைப் போட்டு கைரேகை படாமல் விஷபாட்டிலை எடுத்தாள். பெயர் படித்துப் பார்த்தாள்.

உண்மை. ஒரு மணிநேரத்தில் ரத்தத்தில் இணைந்து உயிரை வெளியேற்றும் விஷம்!

மூடியைக் கழற்றினாள்!

ஒரு வினாடி கண் மூடினாள். அப்பா முகம் தெரிந்தது. அம்மா முகம் தெரிந்தது. கிருஷ் முகம் தெரிந்தது.

மடக்கென்று வாயில் கவிழ்த்து விழுங்கினாள். காலி பாட்டிலை அறையின் ஓரத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் வீசினாள்.

ஜேம்ஸ் அதிர்ந்து நின்றான்.

அறையை விட்டு வெளிப்பட்டு அவனிடம் நிதானித்து சொன்னாள்.

''உங்க அய்யாவோட விருப்பப்படி விஷம் சாப்பிட்டுட்டேன். நிரந்தரமா போய்ச் சேர்ந்துடுவேன். சாகறப்போ என் சொந்த வீட்ல அம்மா மடியில கிடக்க விரும்பறேன். தஞ்சாவூர் போறேன். உங்க அய்யாகிட்டே நிம்மதியா இருக்கச் சொல்லு.''

அவள் விருட்டென்று வெளியேற...

கொஞ்ச நேரம் கலங்கி நின்றான் ஜேம்ஸ்.



பிறகு போனுக்கு ஓடி... ஏ.ஆர்.பி.க்கு விபரம் சொன்னான்.

''ரோஷக்காரிடா அவ! எனக்குத் தெரியும். அதே சமயம் கொஞ்சம் புத்திசாலிடா அவ. நீ அவ பின்னாடியே போ. செத்ததும் வந்து விபரம் சொல்லு.''

''சரிங்கைய்யா.''

ஜேம்ஸ் வீட்டை விட்டு வெளியேறி பஸ் ஸ்டாண்ட் வந்தான். பாரதியைக் காணோம். விசாரித்தான். 'தஞ்சாவூருக்கு அரை மணிக்கு முன்னால் போனது- அடுத்த பஸ் இன்னும் பதினைந்து நிமிடம் கழித்துதான்' என்றார்கள்.

இவள் பஸ் ஸ்டாண்ட் வராமல் எங்கே போனாள்? குழம்பினான். வீட்டிற்குப் போய் விட்டு வருவாள் என்று காத்திருந்தான்.

* * * *

டாக்ஸி வேகமாக விரைந்து கொண்டிருக்க... சோர்வாய் பின் சீட்டில் சாய்ந்திருந்த பாரதி, ''இன்னும் வேகமா போப்பா'' என்றாள்.

வயிற்றில், நெஞ்சில் சங்கடம் ஆரம்பித்திருந்தது.

உள்ளேப் போன விஷம் தன் தன்மையை ரத்தத்திற்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

* * * *

பத்து நிமிடம் காத்திருந்த ஜேம்ஸ் பக்கத்தில் இருந்த மோட்டார் சைக்கிள் மெக்கானிக் ஷெட்டிற்கு ஓடினான். ஒரு பைக்கை அனுமதியோடு எடுத்துக் கொண்டு, பாரதியின் குவாட்டர்சுக்குப் போனான்.

பூட்டியிருந்தது-

இங்கேயும் வரவில்லை.

பஸ் ஸ்டாண்டிற்கும் வரவில்லை.

ஒருவேளை டாக்ஸி பிடித்து...

உடனே டாக்ஸி ஸ்டாண்ட் வந்து விசாரித்து, பதைத்து தஞ்சாவூரை நோக்கி பைக்கை உச்ச வேகத்தில் விரட்டினான் ஜேம்ஸ்.

* * * *

தஞ்சாவூரின் எல்லையை கார் தொட்டதும்...

"எங்கே போகணும்மா?"

"நேரா செஷன்ஸ் கோர்ட்டுக்குப் போப்பா" என்று பாரதி கைக்குட்டையால் மூக்கைப் பொத்தியிருந்தாள். கைக்குட்டையை எடுத்துப் பார்க்க... அதில் ரத்தத்தின் முதல் துளி!

கோர்ட் கட்டிடத்திற்கு முன்னால் டாக்ஸி நின்றதும்,

பாரதிக்கு லேசான மயக்கம் வந்தது.

சமாளித்துக் கொண்டு இறங்கினாள். பணம் கொடுத்தாள். வேகமாக கொஞ்சம் தள்ளாட்டமுடன் நடந்தாள்.

கோர்ட் ஒரு வழக்கின் விசாரணைத் தீவிரத்தில் இருக்க...

நேராய் உள்ளே நுழைந்த பாரதி "சார்!" என்று உச்சக் குரலில் கத்திக் கொண்டே நீதிபதியின் மேஜையை நோக்கி ஓடி அதில் கவிழ்ந்து விழுந்த போது...

கோர்ட் ஸ்தம்பித்தது.

இப்போது அவள் வாயிலிருந்தும் ஒரு ரத்தக்கோடு வெளிப்பட்டிருக்க...

"என்னம்மா?" என்று பதறினார் நீதிபதி.

மயக்கத்தையும், தள்ளாட்டத்தையும் பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்து நிமிர்ந்த பாரதி, "சார், நான் டாக்டர் பாரதி. புதுப்பேட்டை ஏ.ஆர்.பி. மயக்க மருந்து கொடுத்து என்னை கற்பழிச்சுட்டான். அவன் கைப்பட விஷத்தை பலவந்தப்படுத்தி என்னைக் குடிக்க வச்சிட்டான். நேரா அவன் படுக்கையறையிலேர்ந்து தப்பிச்சு வர்றேன். என் வாக்குமூலத்தை எடுத்துக்கோங்க" என்பதை திணறித் திணறிச் சொல்ல...

நீதிபதி இதற்குள் காகிதம் எடுத்து அவள் சொன்னதை சரசரவென்று எழுதினார்.

"கொண்டாங்க. கையெழுத்துப் போடறேன். அவனை தண்டிங்க. இதோ நீங்க இத்தனை வக்கீலும் சாட்சி. இது என் மரண வாக்குமூலம். அவனை



தண்டிங்க... தண்டிங்க... தண்டிங்...

தடுமாறிக் கீழே விழுந்தாள் பாரதி.

நீதிபதி உடனே உத்தரவுகள் போட்டார். பாரதியை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்ல வைத்தார். போலீசை தொடர்பு கொண்டு புதுப்பேட்டை ஸ்டேஷனுக்கு தகவல் தந்து ஏ.ஆர்.பி.யின் படுக்கையறையை 'சீல்' வைக்கவும், அவனை உடனே கைது செய்யவும் ஏற்பாடுகள் செய்தார்.

தஞ்சாவூர் வந்த ஜேம்ஸ் பாரதியின் வீட்டுக்குச் செல்ல, அங்கே அவள் அம்மா இங்கே வரல்லையே என்று சொல்ல, எங்கே போனாள் என்று அவன் யோசித்துக் கொண்டிருக்க...

அவனைக் கடந்து போன ஆம்புலன்சில், ஸ்ட்ரெட்சரில் கிடத்தப்பட்டிருந்த பாரதி இரண்டு முறை ரத்த வாந்தி எடுத்து ஆஸ்பத்திரி போய்ச் சேர்ந்த போது...

பாரதியின் உயிர் அவளிடமிருந்து விடைபெற்றிருந்தது.

* * * *

ஏ.ஆர்.பி. கைது செய்யப்பட்டான்.

அவன் படுக்கையறையின் குப்பைத் தொட்டியில் இருந்து அவன் கைரேகையுடன் கூடிய விஷ பாட்டில் எடுக்கப்பட்டது.

பாரதியின் உடல் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டது.

பாட்டிலில் இருந்த மிச்ச விஷமும், அவள் ரத்தத்தில் கலந்த விஷமும் ஒன்று என்று லாபரட்டரி சத்தியம் சொன்னது.

பாரதியின் மரண வாக்குமூலம் பிரதானமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏ.ஆர்.பி.டெல்லி வரை எவ்வினான்.

ஒரு பத்திரிகை பாக்கியில்லாமல் பாரதியின் வழக்கை பத்தி பத்தியாய் எழுதியது.

38 நாட்கள் விசாரணை நிகழ்ந்தது.

நீதிபதி அவர்கள் தண்ணீர் குடித்து விட்டு மீதி தீர்ப்பை வாசித்தார்.

"ஆகவே, டாக்டர் பாரதி கொலை வழக்கில் ஏ.ஆர்.பி. என்றழைக்கப்படும் பீட்டரின் சார்பாக விசாரிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. டாக்டர் பாரதி இதே கோர்ட்டில் அறுபத்தி நான்கு வக்கீல்கள் மற்றும் என் முன்னிலையில் அளித்த மரண வாக்குமூலத்தை அவள் சுயநினைவுடன், அளித்ததாகவும், அது முழுக்க முழுக்க உண்மை என்றும் இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. டாக்டர் பாரதியின் வாக்குமூலத்திற்கு வலு சேர்க்கும் வகையில் போலீஸ் தரப்பு சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஏ.ஆர்.பி. என்றழைக்கப்படும் பீட்டர் இந்தக் கொலையைச் செய்தார் என்று இந்த நீதிமன்றம் திட்டவட்டமாகத் தீர்மானித்து... இ.பி.கோ.302 மற்றும் 376 பிரிவுகளின்படி குற்றவாளியை சாகும்வரை தூக்கில் தொங்க விடவேண்டும் என்று தீர்ப்பளிக்கிறேன்."

நீதிபதியின் தலைக்கு மேலே நான்கு மரச்சட்டங்களுக்குள் சிறைப்பட்ட மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. அவரின் பொக்கை வாய் புன்னகையில் இன்று ஒரு புதிய அர்த்தம் தெரிகிறது.

(முற்றும்)

'டையிங் டிக்ளரேஷன்' என்பது மரண வாக்குமூலம். மரண வாக்கு மூலம் என்பது சாகும் தருவாயில் உள்ள ஒரு நபர் கூறும் உறுதிமொழி அல்லது அறிக்கை. மரணத்திற்கு அருகே உள்ள ஒரு நபர் உண்மை மட்டுமே பேசுவார் என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் நீதி மன்றம் இந்த வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்கிறது.